திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

5 -SEP 1964

ஸ்ரீ நடராஜர் சிற்பம்
கங்கைகொண்ட சோழபுரம்.

மாலை 6] குரோதி ஆவணி - செப். 1964 [மணி 12

சென்னை அரசாங்க அறநிலையப்
பாதுகாப்புத் துறை வெளியீடு

சென்னை அய்யனூர்புரம் ஸ்ரீ கமல விநாயகர் கோயிலில், நமது அறநிலைய ஆணையர் திரு. M. S. சாரங்கபாணி முதலியார், B.A., B.L., அவர்கள், சொற்பொழிவு மண்டபத் திறப்பு விழாவிற் கலந்து கொண்டு சிறப்பித்தல்

பொருள் அடக்கம்

1. தாயுமான சுவாமிகள்
2. நுண்பொருட் கருத்து விளக்கம்
3. க்ஷேத்திர வெண்பா
4. தொண்டை நாட்டுத் திருப்பதி யநுபவம்
5. ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை
6. சிவஞான போதம்
7. யாதினும் இனியான்
8. இரண்டாம் திருமுறை
9. கீதா ஸாரம்
10. திருபுவனை வரதராசப் பெருமாள் கோயில் கல்வெட்டுச் செய்திகள்
11. தென் ஆப்பிரிக்காவில் திருவாசகமணி
12 திருக்கோயில் கட்டுரைப் பட்டியல்

ஆண்டுச் சந்தா ரூ. 10/-

தனி இதழ் விலை ரூ ஒன்று

சந்தா தாரர்களுககு வேண்டுகோள்

'திருக்கோயில்' இதழின் சந்தாதாரர்கள் ஆகச் சேர விரும்புபவர்கள், "திரு. ஆணையர் அவர்கள். அறநிலைய ஆட்சித்துறை, சென்னை. 34" என்னும் முகவரிக்கு ரூபா பத்து அனுப்பி, எப்போது வேண்டுமாயினும் சந்தாதாரர்கள் ஆகச் சேர்ந்து கொள்ளலாம்.

அல்லது, அவ்வவ் வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும், மேற்படி சந்தாத் தொகையைச் செலுத்திச் சேரலாம்.

ஓர் ஆண்டின் நடுவில் எந்தமாதத்திற் சேர்ந்தாலும், அடுத்த ஆண்டில் அந்த மாதம் வரையில், 12 இதழ்கள் அனுப்பப் பெறும்.

ஓர் ஆண்டிற்குக் குறைந்த சந்தாத் தொகை ஏற்கப் பெறுவதில்லை.

சந்தாதாரர்கள் தங்களுடைய சரியான முழு முகவரியைத் தெரிவித்துதவுதல், இதழ்கள் தவருமற் சேர்தற்கு மிகவும் இன்றியமையாதது.

—ஆசிரியர்.

CONNEMARA PUBLIC LIBRARY

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 6] குரோதி ஆவணி-செப். 1964 [மணி 12

ஸ்ரீ தாயுமான சுவாமிகள்



முன்னுரை:

ஸ்ரீ தாயுமான சுவாமிகள், நம் தமிழ் நாட்டில் தோன்றி யருளிய தவஞானச் சான்ஞேர்கள்பலருள், தலைசிறந்த ஒருவர். அப் பெருந்தகை யினை நினைக்குங்காலெல்லாம், அவர்தம் தூயதுறவு நெறிப் போக்கு - தத்துவஞானச் சால்பு - யோகானுபவ நலம்- அருளிய லுள்ளம் - தாழ் வெனும் தன்மை-பக்தி மனப் பான்மை-பலகலை நூற்பயிற்சி உலகியலறிவு-அரிய இனிய கவிதைத் திறம் ஆகிய பற்பல நற்பண்பு நலங்கள், நம்மனோர் மனக்கண்களின் முன்னே தோன்றிக் களி நடம் புரிகின்றன.

''புவிராசர் கவிராசர்
தவராசர் என்றுனைப்
போற்றிசய போற்றிஎன்பார்''

என்று, தாயுமானவர் தம் முடைய மௌனகுரு வணக்கப் பாடலிற் குறிப்பிடுவதனைத் தழுவி, நாமும் நம்முடைய குருவாகிய தாயுமானவர் பெருந்தகையைக் கவிராசர் என்றும், தவராசர் என்றும் களிப்புறப் புகழ்ந்து போற்றி மகிழலாம்.

பாம்பன் சுவாமிகள் :

'பாம்பறியும் பாம்பின்கால்' என்பது பழமொழி. ஞானி களின் பெருமை ஞானி களுக்கே நன்கு தெரியும். அண்மைக் காலத்தில் விளங் கிய அருட்பெருங் குரவரும்- சைவசித்தாந்தச் சான்ஞே ரும்-பலபெரு நூல்களை இயற் றியருளியவரும்-நம் பாலசுப் பிரமணிய பக்தஜன சபைக் குக் கால்கோள் நிகழ்த்தியருளியவரும் ஆக விளங் கியிருந்த பாம்பன் ஸ்ரீ குமரகுருதாச சுவாமிகள் அவர்கள், பண்டைப் பெரியோர் நூல்களிலிருந்

தன்றி ஏனைய பிற்கால நூல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக்காட்ட இசையாத பெருஞ்சிறப்பு இயல்புடையவர். எனினும், அத்தகைய பாம்பன் சுவாமிகள் தாமே, ஸ்ரீ தாயுமான சுவாமிகளைப் பெரிதும் மதித்து, அவர்தம் பாடல்களிலிருந்து மேற்கோள்கள் எடுத்துக் காட்டிப் போற்றி யிருக்கின்றார்.

"அஞ்சுமுகம் காட்டாமல்
ஆறுமுகம் காட்டவந்த
செஞ்சரணச் சேவடியைச்
சிந்தைவைப்ப தெந்நாளோ?"

எனவரும் தாயுமானவர் பாடலைப் பெரிதும் போற்றி மகிழ்ந்து, பாம்பன் சுவாமிகள் பரவசப் படுகின்றார்! மேலும்,

"உன்னிலுன்னும் என்ற
உறுமொழியால் என்னிதயம்
தன்னிலுன்னி நன்னெறியைச்
சேரும்நாள் எந்நாளோ?"

எனவரும் தாயுமானவர் பாடலிற் குறிப்பிடப் பெறுவது,

"பன்னி லூறும்
பழத்தினு மின்சுவை
என்னி லூறி
எனக்கே களிதரும்
உன்னி லுன்னும்
உணவிடில் விட்டிடும்
என்னு ளீசன்
இருந்த இயற்கையே"

என்னும் திருநாவுக்கரசரின் திருக்குறுந்தொகைப் பாடல் என்றும், அஃது இக்கால அச்சுப் புத்தகங்களில் விடுபட்டுப் போயிருக்கிற தென்றும், முதன் முதலில் (1908) எடுத்துக் காட்டி யருளிய பெருமையும், பாம்பன் சுவாமிகளுக்கே யுரிய தாகும்.

சிவஞான யோகிகள் :

இங்ஙனமே, பொதுவாகத் தமிழுலகிலும், சிறப்பாகச் சைவ சித்தாந்த உலகிலும், தன்னிகரற்ற புலமைநலச் சான்றோராகப் புகழ்ந்து போற்றப் பெற்றுவரும் ஆசிரியர் மாதவச் சிவஞான யோகிகள் தாமும், தாயுமான சுவாமிகள் பாற் பெருமதிப்புக் கொண்டிருந்தார் எனத் தெரிகின்றது. சிவஞானபோத மாபாடிய நூலில், சரியை கிரியை யோக ஞானங்கள் பற்றி விளக்க நேரும் பகுதியில்,

"விரும்பும் சரியைமுதல்
மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோல்
அன்றோ பராபரமே!"

எனவரும் தாயுமானவர் பாடலையே தழுவி மாதவச் சிவஞான யோகிகள் விளக்கம் எழுதி யருளி யிருக்கின்றார்.

அறிஞர்களின் புகழுரைகள் :

நம் தமிழ்நாட்டில் வாழையடி வாழையாகச் சான்றோர்கள் பலர் தோன்றியிருந்தாலும், அவர்களுள்ளே இந்தக் காலநிலையில் மிகவும் சிறந்தெடுத்துப் போற்றத் தக்கவராக விளங்குபவர் தாயுமானவரே என்றும், அவர்தம் பாடல்கள் பின்னைப் புதுமைப் பெற்றிமையுடையவாயினும், முன்னைப் பெரியோர்களின் முன்னைப் பழம் பொருள்களையே நன்கினிது எடுத்து முழங்குகின்றன என்றும், பேரறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார் (1)

"சமயம் தத்துவம் கவிதை ஆகிய துறைகளில், வடமொழி இலக்கியங்களைவிடக் கூட ஒரு வகையில் தமிழ் மிகவும் சிறந்து விளங்குகின்றது என்றும், அதற்குக் காரணம் தாயுமானவர் திருவள்ளுவர் நக்கீரர் மாணிக்கவாசகர் போன்ற சான்றோர்களின் பாடல்களேயாம் என்றும், வேதாந்தம் சித்தாந்தம் என்னும் இருதிறக் கொள்கைகளிலும் உள்ளன போலத் தோன்றும் முரண்பாடுகளைப் போக்கி வேதாந்த சித்தாந்த சமரச நிலையினை விளக்கி யருளியவர் தாயுமானவர் என்றும், மற்றொரு சிறந்த பேரறிஞர் கூறுகின்றார். (2)

---

1. "Saint Thayumanavar, whose lyrics have led me on to think philosophically while still a young boy, is one such in a long line of mystics but **one best suited to the modern age**, though speaking an idiom '**more ancient than the ancients**'."

—Sir Kandiah Vaidyanathan

2. "Even Sanskrit literature with all its multiform development and its technical perfection, is not superior in the matter of philosophical and religious speculation or poetry, to the highest example of the art of Tamil–especially as exemplified in **Thayumanavar** in such miraculous verses as the **Ode to Sakthi** and in the works of Thiruvalluvar, Nakkirar and Manickavasagar. The Saiva Siddhanta held sway in the extreme south of India and the tenets of the Vedantha seemed on certain points to conflict with it but the task of sages like **Thayumanavar** was to reconcile and harmonize the conflicting positions."

—Dr. C. P. Ramaswamy Aiyar

இவ்வாறே தமிழ் நாட்டிற்குப் போந்து வாழ்ந்திருந்து தம் சமயப் பணியாற்றி வந்த ஒருவர், 'தாம் கிறித்தவ சமய வுணர்வும் உறுதியும் உடையவராக இருந்தும், தாயுமானவரின் பாடல்கள் பல வற்றிலும் ஒளிவிட்டுத் திகழும் நுண்ணிய ஆன்மஞான அனுபவ உண்மைகளை வியந்து பாராட்டாது தம்மால் இருக்க இயலவில்லை' என்றும், 'அப்பாடல்களிற் பொதிந்துள்ள அரும் பெறல் உண்மைக் கருத்துக்கள் ஒருபுறம் இருப்ப, அப்பாடல்களில் அமைந்துள்ள நய ஒலியின் நடனமே, தம்முடைய ஆங்கிலேயச் செவிகளையும் கவர்ந்துவிட வல்லதாக விளங்குகின்றது' என்றும் போற்றிப் புகழ்கின்றார். (3)

இயற்கையும் இறையுணர்வும்:

தாயுமானவர் மிகச் சிறந்த ஒரு பெருந்தத்துவ ஞானத் தலைவர். அவர் உலகப் பொருள்கள் எல்லாவற்றின் இயல்பிலும் இயக்கத்திலும், கடவுட்டன்மை ஊடுருவி ஒளிர்ந்து நிற்றலை நன்கு உணர்ந்து வியந்தருள்கின்றார். இரவும் பகலும், காற்றும் முகிலும், விண்ணும் மண்ணும் கடலும் ஆகிய எல்லாம், அவர்க்குக் கடவுளியல்பினைப் புலப்படுத்துகின்றன.

நேரேதான் இரவுபகல்
கோடா வண்ணம்
நித்தம்வர, உங்களைஇந்
நிலைக்கே வைத்தார்
ஆரே?அங் கவர்பெருமை
என்னே? என்பேன்.
அடிக்கின்ற காற்றேநீ
யாரா லேதான்
பேராதே சுழல்கின்றாய்?
என்பேன். வந்து
பெய்கின்ற முகில்காள்!எம்
பெருமான் நும்போல்
தாராள மாக்கருணை
பொழியச் செய்யும்
சாதகம்என் னே?கருதிச்
சாற்றும் என்பேன்.
கருதரிய விண்ணே!நீ
எங்கு மாகிக்
கலந்தனையே! உன்முடிவின்
காட்சி யாக
வருபொருள்எப் படியிருக்கும்?
சொல்லாய் என்பேன்.

மண்ணேஉன் முடிவில்எது
வயங்கும் ஆங்கே?
உரையிறந்து பெருமைபெற்றுத்
திரைக்கை நீட்டி
ஒலிக்கின்ற கடலே!இவ்
வுலகம் சூழக்
கரையுமின்றி உன்னைவைத்தார்
யாரே? என்பேன்.

கடவுளின் கருணை:

தாயின் கருப்பப் பையில் நாம் அனைவரும் பத்துத் திங்கள் தங்கி யிருந்தே பின்னர் இவ்வுலகில் வந்து பிறக்கின்றோம். அப் பத்துத் திங்களிலும், நமக்கு இன்றியமையாத நீரையும் உணவையும் காற்றையுமெல்லாம், உள்ளுக்குள் உடனுயிருந்து கொடுத்துதவி, நம்மைக் காத்தருளியவன் கடவுள் அன்றோ? உயிர் பிரிந்து விட்டால், நான்கு ஆட்கள் ஒன்று சேர்ந்து சுமக்க வேண்டிய அளவு சுமை மிகுந்த நம் உடலை நம்முடைய உயிர் ஒன்றே சுமந்து கொண்டு எளிதில் திரியும் படி, நம் உடலையும் உயிரையும் ஒருங்கியைத்துப் பொருத்தி வாழ வைத்தவன் இறைவனேயன்றோ? என்றெல்லாம் பரம்பொருளின் பெருங் கருணைத் திறனை வியந்து பேசி இன்புறுகின்றார் தாயுமானவர்!

"தாயர்கர்ப்பத் தூடுஅனமும்
தண்ணீரும் தந்தருளும்
நேய!உனை யாரே
நினையார் பராபரமே"

"காரகமாம் கர்ப்பஅறைக்
கண்ணூடும் என்கண்ணே
வாரம்வைத்துக் காத்தனைநீ
வாழி பராபரமே"

3. "It is impossible even for one accustomed to the light and certainty of Christianity not to admire **the keen spiritual insight** which many passages of the Thayumanavar's writings display. Apart altogether from the thought which they contain **the rhythmic dance** of the original strikes an English ear."

—G. Mackenzie Cobban

"தோற்பாவை நாலாட்
சுமையாகும். சீவன்ஒன்றிங்கு
ஆர்ப்பால் எடுத்தது
எவராலே? பராபரமே"

வரலாற்றுக் குறிப்புகள்:

தாயுமான சுவாமிகள் வாழ்ந்திருந்த காலம் 18 ஆம் நூற்றுண்டு. அவர்தம் தந்தையார் ஆகிய கேடிலியப்ப பிள்ளை என்பவர், திருச்சிராப்பள்ளியில் இருந்து அரசு செலுத்தி வந்த விஜயரங்க சொக்க நாத நாயகர் (கி. பி. 1706—1732) என்பவரின் அரண்மனை மேற்பார்வையாளர் (The Palace Superintendent) பதவியிற் பணியாற்றி வந்தார். தம் தந்தையாருக்குப் பின்னர், அரசரின் வேண்டுகோட்கு இணங்கித் தாயுமானவரும், விஜயரங்க சொக்கநாத நாயகர் காலத்தும், அவர் தம் மனைவியார் ஆகிய அரசி மீனாட்சியம்மையார் காலத்தும் (கி. பி. 1732—1736), அப்பதவியில் அமர்ந்து சில காலம் பணியாற்றினர்.

அக்காலத்தில் அரசியற் சிக்கல்களும் சூழ்ச்சிகளும் நிறைந்திருந்தன. பாளையக்காரர்களுக்குள்ளே போரும் பூசலும் பிணக்கும் மிகுந்து வந்தன. ஆற்காட்டு நவாபும், ஐதராபாத் நிசாமும், பாளையக்காரர்களைப் பலவகைகளில் ஆட்டி வைத்து, நாயக்க அரசை நலிவுறுத்திக் கைப்பற்றிக் கொள்ள முயற்சிகள் புரிந்து வந்தனர்.

"நாடும்நக ரும்நிசான்
ஆட்டிய பாளயமும்
ஈடுசெயு மோ?முடிவில்
எந்தாய் பராபரமே"

என இச் சூழ்நிலைகளை ஒரு வகையில் தாயுமான சுவாமிகள் குறிப்பிடுதல் காணலாம்.

விஜயரங்க சொக்கநாத நாயகர் தஞ்சை மகாராட்டிரரின் திடீர்ப் படையெடுப்பால் திகைத்து மனமுடைந்து மாண்டார். அரசி மீனாட்சியம்மையாரின் அரசாட்சியை அடைதற்குத் தானே உரிமை யுடையவன் எனப் பங்காரு திருமலை என்பவன் பல குழப்பங்களும் சதிகளும் செய்தான். சந்தா சாகிப் சூழ்ச்சியினால் அரசி மீனாட்சியம்மை தற்கொலை செய்து கொள்ள நேர்ந்தது. அம்மையார் வளர்த்து வந்த விஜயகுமார் இளவரசர், அன்வருதீன் என்பவனாற் கொல்லப்பட்டார். இவைகளெல்லாம் தாயுமானவரின் இயற்கைத் துறவுள்ளத்தை மேலும் துறவு நெறியில் உறுதிப் படுத்துவன ஆயின.

"புரந்தோர்தம் தேசம்என்பார்
பூமியைப் போராடி
இறந்தோரும் தம்மதென்பார்
என்னே பராபரமே"

"தந்தைதாய் தமர்தாரம்
மகவென்னும்
இவையெல்லாம் சந்தையிற்
கூட்டம்; இதிலே
சந்தேகம் இல்லை;மணிமாட
மாளிகை மேடை
சதுரங்க சேனையுடனே
வந்ததோர் வாழ்வும் இந்த்ர
சாலக் கோலம்"

"வாழ்வனைத்தும் மயக்கம்எனத்
தேர்ந்தேன்."

இவ்வவல நிலைகளை யெல்லாம் கண்டு, தாயுமானவரின் அருளுள்ளம் பெரிதும் உளைந்து தளர்ந்திருத்தல் வேண்டும். அக்கால நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைந்து, தாயுமானவர் உள்ளம் உருகித் துயருறுகின்றார்.

"தன்னையே நோவனோ?
பிறரையே நோவனோ?
தற்காலம் அதை நோவனோ?
பந்தமானது தந்த
வினையையே நோவனோ?
பரமார்த்தம் ஏதும் அறியேன்"

"ஊழ்வலியோ? அல்லதுன்
திருக்கூத்தோ? இங்கு
ஒருதமியேன் மேற்குறையோ?
உணர்த்தாய்! இன்னும்
பாழ்அவதிப் படஎனக்கு
முடியாது; எல்லாம்
படைத்தளித்துத் துடைக்கவல்ல
பரிசி னனே"

இங்ஙனம் நாட்டில் அரசியற் கொந்தளிப்புகள் ஏற்பட்டு, அதனால் விளைந்த பல இன்னல்களையும் உன்னி யுன்னித் தாயுமானவரின் அருளுள்ளம் ஆற்றொணாத் துயருற்றது போலும்! அந்நிலையினின்று ஒருவகையில் தம் உள்ளத்தைத் தேற்றிக் கொள்ள இறையருளை நாடுகின்றார் அவர்!

"வந்ததையும் போனதையும்
வைத்துவைத்துப் பார்த்திருந்தால்
சிந்தை இதம்அகிதம்
சேரும் பராபரமே"

போனநாட் கிரங்குவதே
தொழிலா இங்ஙன்
பொருந்துநாள் அத்தனையும்
போக்கினேன். என்
ஞானநா யகனே!நின்
மோன ஞான
நாட்டமுற்று வாழ்ந்திருக்கும்
நாளெந் நாளோ?

சான்றோர்ப் போற்றிய தகவு:

தாயுமானவர் உலகில் வாழ்ந்தார். ஆனால் அவருள்ளத்தில் உலகம் வதியவில்லை (In the world but not of the world). அவருடைய உள்ளம் இயல்பாகவே இறையருட் பேற்று முயற்சியிலேயே ஈடுபட்டு நின்றது. தமக்கு முன்னே வாழ்ந்திருந்த சான்றோர்களையும், அவர்தம் நூல்களையும் தாயுமானவர் தகவுறப் போற்றி ஒழுகினர். அப்பர் சம்பந்தர் சுந்தரர் மாணிக்கவாசகர் என்னும் சமய குரவர்களையும், மெய்கண்டார் அருள்நந்தி மறைஞானசம்பந்தர் உமாபதிசிவம் ஆகிய சந்தான குரவர்களையும், தாயுமானவர் சாலவும் வழிபட்டுத் துதித்து மகிழ்ந்தார். திருமூலர், பட்டினத்தார், அருணகிரியார், சிவவாக்கியர், சுகர், வாமதேவர் முதலிய சான்றோர்களை யெல்லாம் அவர் பாராட்டிப் பரவியுள்ளார்.

தேவர்தொழும் வாதவூர்த்
தேவே! என்பேன்.
திருமூலத் தேவே!இச்
சகத்தோர் முத்திக்கு
ஆவலுறச் சிவஎன்வாக்
குடனே வந்த
அரசே!சும் மாஇருந்துன்
அருளைச் சாரப்
பூவுலகில் வளர்அருண
கிரியே! மற்றைப்
புண்ணியர்காள்!
ஓ என்பேன்.

எனச் சுவாமிகள், தமக்கு முன்னே வாழ்ந்திருந்த சான்றோர்கள் பலரையும் குறிப்பிட்டுப் போற்றுதல் காணலாம். பட்டினத்தடிகள் மாட்டும், அருணகிரிநாதர் இடத்தும் சுவாமிகள் பெருமதிப்புக் கொண்டவராக விளங்குகின்றார். "பாரனைத்தும் பொய் எனவே பட்டினத்துப் பிள்ளையைப் போல் ஆரும் துறக்கை அரிதரிது" என வியந்து மொழிகின்றார் தாயுமானவர்! "ஐயா அருணகிரி அப்பா! உனைப்போல் மெய்யாக ஓர் செர்ல் விளம்பினர் யார்?" என வியந்து வினவுகின்றார் அவர்! அருணகிரிநாதர் அருளிய கந்தரனுபூதி என்னும் நூலினைச் சிறந்தெடுத்துப் போற்றிக் "கந்தரனுபூதி பெற்றுக் கந்தரனுபூதி சொன்ன எந்தையருள் நாடி இருக்கும் நாள் எந்நாளோ?" என்று சுவாமிகள் ஏக்கறுகின்றார்.

தாயுமானவப் பெருந்தகைக்குத் தேவார திருவாசகத் திருமுறைகளில் எத்துணைப் பற்றும் ஈடுபாடும் இருந்தன என்பது,

"தேவரெல்லாம் தொழச்சிவந்த
செந்தாள் முக்கட்
செங்கரும்பே! மொழிக்குமொழி
தித்திப் பாக
மூவர்சொலும் தமிழ்கேட்கும்
திருச்செ விக்கே
மூடனேன் புலம்பியசொல்
முற்று மோதான்?"

"பாகத்தி னற்கவிதை
பாடிப் படிக்கவோ
பக்திநெறி யில்லை: வேத
பாரா யணப்பனுவல்,
மூவர்செய் பனுவலது
பகரவோ இசையுமில்லை."

எனவரும் பாடலால் விளங்கும். "அறிஞருரை" என்னும் பகுதியில் வரும் பாடல்களும் இவ்வுண்மைக்குச் சான்று பகரும்.

மௌன குரு:

திருமூலரைச் "சக்கரவர்த்தி தவராச யோகி" எனப் புகழ்ந்து போற்றும் தாயுமானவர்க்குத் திருமூலர் மரபில் வந்த மௌனகுரு என்பவர், சிறந்த அருட்குருவாக வாய்க்கப் பெற்றார். அவரை "மந்த்ரகுருவே! யோகதந்த்ர குருவே! மூலன் மரபில் வரும் மௌனகுருவே!" எனக் குறிப்பிட்டுத் தாயுமானவர் துதிக்கின்றார். "ஞான கருணைகர முகம் கண்ட போதினிலே நவநாதசித்தர்களும் உன் நட்பினை விரும்புவார்; சுகர் வாமதேவர் முதல் ஞானிகளும் உனை மெச்சுவார்" எனத் தம் குருவை வியந்து புகழ்ந்தோதுகின்றார். திரு

மூலர் மரபில் வந்த மௌனகுரு, இவர்க்கு 'வேதாக மத் துணிபு இரண்டிலே ஒன்றே' என்று, வீறு சிவ ஞான சித்தி நெறியை விளக்கி உபதேசித்தருளி ஞர். அதனல் "தரணிமிசை லோகாயதன் சமய நடை சாராமல், வேதாந்த சித்தாந்த சமரச சிவானுபூதி நிலே" இவருக்கு இனிது வாய்ப் பதாயிற்று.

சமய சமரச ஞானம்:

"இறையுணர்வு ஒளியானது முழுவதாக நமக்கு வெளிப்படுமாயின், நம் கண்கள் அதனைத் தாங்க மாட்டாது ஒளி மழுங்கிக் குருடாகிவிடும். அத ஞல் நம் கண்கள் அதனைக் கண்டுணரக் கூடும் வண்ணம், அது பல நிற ஒளிகளாகச் சிதறி வெளிப்படுகின்றது. பல்வேறு சமய ஒழுகலாறு களும், ஒப்பற்ற ஒரு பரம்பொருளையே வெவ்வேறு வடிவங்களிற் கண்டு அணிசெய்கின்றது. அப் பல்வேறு சமயக் காட்சிகளும் ஒன்றனை யொன்று தழுவிச் செழிப்புறுத்தி, மனித இனத்துக்குப் பல திறப்பட்ட முழுநிறைவுத் தன்மையை யளித்துப் பயன்படுகின்றன.

இந்து மதத்தின் ஆன்ம ஞான ஒளி, யூதமதத் தின் கீழ்ப்படிதற் பண்பு, கிரேக்க மதத்தின் அழ கியலுணர்வு, ஜைன மதத்தின் பரந்த நோக்கம், பௌத்த மதத்தின் சிறந்த கருணைத்திறம், கிறித் தவ மதத்தின் தெய்விக அன்புக் காட்சி, இஸ் லாம் மதத்தின் இறையருட்டலைப்பாடு ஆகிய எல்லாம் ஆன்மீக வாழ்வின் பல்வேறு கூறு களையே புலப்படுத்துகின்றன. இவை யனைத்தும் மனிதவுணர்வு எய்தித் திளைத்த சிறந்த இறை யருளனுபவத்தின் வெளிப்பாடுகளே யாகும்".(4)

---

4. "The light of Eternity would blind us if it came full in the face. It is broken into colours so that our eyes can make something of it. The different religious traditions clothe the one Reality in various images, and their visions could embrace and fertilize each other so as to give mankind a many-sided perfection.

The spiritual radiance of Hinduism, the faithful obedience of Judaism, the beauty of Greek Paganism, the broad Catholic outlook of Jainism, the noble compassion of Buddhism, the vision of divine love in Christianity, and the spirit of resignation to the Sovereign Lord of Islam, all these represent different aspects of the inward life, projections on the spiritual plane of the ineffable experience of the human spirit."

—Dr. S. Radhakrishnan

இன்னோரன்ன சிறந்த உண்மைகளை யெல் லாம் மௌனகுருவின் அருளுபதேசத்தால், ஸ்ரீ தாயுமான சுவாமிகள் செவ்விதின் உணர்ந்து தெளிந்தார்; சமய சமரச ஞானம் அவர்க்கு நன் கினிது கைவந்தது. பல வேறு இடங்களி னின்று தோன்றும் நதிகளெல்லாம் முடிவில் கடலையே சென்று அடைதல் போல, எல்லாச் சம யங்களும் அனுபவ நிலையில் இறைவனிடமே நம் மைக் கொண்டு சென்று சேர்க்கின்றன. ஆதலின் சமயங்களுள் ஒன்றற்கொன்று மாறுபாடு எதுவும் இல்லை.

"வேறுபடும் சமயமெலாம்
புகுந்து பார்க்கின்
விளங்குபரம் பொருளேநின்
விளையாட் டல்லால்
மாறுபடும் கருத்தில்லை
முடிவில் மோன
வாரிதியில் நதித்திரள்போல்
வயங்கிற் றம்மா"

எனத் தாயுமானவர் பாடியருளி யிருப்பது, அவர் தம் சமய சமரச ஞானத்தைத் தகவுற நமக்கு உணர்த்துவதாகும்.

அத்துவித அனுபவம்:

சமய தத்துவ உலகில் 'அத்துவிதம்' என்னும் சொல்லின் பொருள்பற்றிப் பற்பல கருத்துக் களும் விளக்கங்களும் நிகழ்ந்தன. ஒரோவழி அவற்ருற் பூசலும் பிணக்கும்கூட நேர்ந்தன. கேவலாத்து விதம், விசிட்டாத்து விதம், சுத்தாத்து விதம், துவிதம் எனத் தனித்தனியே பல கொள்கை களும் பிரிவுகளும் ஏற்படலாயின. இவைகள் ஒன் றற்கொன்று முரண்படுவன போலவும் தோன் றின. நம் தாயுமான சுவாமிகள் இத்தகைய வேற் றுமை நெறிகளில் தலைப்படாமல், இவைகளுளெல் லாம் ஊடுருவி நிற்கும் ஒருமைப் பாட்டினையே உணர்ந்து வலியுறுத்தி யருளினுர்!

"வேதம் ஆகமம் புராணம் இதிகாசம் மற்று முள்ள கலைகள் எல்லாம் அத்துவித மார்க்கத்தை யும், துவித மார்க்கத்தையுமே விரிவாக எடுத் துரைக்கின்றன; உண்மையில் ஆராய்ந்து பார்த் தால், துவித ஞானமே, அத்துவித ஞானத்தை உண்டுபண்ணும் ஞானம் ஆகும்; இவ்வுண்மை, ஊகம் (அனுமானம்), அனுபவம் (பிரத்தியட்சம்), வசனம் (ஆகமம்) என்னும் மூவகைப் பிரமாணங் களுக்கும் பொருத்தம் மிக்கதாகப் பொலிகின்றது; அத்துவிதவாதிகள் துவிதவாதிகள் ஆகிய உபய

வாதிகளும் (இரு திறத்தினரும்) சம்மதிக்கத் தக்க அனுபவ உண்மை இது'' எனத் தாயுமானவர் வலியுறுத்துகின்ருர். இது போன்ற பாடற் பகுதி களால், தாயுமானவரின் அனுபவ ஞானச் சிறப் பும், சமரச உணர்வின் சால்பும் நன்கு தெளியப்படும்.

இல்லறமும் துறவறமும்:

சமய உலகிலும் தத்துவ ஆராய்ச்சிச் சூழல்களி லும், இல்லறம் துறவறம் பற்றிய பலவகைக் கருத்து வேறுபாடுகள் தொன்று தொட்டு நிகழ்ந்து வருகின்றன. இவ்விரண்டனுள் ஏதே னும் ஒன்றை உயர்த்தியோ தாழ்த்தியோ, அவர வர் தத்தம் மனநிலைக்கேற்பப் பேசுவது வழக்கம். தாயுமான சுவாமிகளோ, 'சாட்டையிலாப் பம் பரம் போல இறைவனே உலகத்தை ஆட்டுவிக் கின்ருன் என உணர்ந்து, அருள்நெறியில் நின் ருல், இல்லறம் துறவறம் ஆகிய இரண்டுமே மேன்மை யுடையன' எனத் தம் நெஞ்சத்திற்கு அறிவுரை கூறியருள்கின்ருர்.

வீண் விவாதங்கள்:

இங்ஙனமே தாயுமானவர், கடவுள் உண்டா? இல்லையா? என்று தொன்று தொட்டே நிகழ்ந்து வரும் விவாதங்களிலும் தலைப்பட விரும்பவில்லை. வாதிப்பவர்கள் தம் வாக்கு வன்மையினுல், இல்லதை உள்ளதென்றும் உள்ளதை இல்ல தென்றும், எப்படி வேண்டுமாயினும் வாதித்தல் கூடும். அவரவர்களும் தத்தம் கொள்கை களுக்கு ஏற்பக் காரணங்களும் சான்றுகளும் காட்ட முற்படுவர். இத்தகைய பயனற்ற வீண் விவாதங்களிலிருந்து விலகிநின்று, இறைவனைத் தஞ்சம் அடைந்து, தம்மை வாழ்வித்தருளல் வேண்டும் எனப் பணிவுடன் விண்ணப்பித்துக் கொள்ளுகின்ருர் தாயுமானவர்!

''இல்லை உண்டென்
  றெவர்பக்க மாயினும்
சொல்ல வோஅறி
  யாத தொழும்பன்யான்
செல்ல வேருெரு
  திக்கறி யேன்எலாம்
வல்ல நீஎனை
  வாழ்விக்க வேண்டுமே''

வீண் விவாதங்களிலேயே ஈடுபட்டுக் காலங் கழிக்கும் மக்கட் போலிகளின் இயல்பினைக் தாயு மானவர் பின்வருமாறு குறிப்பிடுகின்ருர்:

''மாறுபடு தர்க்கம் தொடுக்க அறிவார்; சாண் வயிற்றின் பொருட்டதாக, மண்டலமும் விண்ட லமும் ஒன்ருகி, மனதுழல மாலாகி நிற்க அறிவார்; வேறுபடு வேடங்கள் கொள்ள அறி வார்; ஒன்றை மெண மெணென்று அகம்வேற தாம் வித்தையறிவார்; சந்தைபோல் மெய்ந்நூல் விரிக்க அறிவார்; சீறுபுலிபோற் சீறி மூச்சைப் பிடித்து விழி செக்கச் சிவக்க அறிவார்; திரம் என்று தம்தம் மதத்தையே தாமதச் செய்கை கொடு உளற அறிவார்...'' எனவரும் தாயுமான வரின் பாடற்பகுதி படித்து மகிழ்தற்குரியது.

வெருட்டி மருட்டும் வித்தை:

தாயுமானவர், தாமும் இத்தகைய போலி வாதங்களில் ஈடுபட்டு நின்றதாகக் குறிப்பிட்டுக் கொள்ளுகின்ருர்: ''நல்லோர்கள் ஞானயோக நீதிகளை யுரைத்தால் அவர்களை மறுத்துக் கரும யோகந்தான் மிகவும் முக்கியம் என்று நாட்டு வேன்; கருமயோகத்தினைப் பற்றி யாரேனும் வற்புறுத்திப் பேசினுல், அதனை மறுத்து ஞான யோகம்தான் மிகவும் சிறந்தது என்று நவிலு வேன்; வடமொழியிலே வல்லவர்கள் வந்தால், அவர்களிடம் தமிழிற் புலமை கைவந்தது போல விவகரிக்கத் தொடங்குவேன்; வல்ல தமிழறிஞர் வரின் அங்ஙனே வடமொழியின் வசனங்கள் சிறிது புகல்வேன்; இங்ஙனம் பிறரை மருட்டி வெருட்டி விடக் கற்றவித்தையினுல் யாதுபயன்? இத்தகைய போலிக் கல்வி கற்றவர்களைக் காட்டி லும், ''கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்! கற்றும் அறிவில்லாத என் கர்மத்தை என் சொல் கேன்? மதியை என் சொல்கேன்?'' என்று தம்மைத் தாமே நொந்து கொள்ளுகின்ருர் தாயுமானவர்!

ஞானச் சான்ருண்மை:

'பணியுமாம் என்றும் பெருமை' எனத் திருவள் ளுவர் கூறியதற் கேற்ப, இங்ஙனம் பலவகை களில் தாயுமானவர் தம்மைத் தாமே பழித்துக் கொண்டாலும், அவர் எத்தகைய அருள்ஞானப் பெருந்தகை என்பதனை, அவர்தம் அழகிய இனிய பாடல்கள் நமக்கு நன்கினிது உணர்த்து கின்றன. அவர் காண்பதெல்லாம் சிவக் காட்சி யாகக் காண்கின்ருர். அவர் தம்முடைய கைகளாற் செய்யும் தொழில்கள் அனைத்தும் இறைவழி பாடேயாக முடிகின்றன. பேசுவன எல்லாம் மந்திரங்களாக அமைந்து விடுகின்றன. நிலம் நீர் தீ வளி விசும்பு என்னும் ஐந்தும், உலகில் வாழும் உயிர்களும் ஆகிய எல்லாம் இறைவனின் அருள்வடிவமாகவே அவர்க்குத் தோன்று

கின்றன. அவர்தம் தூய நெஞ்சே இறைவனுக்குக் கோயிலாக மாறுகின்றது. நினைவே நறுமணம் பரப்புகின்றது. அன்பே திருமஞ்சன நீராக அமைகின்றது, அவர் செப்புவ தெல்லாம் செபம்! சிந்திப்ப தெல்லாம் தியானம்!

"கண்ணிற் காண்பதுன்
காட்சி; கையாற் றொழில்
பண்ணல் பூசை;
பகர்வது மந்திரம்;
மண்ணுடைந்தும்
வழங்குயிர் யாவுமே,
அண்ணலே! நின்
அருள்வடிவு ஆகுமே!"

"நெஞ்சகமே கோயில்;
நினைவே சுகந்தம்; அன்பு
மஞ்சனநீர்; பூசைகொள்ள
வாராய் பராபரமே!"

"செப்புவதெல் லாம்செபம்! நான்
சிந்திப்ப தெல்லாம் நின்
ஒப்பில் தியானம், என
ஓர்ந்தேன் பராபரமே!"

'துள்ளும் அறியா மனது பலிகொடுத்தேன். கர்மதுட்ட தேவதைகள் இல்லை. துரிய நிறை சாந்த தேவதையாம் உனக்கே தொழும்பன். அன்பு அபிடேகநீர். உள்ளுறையில் என் ஆவி நைவேத்தியம். பிராணன் ஓங்குமதி, தூப தீபம். ஒருகாலம் அன்றுஇது, சதாகால பூசையா ஒப்புவித்தேன்' என்றெல்லாம் வரும் தாயுமானவரின் பாடற் பகுதிகள், தாயுமானவரின் ஞானச் சான்றாண்மையினை நன்கினிது வெளிப்படுத்துகின்றன.

நெஞ்சையள்ளும் செஞ்சொற் பாடல்கள்:

தாயுமானவரின் பாடல்களுள் ஒவ்வொன்றும், நெஞ்சையள்ளும் நீர்மை யுடையன. மக்கட் பிறப்பின் விழுப்பத்தை விளக்கும் முறையில் வரும் "எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவி தான் யாதினும் அரிதரிது காண்! இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஏது வருமோ அறிகிலேன்" எனவரும் பாடல், அனைவருமே அறிந்த தொன்று! பெரும்பாலான மக்களிடம் பொதுவாக மிகுந்து காணப்படும் 'ஆரா இயற்கை அவா' ஆகிய பேராசையின் பெற்றியினை, "ஆசைக்கோர் அளவில்லை. அகிலமெல்லாம் கட்டி ஆளினும் கடல்மீதிலே ஆணை செலவே நினைவர். அளகேசன் நிகராக அம்பொன் மிக வைத்த பேரும், நேசித்து ரசவாத வித்தைக்கு அலைந்திடுவர். நெடுநாள் இருந்த பேரும் நிலையாகவே இனும்காய கற்பம் தேடி நெஞ்சு புண்ணாவர். எல்லாம் யோசிக்கும் வேளையிற் பசிதீர உண்பதும் உறங்குவது மாக முடியும்..." என எடுத்து விளக்கும் பாடலும் எல்லோரும் அறிந்த சிறந்த பாடல்! யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என அறைகூவி அழைக்கும் முறையில், "காநம் உறவு கலந்துண்ணக் கண்டீர் அகண்டாகார சிவபோகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித் ததும்பிப் பூரணமாய் ஏக உருவாய்க் கிடக்குதையோ! இன்புற்றிட நாம் இனி எடுத்த தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும் செகத்தீரே!" எனவரும் பாடல் எவர் நெஞ்சையும் கவர வல்லது! "சைவ சமயமே சமயம்..." "இராசாங்கத்தில் அமர்ந்தது வைதிகசைவம் அழகிது அந்தோ!" என்பன போன்றுவரும் பாடற் பகுதிகள், உள்ளுவோர் உள்ள மெல்லாம் கொள்ளை கொள்ள வல்லன. பராபரக் கண்ணி, எந்நாட் கண்ணி போல்வன, பல்காற் பயின்று சுவைத்து மகிழும் பான்மையன.

சிறந்த கவிதைகள்:

உலகியற்கைப் பொருள்களிற் காணப்படும் பலதிற அமைதியின்ப அழகினை ஆராய்ந்துணரும் சான்றோர்களுக்கும், மனித வாழ்க்கையின் மூலை முடுக்கர்களில் ஒதுங்கி மறைந்து கிடக்கும் நுண்பொருள்களை நுனித்தறிய முயலும் அறிஞர்களுக்கும், சமயத்துறையிலும் தத்துவநெறியிலும் உயர்ந்துயர்ந்து சென்று ஈடுபட்டுத் திளைக்கும் மெய்யுணர்வாளர்களுக்கும், ஒழுக்கத் தூய்மையிலும் இறையருளுணர்விலும் சிறந்து அவற்றின் அமைதியின்ப நலத்தினையே விழைந்து நிற்கும் அருளாளர்கட்கும், நிலைத்த அழகுடையதாய் நெஞ்சைத் திறம்படக் கவர்வதாய்த் துலங்குவது: சிறந்ததொரு கவிதையினைப் படித்துச் சுவைத்து மகிழ்வதினும் வேறு பிறிதொன்று இல்லை (5).

---

(5) "To a **mind** brooding on the silent beauty exhibited in the varied phenomena of nature, to an **intellect** diving deep into the mysteries that lie in the inmost corners of life, to a **soul** soaring high into ethereal regions of religion and philosophy, to a **spirit** seeking serene rest in moral sanctity and Divine grace, nothing appears so permanently beautiful, so certainly impressive and effective as the study of **a fine piece of poetry**"

—Swami Vedachalam

நுண்பொருட் கருத்து விளக்கம்

சமயம் என்பது உயர்ந்த உண்மைகளும், கொள்கைகளும் மட்டுமேயன்று. சமயவாழ்விற் பலவகைச் சடங்குகளும்' சம்பிரதாயங்களும், விரதானுஷ்டானங்களும் உண்டு. அவைகளில் ஒவ்வொன்றையும், அறிவுக்கும், அனுபவத்திற்கும் பொருத்தமான பல காரணங்களுடனும், உட் பொருள்களுடனுமே, நம் முன்னோர்கள் அமைத்து வைத்திருக்கின்றார்கள்.

மக்களின் வாழ்க்கை நலத்திற்கும், இன்பத்திற்கும், அவைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் துணைசெய்து பயன்படுதலை, நம் முன்னோர்கள் தம்முடைய வாழ்க்கையில் அனுபவ வாயிலாக நன்கு அறிந்துணர்ந்தே, அவற்றை யெல்லாம் வகுத்து அமைத்து வைத்துப் போந்திருக்கின்றனர்.

ஆனால் நாளடைவில் அவற்றுள் ஒரு சிலவற்றின் அடிப்படைக் காரணங்களும், உண்மைகளும், நுண் பொருள்களும் பொதுமக்களால் மறக்கப்பட்டுப் போயின. அதுபற்றி, சமயச்சடங்குகளையும், விரதானுஷ்டானங்களையும், ஒருசிலர் பிறழ உணர்ந்து கொண்டு, இகழ்ந்து கூற முற்படுவதும் உண்டு.

சமயப்பற்றும், உணர்வும் உடையவர்கள், திருப்பதிக்கேனும் பழனிக்கேனும் சென்றால், தம் தலையை மொட்டையடித்துக் கொண்டு, இறைவனை வழிபட்டு விட்டு வருவதனை நாம் நன்கு அறிவோம்.

(568ஆம் பக்கத்தின் தொடர்ச்சி)

அரியநல் இயற்கை
அழகினை ஆராய்ந்
தகங்களித் தின்புறு
வோர்க்கும்,
மருவுமிவ் வாழ்க்கை
மறைபொருள் பலவும்
மதித்துணர் அறிஞர்கள்
தமக்கும்,
விரிவுறு சமய
மெய்யுணர் வொளியில்
விரும்பிமேன் மேற்படர்
பவர்க்கும்,
திருவருள் ஒழுக்கம்
செறிந்ததூ யவர்க்கும்,
சிறந்தநற் கவிதையே இன்பாம்!

—ஆசிரியர் மொழிபெயர்ப்பு

முடிவுரை:

இத்தகைய சிறந்துயர்ந்த தெய்விகக் கவிதைத் தொகுதியாகத் தாயுமானவரின் பாடல்கள் சாலவும் திகழ்கின்றன. அவற்றை நாம் அனைவரும் அன்புடன் ஓதியுணர்ந்து, நலம்பெற முயலுவோமாக!

[சென்னை இராயப்பேட்டை ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்தஜன சபையின் மணிவிழாவில், சைவப் பெரியார் திரு. ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் தலைமையில், திரு. வி. க. மணி மண்டபத்தில் ஆற்றிய சொற்பொழிவினைத் தழுவியது 19-7-64.
—ஆசிரியர்]

மொட்டையடித்துக் கொள்ளும் வழக்கம் அநாகரிகமானது- அருவருப்பை விளை விப்பது என்றுகூறி, அதனை இகழ்ந்து கூறிப் புறக்கணிப்பவர்களும், ஒரு சிலர் இருத்தலைக் காண்கின்றோம்.

மொட்டையடித்துக் கொள்ளுதல் ஆகிய வழக்கம், ஒருசிறந்த உட் பொருளைக் கொண்டிருக்கின்றது. நாம் இறைவனுடைய அருளை அடைவதற்கு, நம்முடைய பற்றுக்களை அறுத்துக் கொள் ளவும், செருக்கினை அகற்றிக் கொள்ளவும் வேண்டும். இதன் பொருட்டே தொன்று தொட்டு இறைவழிபாட்டை மேற்கொள்ள விரும்பி, இறைவனுக்குக் காணிக்கை செலுத்தித் தம்முடைய அன்பையும் வணக்கத்தையும் புலப்படுத்திக் கொள் ளும் முறையில், பக்தர்கள் மொட்டை யடித்துக் கொள்ளும் வழக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

தொண்டரடிப் பொடியாழ்வார் அருளிச் செய்த **திருமாலை** என்னும் பிரபந்தத்தின் பாசுரம் ஒன்றில், இதுபற்றிய குறிப்பு ஒன்று காணப் படுகின்றது.

"மேம்பொருள் போக விட்டு
மெய்ம்மையை மிகவு ணர்ந்து
ஆம்பரி சறிந்து கொண்டு
ஐம்புலன் அகத்த டக்கிக்
காம்பறத் தலைசி ரைத்துன்
கடைத்தலை இருந்து வாழும்
சோம்பரை யுகத்தி போலும்
சூழ்புனல் அரங்கத் தானே"

எனவரும் தொண்டரடிப் பொடியாழ்வார் பாசுரத்தில் அமைந்துள்ள **"காம்பறத் தலைசிரைத்து"** என்னும் தொடர், மொட் டையடித்துக் கொள்ளும் பழக்கம் தொன்று தொட்டே இருந்துவருவதனை யுணர்த்துகின்றது.

பரமகாருணிகரும், வியாக்கியானச் சக்கரவர்த்தி என்னும் பெரும்புகழ் பெற்ற வருமான **ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை** அவர்கள், இத் தொடர் குறித்து வரைந் துள்ள வியாக்கியானப் பகுதி, ஈண்டு நாம் அறிந்து பெரிதும் இன்புறுதற் குரியது.

"காம்பற-உபாயாந்தரங்களில் தனக்குண்டான தொற்றற! தலைசிரைந்து - தன் தலையில் உண்டான துரிதங்களைப் போக்கி, தன் தலையில் கிடக்கிற ஸாதநாந்தரங்களின் தொற்றையறுத்து என்றபடி. தலைமயிராகிறது தான் அபிமாந ஹேதுவிறே. கோபமுற்றவர் தண்டிக்குமிடத்தில் தலையைச் சிரைக்கிறது அபிமாநத்தைப் போக்கு கிறபடியாய்த்து. ஏகாந்தியாயும் ஸந்நியாஸியா யும் வபநம் பண்ணுகிறது-தன் அபிமாநத்தைத் தானே போக்குகிறபடியிறே; தண்ட முகத்தாலே பிறர் அபிமாநத்தைப் போக்குவதும் இம் முகத் தாலே; ஸ்வாபிமாநத்தைப் போக்குவதும் இம் முகத்தாலேயிறே. ஆக அஹங்கார கர்ப்பமான உபாயாந்தர பரித்யாகத்தைச் சொன்னபடி......"

இவ்வியாக்கியானப் பகுதியானது மொட்டையடித்துக் கொள்ளும் வழக்கத் தின் உட்பொருள் நுட்பத்தினைத் திட்ப முறச் செவ்விதின் விளக்குதல் காணலாம்.

—ஆசிரியர்

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. ஆர். சிவதேவு	ஸ்ரீ மாசிலாநாதர், ஸ்ரீ வரதராஜ பெருமாள் முதலிய கோயில்கள், தரங்கம்பாடி.	ஸ்ரீ தியாகராஜசுவாமி கோயில், திருவாய்மூர்.
திரு. எஸ். கந்தசுவாமி	ஸ்ரீ வீரமாகாளியம்மன் கோயில், ஆத்தலூர்.	ஸ்ரீ நடேசுவரர் கோயில், புதுச்சேரி. அருணசலேசுவரர் கோயில், ஆவராணி.

க்ஷேத்திர வெண்பா

(முன் இதழ்த் தொடர்ச்சி)

13. காளையைப் போன்ற வடிவும் வலிவும் வாய்ந்த இளைஞர்கள், ஈளை (இருமல்) நோயையுடைய கிழவர்களாக மாறி, அவர்களின் கறுத்த தலைமயிரும் பூளைப் பூவைப் போல் வெண்மை நிறம் அடைந்து நரைத்து அழகு கெட்டு, விலை மகளிர்கள் அருவருத்து ஒதுக்கித் தள்ளும் நிலை எய்துவதற்கு முன்னரே, நெஞ்சே! நீ **உஞ்சேனை மாகாளம்** என்னும் தலத்தை அடைந்து அங்குள்ள சிவபெருமானைக் கையால் தொழுது, வாயினால் வாழ்த்தி வணங்கி உய்வாயாக!

காளையர்கள் ஈளையர்கள்
ஆகிக் கருமயிரும்
பூளையெனப் பொங்கிப்
பொலிவழிந்து-சூளையர்கள்
ஓகாளம் செய்யாமுன்,
நெஞ்சமே! உஞ்சேனை
மாகாளம் கைதொழுது
வாழ்த்து.

[காளையர்கள்–இளைஞர்கள்; ஈளையர்கள்–இருமல் நோய் உடையவர்கள்; பூளை–பூளை என்னும் ஒருவகைப் பூ, பஞ்சு போன்று வெண்மை நிறம் உடையது; சூளையர்கள்–விலைமகளிர்; ஓகாளம்–வாய் குமட்டுதல், அருவருத்து ஒதுக்குதல்.]

14. கூடித் திரண்டிருந்த சுற்றத்தினர் குணங்களைப் புகழ்ந்து கூறும்படி, வழுவி விலகியிருந்த உறுப்புகள் எல்லாம் தழுவி ஒன்றுபட்டிருந்தும், 'எம்முடைய ஆனை போன்ற தலைவனுக்கு ஏற்பட்ட இந்த நிலைமை, அந்தோ! மிகவும் கொடுமையானது' என்று சொல்லி, உறவினரும் நண்பரும் வருத்தம் அடைய நேர்வதற்கு முன்னரே, தெற்கேயுள்ள **திருவானைக்கா** என்னும் தலத்திற்குச் சென்று வணங்கி உய்வாயாக!

குழீஇயிருந்த சுற்றம்
குணங்கள் பாராட்ட
வழீஇயிருந்த அங்கங்கள்
எல்லாம்-தழீஇயிருந்தும்
என்னானைக் காவா
இதுதகா தென்னுமுன்
தென்னானைக் காஅடைநீ
சென்று

[குழீஇ–கூடி; வழீஇ–விலகி; தழீஇ–ஒன்றுபட்டு; என்+ஆனைக்கு+ஆவா; ஆவா–அந்தோ, ஐயோ; தென்+ஆனைக்கா–தெற்கேயுள்ள திருவானைக்கா (ஜம்புகேசுவரம்) என்னும் தலம்.]

15. மனைவியும் செல்வமும் நாம் வாழ்ந்திருந்த வீட்டின் எல்லை மட்டுமே; நமக்கு இருக்கும் புகழும், அயலார்களுடைய நெஞ்சத்தின் துடிப்பின் அளவைப் பொறுத்தே; நல்ல சுற்றத்தினரும், குளத்திலுள்ள நீரின் நிலைக்கு ஏற்ப வாழும் பறவைகளைப் போன்றவர்களே. நெஞ்சமே! நீ இவைகளை யெல்லாம் ஆராய்ந்துணர வல்லையானால், இப்போதே **வளைகுளம்** என்னும் தலத்தில் வீற்றிருக்கும் சிவபெருமானையே வணங்கி உய்க.

இல்லும் பொருளும்
இருந்த மனையளவே;
சொல்லும் அயலார்
துடிப்பளவே;-நல்ல
கிளை, குளத்து நீர்அளவே;
கிற்றியேல், நெஞ்சே
வளைகுளத்துள் ஈசனையே
வாழ்த்து

[இல்-இல்லாள், மனைவி; மனை-வீடு; சொல்-புகழ்; கிளை-சுற்றம்; கிற்றியேல்-முடியுமானால்; 'கிற்றியே?' என்றும் பாடம்.]

16. மை தீட்டிய கண்களையுடைய பெண்கள் அருவருக்கும் அந்த நிலையை அடைந்து, தலைமயிர் நரைத்து, உடலும் வளைந்து கூன் ஆவதற்கு முன்னே, சுடு காட்டிற்குச் சென்று தனிமை யடைந்து வருந்த நேர்வதற்கு முன்பே, **பூம்புகார்** நகரத்தைச் சேர்ந்த **திருச்சாய்க்காடு** என்னும் தலத்தை அடைந்து, அங்குள்ள சிவபெருமானைக் கையால் தொழுது, நெஞ்சமே! நீ உய்க.

அஞ்சனஞ்சேர் கண்ணார்
அருவருக்கும் அப்பதமாய்க்
குஞ்சி வெளுத்து, உடலும்
கோடாமுன்—நெஞ்சமே!
போய்க்காடு கூடப்
புலம்பாது, பூம்புகார்ச்
சாய்க்காடு கைதொழு, நீ சார்ந்து

[அஞ்சனம்-மை; அப் பதம்-அந்த நிலைமை; குஞ்சி-தலைமயிர்; கோடாமுன்-வளைந்து கூன் ஆவதற்கு முன்பே; போய் + காடு + கூட; காடு-சுடுகாடு; பூம்புகார்-காவிரிப்பூம்பட்டினம்; சாய்க்காடு-சாயாவனம் என்னும் தலம்.]

17. உயிரானது உடலை விட்டு நேற்றே போய்விட்டது. அருகில் இருக்க முடியாத வாறு நாற்றமும் எடுத்துத் தொலைத்து விட்டது. இங்ஙனம் அழிந்து சிதைந்து விட்ட இப் பிணமாகிய உடல், இன்னும் கிடந்து மேலும் அழுகி நாற்றம் எடுக்காத படி, விரைவில் தூக்கிக் கொண்டு செல் லுங்கள் என்று சொல்லப்படாத முன்பே, நெஞ்சே! நீ **சிராமலை** (திருச்சிராப்பள்ளி) யில் எழுந்தருளியுள்ள சிவ பெருமானின் திருவடிகளைச் சேர்ந்து வழிபட்டு நலம் பெற்று உய்வாயாக.

கழிந்தது நென்னற்று,
கட்டுவிட்டு நாறி
ஒழிந்த துடன்இரா
வண்ணம்-அழிந்த
திராமலையா கொண்டுபோ
என்னுமுன், நெஞ்சே
சிராமலையான் பாதமே சேர்

[நென்னற்று - நேற்று; நெருநல்-நென்னல் என்னும் சொற்களின் அடியாகத் தோன்றியது; கட்டுவிட்டு-உறுதி குலைந்து; அழிந்தது + இராமல் + ஐயா; சிராமலை-திருச்சிராப்பள்ளி; திரிசிரன் என்னும் அசுரன் வாழ்ந்த இடம் எனப் புரா ணம் கூறும்; சிரா என்னும் சமண முனிவர் வாழ்ந்த இடம் என்று இந் நாளைய வரலாற் றுராய்ச்சியாளர் கருதுவர். "சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற என் உள்ளம் குளிரும்மே" என்பது சம்பந்தர் தேவாரம்.]

18. நெஞ்சமே! சுற்றத்தார்கள் எல்லாரும் சேர்ந்துகொண்டு இழவு கொண்டாடியும், பின்னர் இறுதிக் கடன் முதலிய விழாக் கள் கொண்டாடியும் நிற்கும் நிலையில், நம்முடைய உயிரானது உடலை விட்டுப் பிரிவதற்கு முன்பே, **திருமழபாடி** என் னும் தலத்திலுள்ள ஆண்டவனை, அரிய அமிழ்தம் போன்றவனை, அக் காலத்தில் அயனும் மாலும் காண முடியாதவாறு தழற் பிழம்பாக நீண்டு உயர்ந்த சிவபெரு மானை, நினைத்து வழிபட்டு உய்வாயாக!

இழவாடிச் சுற்றத்தார்
எல்லாரும் கூடி
விழவாடி ஆவி
விடா முன்னம்-மழபாடி
ஆண்டானை ஆரமுதை
அன்றயன்மால் காணாமை
நீண்டானை நெஞ்சே நினை

[இழவாடுதல்-துக்கம் கொண்டாடுதல்; விழ வாடுதல்-விழாக்கள் நிகழ்த்துதல்; மழவர்கள்

என்னும் ஒருவகை வீரர்கள் வாழ்ந்ததன் காரணமாக 'மழவர்பாடி' என வழங்கிய பெயர் மழபாடி எனச் சிதைந்தது; "மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே" என்பது சுந்தரர் தேவாரம்.]

19. நாம் முன்னே செய்த தீவினைகள் ஆகிய ஊழ்வினைப் பயன்கள், வஞ்சக முறையில் வந்து நம்மை அடைந்து வருத்துவதற்கு முன்பே, கொள்ளிட நதியின் தெற்கேயுள்ள **திருவாப்பாடி** என்னும் தலத்திலே யுள்ளவனும், தெய்வத் தன்மை வாய்ந்த வேதங்கள் நான்கினை யும் தன்னுடைய திருவாயினாலே பாடிய வனும் ஆகிய சிவபிரானின் திருவடிகளை நினைத்து, நீ வழிபடவல்லையா?

உள்ளிடத்தான் வல்லையே?
நெஞ்சமே! ஊழ்வினைகள்
கள்ளிடத்தான் வந்து
கலவாமுன்,-கொள்ளிடத்தின்
தென்றிருவாப் பாடியான்
தெய்வமறை நான்கனையும்
தன் திருவாய்ப் பாடியான் தாள்

[உள்ளிட-நினைக்க; வல்லையே? - உன்னால் முடியுமா? உனக்கு வல்லமையுண்டா?; கள்ள + இடத்தான் (கள்ளிடத்தான்)-வஞ்சக மான முறையில்; தென் திருவாப்பாடி என்பது சண்டேசுர நாயனார் ஆக்களை மேய்த்து, மணலாற் சிவலிங்கம் செய்து வழிபட்ட தலம். தன் + திரு + வாய் + பா டி யா ன்-தன்னுடைய திருவாயினாலே பாடியருளிய சிவபெருமான்.]

20. என்னுடைய நெஞ்சமே! உன்னை மிகவும் பணிந்து தாழ்ந்தும் கூட, வேண்டிக் கொள்ளுகின்றேன். நான் சொல்லுவதனை நீ காது கொடுத்துக் கேட்பதாக இருந்தால், காலம் இருக்கும் போதே, வலிய நெஞ்சம் பொருந்திய-பெரிய-அசைவினையுடைய கஜாசுரன் என்னும் யானையைக் கொன்று அதன் தோலை யுரித்தவனும், வளப்பம் பொருந்திய **காஞ்சி** மாநகரத்திலுள்ள **திருவேகம்பம்** என்னும் கோயிலிலுள்ளவனும் ஆகிய சிவபெருமானை, வாழ்த்தி வணங்கு.

என் நெஞ்சே! உன்னை
இரந்தும் உரைக்கின்றேன்!
கன்னம்செய் வாயாகில்,
காலத்தால்,-வன்னெஞ்சேய்
மாகம்பத் தானை
யுரித்தானை, வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு.

[கன்னம்-காது; கன்னம் செய்தல்-காது கொடுத்துக் கேட்டல்; வல் + நெஞ்சு + ஏய்; மா + கம்பத்து + ஆனை; கம்பம்—அசைவு, தூண் எனினும் ஆம்; ஏகம்பம்-காஞ்சியிலுள்ள கோயிலின் பெயர்; ஏகம்பத்தான் + ஐ; இறைஞ்சு—துதித்து வழிபடு.]

(20) கைகளை ஊன்றிக் கொண்டு, கண்கள் சுருங்கிக் குழிவிழுந்து, கால்கள் தடுமாற, மற்று ஒரு மரத்தின் கொம்பை ஊன்றிக் கொண்டு, வாயைக் குதட்டும் நிலையில் முதுமை யடையும் முன்பே, மூன்று புரங்களையும் நெருப்போடு கூடிய அம்பினாலே அழித்தவனும், **திருப்பனந் தாள்** என்னும் தலத்திலுள்ள **தாடகேச் சுரம்** என்னும் திருக்கோயிலில் உள்ள வனும் ஆகிய இறைவனின் திருவடி களைத் துதிப்பாயாக!

கரம்ஊன்றிக் கண் இடுங்கிக்
கால்குலைய, மற்றோர்
மரம்ஊன்றி வாய்குதட்டா
முன்னம்,— புரம்மூன்றும்
தீச்சரத்தால் செற்றான்
திருப்பனந்தாள் தாடகைய
ஈச்சரத்தான், பாதமே, ஏத்து!

[இடுங்குதல்—சுருங்குதல்; குலைதல்-தடுமாறுதல்; மரம்—கோல்; வாய் குதட்டுதல், பற்கள் விழுந்து விட்ட தன்மையைக் குறிக்கும்; தீ—நெருப்பு; சரம்—அம்பு; தீச்சரம்—நெருப்பு ஆகிய அம்பு; செற்றான்—அழித்தவன்; திருப்பனந்தாளில் உள்ள கோயிலுக்குத் தாடகை ஈச்சரம் என்று பெயர். தாடகை என்ற பக்தை ஒருத்தி வழிபட்டு அருள் பெற்றமை பற்றி, அப் பெயர் ஏற்பட்டது. இவள் இராமாயணத்தில் கூறப்படும் தாடகையல்லள். "பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே" எனச் சம்பந்தர் தமது பதிகத்திற் குறிப்பிட்டுள்ளார்.]

தொண்டை நாட்டுத் திருப்பதியநுபவம்

மகாவித்துவான். P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள், காஞ்சிபுரம்.

(முன் இதழ்த் தொடர்ச்சி)

விஷயம் கேட்கிறவன் சிறிது வெறுப்போடிருப்பதாகத் தெரிய வந்தாலும் வக்தாவுக்கு மேன்மேலும் சொல்ல வாயெழும்பாது; ச்ரோதா ப்ரஸந்நமுகனாகத் தென்பட்டால் அபூர்வமான விஷயங்களும் 'என்னைக் கொள்' 'என்னைக் கொள்' என்று முற்பட்டு நினைவுக்கு வந்து நிற்கும். அவற்றையெல்லாம் சொல்லியே தீர வேண்டியதாகும். இங்கு 10, 11 ஆகிய இரண்டத்யாயங்களிலும் சொல்லப் புகுகிற விஷயங்கள் கீதா சாஸ்த்ரத்தினுள் ஸாரங்களாயிருப்பதால் இவற்றைச் சொல்லத் தொடங்கிய போதே அர்ஜுநன் தன்னுடைய அவாவை அதிகமாகக் காட்டினானென்பது ''ப்ரீயமாணாயதே'' என்பதனால் விளக்கப்படுகிறது. அவன் ப்ரீதனாகத் தென்படாமற் போனாலுங் கூட அவனுடைய ஹிதத்தை யுத்தேசித்துத் தான் சொல்லியே தீரப்போகிறதாகக் காட்டப்படுகிறது. ''வக்ஷ்யாமி ஹிதகாம்யயா'' என்பதனால். ஆக, இவ்விரண்டத்யாயங்களிலும் தெரிவிக்கப்படுகிற அர்த்தங்கள் ப்ரியங்களுமாய் ஹிதங்களுமாயிருக்குமென்று ஆரம்பத்திலேயே அறிவிக்கப்பட்டதாயிற்று. (10-19) ''ஹந்த தே கதயிஷ்யாமி விபூதீ ராத்மநச்சுபா:, ப்ராதாந்யத: குருச்ரேஷ்ட! நாஸ்த் யந்தோ விஸ்தரஸ்ய மே'' என்று, அர்ஜுநா! என்னுடைய மிகவழகிய விபூதிகளை உனக்குச் சொல்லுகின்றேன். எல்லாவற்றையும் சொல்லுவதென்றால் அவற்றுக்கு முடிவே கிடையாமையாலே சொல்லப் போகாது; உன்னால் கேட்கவும் போகாது; ஆகையாலே முக்கியமாகச் சிலவற்றைச் சொல்லுகிறேன் கேளாய் என்று சொல்லி, (21)* ஆதித்யாநாமஹம் விஷ்ணு:* என்று தொடங்கி முப்பத் தொன்பதாவது ச்லோகமளவும் சொன்னான். இவையெல்லாம் கேட்ட அர்ஜுனன் (11-1 ல்)* யத் த்வயோக்தம் வசஸ் தேந மோஹோயம் விகதோ மம* என்று, கண்ணா! நீ சொன்னவற்றையெல்லாம் கேட்டு என்னுடைய மோஹமெல்லாம் தொலைந்தது என்று சொல்லி, (11-3 ல்) *த்ரஷ்டுமிச்சாமி தேரூபமைச்வரம் புருஷோத்தம* என்று பகவானுடைய அஸாதாரண ரூபத்தைக் காண்பதிலே தனக்கு விருப்பமிருப்பதாக வெளியிட்டான். அவனுக்குக் கண்ணபிரான் விச்வரூபம் காட்டியருளத் திருவுள்ளம் பற்றி அதை ஊனக் கண்ணாலே காண முடியாதாகையால் அது காண்கைக்காக திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்தருள விரும்பி ''திவ்யம் ததாமி தே சக்ஷு: பச்யமே யோகமைச்வரம்'' என்று சொல்லி திவ்ய சக்ஷுஸ்ஸைக் கொடுத்து விச்வ ரூபத்தை அற்புதமாகக் காட்டியருளினான். ஆக, பத்தாமத்யாயத்தில் விபூதி விஸ்தாரத்தைப் பேசி, பதினோராமத்யாயத்தில் விச்வ ரூபத்தைக் காட்டியருளினதாயிற்று. இவையெல்லாம் எம்பெருமானுடைய உடைமைகள், இவை அஸத்யமென்பது அத்வைதிகளின் கருத்து. உண்மையாக அஸத்யமாகில், இவற்றைக்கண்ட அர்ஜுநன் முடிவாகச் சொல்லுகிற வார்த்தை அப்படியிருக்க முடியாது. அந்த வார்த்தை ஏதெனில் (11-40 ல்) ''அநந்த வீர்யாமித விக்ரமஸ்த்வம் ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:'' என்பது-இவ்விடத்திலே நாம் ஸ்வாமியினுடைய பாஷ்யத்திலுள்ள ஸ்ரீஸூக்தியை மேலே யெடுத்துக் காட்டுவோம்; அந்த ஸ்ரீஸூக்தியிருக்கட்டும்; மூலத்தை மாத்திரமே பார்ப்போம்; பார்க்குமளவில் ''ஸர்வம் கலு

இதம் ப்ரஹ்ம-ஐததாத்ம்யமிதம் ஸர்வம்—தத்த்வமஸி'' என்பன முதலான உபநிஷத் வாக்யங்களை விசிஷ்டாத்வைதிகள் எவ்விதமாக நிர்வஹிக்கிறார்களோ அவ்விதமாகத்தான் நிர்வஹிக்க வேண்டு மென்பது கீதாசார்ய ஸம்மதமாகத் தேறுகின்றது. மேலே குறித்த ச்ருதி வாக்யங்களை நம்மவர்கள் நிர்வஹிக்கும் ப்ரகாரத்தை பட்டர் ஸ்ரீரங்க ராஜஸ்தவ—உத்தர சதகத்தில் (23) "ஸ்தித்யுத்பத்தி ப்ரவ்ருத்தி" இத்யாதிச்லோகத்தில் சுருங்கக் காட்டியுள்ளார். அங்கு எம்முடைய வியாக்கியானத்தில் விரிவு காணலாம். அந்த ச்லோகத்தின் உத்தரார்த்தத்தில் மேலே குறித்த உபநிஷத் வாக்யங்கள் மூன்றையும் அடைவே யெடுத்து காட்டியுள்ளார்.

ப்ரக்ருத கீதா ச்லோகத்தில் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்றதற்குப் பொருள் யாதெனில்; பகவானே! உலகிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் நீயேயாக வேதங்களிற் சொல்லியிருப்பதற்குக் காரணம் எல்லாவற்றிலும் நீ ஆத்மாவாக வியாபித்திருப்பது தான்—என்பதாம். இங்கு கீதா பாஷ்ய ஸ்ரீஸூக்தி வருமாறு— "...வாயுர்யமோக்நிரித்யாதி ஸர்வ ஸாமாநாதிகரண்ய நிர்தேசஸ்ய ஆத்மதயா வ்யாப்திரேவ ஹேதுரிதி ஸுவ்யக்தமுக்தம்...' என்று, கண்ணபிரான் சொன்ன விபூதி விஸ்தாரங்களைக் கேட்டும், காட்டின விச்வருபத்தைக் கண்டும் நின்ற அர்ஜுநன் "கண்ணா! உண்மையில் இல்லாதவற்றை யெல்லாம் ஏறிட்டுக் காட்டுகிறாயே!" என்று சொல்லியிருக்க வேண்டும், அத்வைதிகளின் கொள்கை உண்மையாயின். அர்ஜுநன் அப்படிச் சொல்லாமல் (ச்லோ. 38 ல்) "த்வயா ததம் விச்வமநந்தரூப!" என்றும் "ஸர்வம் ஸமாப்நோஷி ததோஸி ஸர்வ:" என்றும் சொல்லியிருக்கையாலே ப்ரபஞ்சமெல்லாம் ஸத்யமென்றும் ஒன்றுகூட பொய்யல்ல வென்றும் நிஸ்ஸந்தேஹமாகத் தேறுகின்றது. ஆக இவ்வத்தியாயங்களிரண்டும் அத்வைதிகளின் வாதத்தை நிராதாரமென்று நிருபிக்கப் போதும்.

இனி பன்னிரண்டாமத்யாயத்திற் சிறிது அநுபவிப்போம். இதில் 18, 19 ச்லோகங்கள் ஸாரமானவை. அவையாவன— "ஸமச் சத்ரௌ ச மித்ரே ச ததா மாநாவமாநயோ:, சீதோஷ்ண ஸுக துக்கேஷு ஸமஸ் ஸங்க விவர்ஜித:, துல்ய நிந்தாஸ்துதிர் மௌநீ ஸந்துஷ்டோயேந கேநசித், அநிகேத: ஸ்திரமதிர் பக்திமாந் மேப்ரியோநர:'' என்பன. பகைவனிடத்திலும் நண்பனிடத்திலும் ஒரே விதமான பாவனை யுள்ளவனும், பஹுமானம் நேர்ந்தாலும் அவமானம் நேர்ந்தாலும் அவற்றையும் துல்யமாகவே பாவிப்பவனும், சீதோஷ்ணங்களையும் ஸுகதுக்கங்களையும் ஸமமாக நினைப்பவனும், எதிலும் பற்றில்லாமலிருப்பவனும், பிறர் நிந்திப்பதையும் துதிப்பதையும் துல்யமாக நினைப்பவனும், ஒருவரோடும் பேசாமலிருப்பவனும், ஏதேனுமொன்றினால் ஸந்துஷ்ட சித்தனாயிருப்பவனும் உறுதியும் பக்தியுமுடையவனுமானவன் எனக்குப் பரம ப்ரீதி பாத்ர பூதன் என்று சொல்லுகிறான் கண்ணபிரான். இப்படிப்பட்ட அதிகாரி உலகில் மிகவும் துர்லபனேயாயினும் இப்படி இருக்க ஆசைப்படவேணுமென்பதற்காகவே இஃது அருளிச் செய்தபடி.

இனி பதின்மூன்றாமத்யாயத்திற்குச் செல்வோம். இதில் முதல் ச்லோகமும்—இரண்டாம் ச்லோகமும் சிறிது விபரீத வுணர்ச்சியை உண்டாக்குவது போலுள்ளது. இங்கு ஸ்வாமியினுடைய பாஷ்யமும் அதற்கு டீகையான தாத்பரிய சந்த்ரிகையும் மிக மிக விரிவாக அமைந்திருக்கின்றது. மூலச்லோகங்களாவன: —"இதம் சரீரம் கௌந்தேய க்ஷேத்ரமித்யபிதீயதே, ஏதத்யோ வேத்திதம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்வித:'' என்பது முதல் ச்லோகம். இனி இரண்டாவது ச்லோகமாவது—"க்ஷேத்ரஜ்ஞஞ்சாபி மாம் வித்தி ஸர்வக்ஷேத்ரேஷு பாரத! க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞயோர் ஜ்ஞாநம் யத்தத் ஜ்ஞாநம் மதம் மம'' என்பது. இங்கு (ஆபாதப்ரதீதியில்) மேல் நோக்கில் என்ன தோற்றுகிறதென்றால், க்ஷேத்ர மென்னப் படுகிற அசேதநமும் க்ஷேத்ரஜ்ஞ னென்னப்படுகிற சேதநனும் ஆகிய இரண்டையும் அர்ஜுநா! நானாக அறிந்துகொள் என்னப்படுகிறது.

(தொடரும்)

சந்தா நேயர்களுக்கு வேண்டுகோள்

"திருக்கோயில்" இதழின் **பழைய சந்தாத்** தொகைகளைச் செலுத்தாமல் இருப்பவர்கள், அவற்றை உடனே விரைந்து அனுப்பியுதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சந்தாத் தொகைகள்,

"உயர் திரு. அறநிலைய ஆணையர் அவர்கள்,
அறநிலைய ஆட்சித் துறை அலுவலகம்,
நுங்கம்பாக்கம், சென்னை-34."

என்னும் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். அங்ஙனம் அனுப்புங்கால், அவரவர்களின் **சந்தா எண்கள்** தவறாமல் குறிப்பிடப் பெறுதல், மிகவும் இன்றியமையாதது.

சந்தா நேயர்கள், முழுவிவரங்கள் கொண்ட தங்கள் சரியான தபால் முகவரியையும் கூட, மணியார்டர் பாரத்தின் பின்புறம் திருத்தமாக எழுதி யனுப்புதல் வேண்டும்.

இதழுக்குச் சந்தா செலுத்திவரும் உறுப்பினர்களாக இருந்துவரும் கோயில்களாயின், ஒரே பெயரில் பல கோயில்கள் பல இடங்களில் இருப்பதனால், **கோயிற் பெயர்—ஊர்ப் பெயர்—தாலுக்காவின் பெயர்—ஜில்லாவின் பெயர்** ஆகிய விவரங்களுடன், **சந்தா எண்ணும்** தவறாமற் குறிப்பிட்டு எழுதி அனுப்புதல் மிகவும் அவசியம்.

சந்தா நேயர்கள் தமது சந்தா நிலுவைகளை, மேலும் காலதாமதம் இன்றி **உடனே** விரைந்து செலுத்தி யுதவும்படி, பெரிதும் வேண்டிக் கொள்ளப்படுகின்றார்கள்.

—**ஆசிரியர்.**

ஓம்

ஆகம சிற்ப வியாச பாரத கிராமியக் கலைகளின்

மூன்றாவது பெருவிழா மாநாடு

ஜகத்குரு காமகோடி பீடம் **ஸ்ரீலஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகள்** அவர்களின் திரு முன்னிலையில், பெரிய காஞ்சிபுரம் **சுங்காபாய்** சத்திரத்தில் 21—9—64 முதல் 25—9—64 வரை நடைபெறும். பக்தியையும் தர்மத்தையும் பரப்பி விளக்கும் கலை நிகழ்ச்சிகளில், நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் அழைக்கப் பெறுகின்ற சிறந்த அறிஞர்கள் கலந்து கொள்வார்கள். **ஆகமப் புலவர்கள், சிற்பிகள், சிவாசாரியர்கள்,** ஆகியவர்களும் இப் பெருவிழாவில் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள். தூரக் கிழக்கு நாடுகளிலிருந்தும் கூட, பல பிரதிநிதிகள் வந்து இவ்விழாவை அணியுறுத்துவார்கள்.

காஞ்சி காமகோடி வியாச பாரத கலாதி சதஸ் சமாஜம் இப் பெருவிழாவிற்கு ஏற்பாடுகள் செய்து வருகின்றது.

ஸ்ரீ வைஷ்ணவ குருபரம்பரை

திரு. K. பட்சிராஜன், B.A., B.L., திருநெல்வேலி

(முன் இதழ்த் தொடர்ச்சி)

எம்பெருமானாரும் வந்தவரின் வைஷ்ணவ வேஷத்தைக் கடாக்ஷித்து 'தேவரீர் ஆருடைய சம்பந்தம்?'' என்று வினவ அவரும் ''அநந்தாழ்வான் சம்பந்தம்'' என்று பதிலளித்தார். உடையவர் அவர் தனியனைச் சொல்லும் என்ன அவரும் அநந்தாழ்வான் தனியனான ''அகிலாத்ம குணாவாஸம் அஞ்ஞான திமிராபஹம்: ஆச்ரிதானாம் ஸுசரணம் வந்தே (அ) நந்தார்ய தேசிகம்'' என்ற தனியனைக் கூறி மறைந்தார். உடையவர் வியப்பு மேலிட்டவராய் ''திருவேங்கட முடையான் தானே இப்படிக் கொண்டு வந்து ப்ரஸாதித்தான்'' என்று தேறி அவனுடைய எளிவருமியல் புகளிலே ஆழங்கால்பட்டுப்ரஸாதத்தையும் கனியையும் உண்டு, கனியின் வித்தை அங்கே ஓரிடத்திலே ஊன்றியருளினார்.

எம்பெருமானார் திருப்பரியட்டப் பாறையளவு எழுந்தருளியுள்ளார் என்று கேள்வியுற்ற பெரிய திருமலை நம்பி திருவேங்கடமுடையானுடைய தீர்த்தப் ப்ஸாதங்களை எடுத்துக் கொண்டு எதிரே வந்து உடையவருக்கு அளிக்க உடையவர் அவர் திருவடிகளிலே சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி அவற்றை ஏற்றுப் பெரிய திருமலை நம்பிகளை நோக்கி ''ஸ்வாமீ! இவனுக்காகத் தேவரீர் இவ்வளவு தூரம் வந்து ச்ரமப் படவேண்டுமா? யாரேனும் சிறியாரை வர விடலாகாதா?'' என்று விநயத்தோடு விண்ணப்பித்தார். நம்பிகள் அருள் நகை செய்து ''அப்பனே! இந்தத் திருவேங்கடப்பதியிலே நாலு திரு வீதியிலும் ஆராய்ந்து பார்த்தேன், இவனில் சிறியவர்களைக் கண்டிலேன் ஆகையால்இவனே வந்ததாயிற்று'' என்றருளிச் செய்தார். உடையவரும் அவ் வார்த்தையிலுள்ள ரஸத்தை யறிந்து உள்ளம் வியந்தார்.

உடையவர் கல்வேலி யளவிலே எழுந்தருளத் திருமலையிலுள்ள ஜீயர்களும், ஏகலிங்கிகளும், ஸ்ரீவைஷ்ணவர்களும் ஸ்தானத்துறைவரும் பிறரும் அனைத்துக் கொத்திலுள்ளாரும் எதிர் கொண்டு உடையவரை வரவேற்று வழி நடத்தினர். உடையவர் நேரே வைகுந்தன் திருவாசலிலே சென்று தண்டன் சமர்ப்பித்துத் திருக்கோனேரியில் நீராடி, அவன் ஈராறு நாமம் உரை செய்து திருமண் காப்புகளணிந்து, நாலு வீதியும் வலமாக வந்து ''சிந்தாமணிகள் பகரல்லைப் பகல் செய்'' என்றபடியே மணிகள் ஒளிவிடும் மாடகூட தோரணகோபுரப்பிரகாரங்களை ஸேவித்து அங்கே தம் கைங்கர்யமானதும் அநந்தாழ்வானால் நிறுவப் பெற்றதுமான 'இராமாநுஜன்' என்ற நந்தவனத்தைக் கடாக்ஷித்து அதனை நிறுவிய அநந்தாழ்வானை நோக்கி ''வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக'' என்று அவரை அருகழைத்துக் கருணையோடு அணைத்துக்கொண்டு அங்குள்ள 'தேனேய் பூம் பொழில்' என்றும் ''விரையார் பொழில்'' என்றும், ''கோல் தேன் பாய்ந்தொழுகும் குளிர் சோலை'' என்றும் சொல்லப்படுகிற மொய்த்த சோலைகளையும், 'செண்பகமாய் நிற்கும் திருவுடையேனாவேனே' என்ற செண்பகம், பாடலம் சுரபுன்னை, மற்றும் மல்லிகை முல்லை இரு

வாட்சி, மேலும் "சேருர்சுனே" களிலுள்ள தாமரை அல்லி நீலோத்பலம் முதலிய "நீர்ப்பூ நிலப்பூ மரத்தில் ஒன்று" இவற்றைக் கண்டுகளித்து சுனேகளிலே மீனுய்ப் பிறந்து வாழ் வெய்திய வரையும், கோனேரி வாழும் குருகு நாரைகளேயும் சோலே 'நடமாடித் தோகை விரிக்கும்' மயில்களேயும், தென்னு தென வென்று முரலும் வண்டுகளேயும் பார்த்து வந்து "நிலங்கோட்டிடைக் கொண்டஎன்னப்பன் ஞானப் பிரானே ஸேவித்து, "அவாவறச் சூழ்ந்தேன்" திருவாசலிலே தண்டனிட்டு, "அடியாகும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்" குலசேகரன்படி துடக்கமான படிகளேக் கடந்து உள்ளே சென்று அத்தாணிப் புளியை வணங்கி, ஸ்ரீபலி பீடத்தருகே விழுந்து வணங்கி 'யமுனேத் துறைவர்' என்ற திருப்பூ மண்டபத்தைத் தரிசித்து வலமாக வந்து ஸ்வாமி புஷ்கரிணியிலே தீர்த்தம் கொண்டு, செண்பகத் திருவாசலுக்குள்ளே புக்கு சேவித்து, திருமடைப்பள்ளி,வேள்விச் சாலே, திருமாமணி மண்டபம் இவற்றைத் தெண்டனிட்டுச் சேனே முதலியாரை அடிபணிந்து வேங்கடத்துறைவான் திருமுன்பே எழுந் தருளினர்.

அங்ஙனம் எழுந்தருள்பவர் ஆனந்த
நிலேய மென்னும் திவ்விய
விமானத்தைக் கண்டு அநுபவித்து,
"திலத முலகுக்காய் நின்ற"

"தண்ணர் வேங்கட விண்ணேர் வெற்பனுன", எண்ணம் புகுந்து தித்திக்கும் அமுதனுடைய" மணி நூபுராதி கிரீடாந்தமாக திவ்விய ஆபரணங்களோடும், அழகிய மாலே பீதாம்பரங்களோடும். உருவிலக்கணங்களோடும் நாற்றிசையும் ஒளி விட்டு விளங்கும் திவ்விய விக்கிரகத்தை அடி முதல் முடியீருக அவயவ அவயவமாக அழகை அநுபவித்து மெல்ல மெல்லக் கிட்டி "அலர்மேல் மங்கை உறை மார்பா!" "புகல் ஒன்றில்லா அடியேன் உன் அடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே" என்று கூறி அப்பன் பூவார் கழல்களேக் கிட்டிநின்று உடலெல்லாம் புளக முறக் கூப்பிய கையராய் அவனே அநுபவித்து நிற்கப் பெருமானும் அர்ச்சக முகமாக உடையவருக்குத் தம் சடகோபனேயும் தீர்த்தப் ரஸாதங்களேயும் சாதித்தருளினுன். உடையவரும் அவற்றைப் பெருப் பேருக ஏற்று மீண்டும் வேங்கடத்தப்பனேத் தம் கண்களாரப் பருகி இது ஸ்ரீவைகுண்ட மாயன்ருே இருப்பது! என வியந்தார். பின்னர் அழகப்பிரானுடைய ஸ்ரீமகாபலித்திரு நாளேயும் சேவித்து "விண்ணேர் வெற்பா"தலாலே தாம் அங்கே அங்கே தங்க வொண்ணுது என்றுருகிக் கீழே இறங்கிவிட வேண்டும் என்று உத்தேசித்தார்.

இங்ஙனம் உடையவர் திருமலேக்குச் சென்று வேங்கடத்தப்பனேச் சேவித்த வரலாற்றில் தம்முள்ளத்தைப் பறி கொடுத்த வடிவழகிய நம்பிதாஸர்,

"உள்ளம் கரைய உள்புகுந்து அன்று
உலகமுண்டான் தனே நோக்கிப்
பள்ளமடையில் உடை புனல் போல்
பத்தியாய பேரன்பின்
வெள்ளம் மடுப்ப உடையவரும்
விளங்கு ஞானபரவசராய்க்
கள்ளங் கடிந்தாருடன் வளரும்
கருணேத் திருவேங்கடத் துறையும்"

"சீரார் நாற்ருேளின்ன முதைச்
சிவனும் அயனும் காணுத
காரார் அமுதே! செங்கனிவாய்க்
கமல நயனக் கருமணியே!
கூராராழி சங்கினேயோர்
கோவுக்களித்த கோவிந்தா!
நாராயணனே! எவ்வுயிர்க்கும்
ஞானம் நல்கும் நலஞ்சுடரே!"

"என்ன "ஒழிவில் காலத்தை"
எடுத்துக் கதறி யாங்கதற்பின்
மன்னு முலகமுண்ட பெரு
வாயான் தன்னே வழுத்தியதில்
அன்னே அலர்மேல் மங்கைதனே
முன்னிட்டடிக் கீழுறப் பணிந்து
தன்னே யனேயான் சரண் புக்குச்
சாற்றும் கமல மலரடிகள்"

"ஆதியாகச் செம்பொன் முடி
யளவு நோக்கியனுபவித்து
நீதிக்கடலாம் உடையவரும்
நின்று கரைந்து நெக்குருகிப்

பேதியாத தொண்டரொடும்
பெற்றேமேயிப் பெரும் பேறென்று
ஓதிக்கண்கள் புனல் சொரிய
உள்ளம் களிப்ப உவந்தாடி''

''நாவாற்பாடி மனத்தாலே
ஞானச்சுடரை உள்ளிருத்திப்
பூவார்கழலைப் பின்னுமுறப்
பொருந்த நோக்கி விழுந்திறைஞ்சி
ஓவாதன்பருட னெழுந்தாங்
குருகிக் கசிந்த பேரன்பால்
தேவாகாத்தி என்னுயிரைத்
திருவேகாத்தி எனச் செப்பி''

''நின்று திருமஞ்சனகாலம்
நிகரிலமுது செய்காலம்
ஒன்று மொழியாதடியருட
னெருங்கே கூடியனுபவித்து
நன்றி சேரும் மனத்தினராய்
ஞானம் மிகவுமுடையவராய்
ஒன்றுமிந்தப் படி மீதில்
ஓங்கும் பரமபதம் ஈதே!''

''என்ன மறைகள் ஆழ்வார்கள்
இசைத்தபடியே கண்டுய்ந்தேன்
மன்னும் விண்ணோர் வெற்பிதுவாம்
அதனுலிதனின் மன்னுமவர்
உன்னும் நித்தர் முத்தர் என
உரைக்கும் வேதமதனுலே
துன்னும் அழுக்குச் செடியாக்கை
சுமந்து நாமும் ஈங்கிருத்தல்''

''தக்கதன்றென்று டனிழியத்
தலைவன் நினைந்தான்''

என்று வாயும் மனமும் குளிரப் பரவசத்தோடு பாடி அநுபவிக்கிறார்.

இக்குறிப்பை அறிந்தார் பெரிய திருமலை நம்பி. உடனே எம்பெருமானரை நோக்கி'' உமது உள்ளத்தில் ஓடும் எண்ணம் தெரிந்து வியப்புறுகின்றேன். எப்போதுமே ஒரு திவ்விய தேசத்தில் புக்கவர்கள் மூன்று நாட்கள் தங்கி விடைகொள்ளலே சீரிது என்று நூல்கள் பறையறைகின்றனவே! அதெல்லாம் அறிந்த நீரே இப்படி விரைவது தகுமோ?'' என்று வினவினர். உடையவரும் நம்பிகளின் சாதுரியத்தை மெச்சி அவர் விருப்பின்படி அங்கேயே மூன்று நாட்கள் வேறே எவ்வித அமுதும் உண்ணுமல் உண்ணும் சோறு பருகுநீர் எல்லாம் அப்பொழுதைக் கப்பொழுது ஆராவமுதாய்த் திகழும் வேங்கடத் தப்பனே என்று கொண்டு அவனை சதாகாலமும் சேவித்து அனுபவித்தார். மூன்ரும் நாள் நம்பியுடன் ஸ்ரீநிவாஸன் ஸன்னிதி சென்று திருப்பல்லாண்டை அநுஸந்தானம் செய்து காப்பிட்டு அஞ்சலித்து நிற்க அப்பனும் உகப்புடனே தீர்த்தப்ரஸாத பூர்வகமாகத்தன் பாதபங்கயங்களை அவர் தலைக் கணியாய் அணிவித்துத் தம் தாமரைத் தடங்கணில் கருணை தேக்கெறியக்கடாக்ஷித்து ''எம்பெருமானரே! உமக்கும் உம்முடையார்க்கும் நம் உபய விபூதிச் செல்வங்களையும் தந்தோம் என்று நம்முடைய தெற்கு வீட்டிலே முன் சொல்லியிருக்கிறோமன்றோ! அதை இங்கும் சொன்னோம். கொள்ளும்'' என்று தம் திருப்பவளச்சோதி வாய் திறந்து அருளிச்செய்தான், உடையவரும் 'என்ன மாதவம் செய்தனன் கொல் அடியேன்' என்று அதனை மகாப்ரஸாதமாக விநயத்தோடு பெற்று அப்பனிடம் விடைகொண்டு திருமலையினின்றும் கீழிறங்கித் திருப்பதியில் பெரியதிருமலை நம்பி திரு மாளிகைக் கெழுந்தருளி அங்கே அமுது செய்தருளினர்.

பின்னர் எம்பெருமானர் பெரியதிருமலை நம்பி சன்னிதியிலே இதிகாசங்களில் தலையாய ஸ்ரீ ராமாயணத்துக்கு அர்த்தம் கேட்டுக் கொண்டு ஒரு வருடகாலம் தங்கி இருந்தார். அக்காலத்தே ஸ்ரீ கோவிந்தப் பெருமாள் (முன்காளத்தியருகே சைவத்தலைவராயிருந்து நம்பிகளால் 'தேவுமெப்பொருளும் படைக்க' என்ற பாசுர வியாக்கியான மூலம் திருத்திப் பணி கொள்ளப்பட்டவரும் உடையவரின் சிறியதாயார் புதல்வருமான கோவிந்தபட்டர்) என்பவர் நம்பிகள் திருமாளிகையில் எல்லாக் கைங்கர்யங்களையும் செய்து கொண்டு போரும் சீர்மையை நோக்கி உடையவர் அவரிடத்திலே மிகவும் பிரீதியுடனிருந்தார். ஒரு நாள் அவர் திருமலை நம்பிக்குத்

திருப்பள்ளி திருத்திவைக்கும் போது முதலில் தாம் அப்படுக்கையில் படுத்துப் புரண்டு அனுபவித்துப்பின் எழுந்து வந்தார். இதைக்கண்ட எம்பெருமானுர் 'இது அடுக்குமோ' என்று பதறினர். நேரே நம்பிகளிடம் சென்று தாம் கண்டதை மிகுந்த மனத்தாங்கலோடு விண்ணப்பித்தார். நம்பியும் கோவிந்தரை அழைத்துக் கோவிந்தப்பெருமாளே! நீர் நமக்காகத் திருத்திய படுக்கையிலே முந்துறப்படுத்தெழுந்தீர் என்று கேட்டோம். இப்படிச் செய்யத்தகுமோ? இதற்குப் பலன் இன்னதென அறிந்திருப்பீரோ இல்லையோ? சொல்லீர்'' என்று கேட்டார். கோவிந்தப் பெருமாளும். ''ஸ்வாமீ! அது உண்மையே. நரகமே இதற்குப் பலன் என்றறிந்தே இருக்கிறேன்'' என்று சாவதானமாக விடையளித்தார். நம்பிகள் ''அதறிந்துவைத்தும் நீர் இப்படிச் செய்வானேன்?'' என்னக் கோவிந்தர் ''தேவரீர் திருமேனியில் யாதாமொன்று உறுத்தல், ஊர்தல் கடித்தல் செய்யாமல் தேவரீர் நிம்மதியாகத் திருக்கண் வளரப் பெற்ருல்அதுவே அடியேனுக்குப் ப்ராப்ய ப்ராபகங்கள் போலேகாணும். அதற்காக முந்துற அடியேன் படுத்துப் பரீக்ஷித்தது. அதற்குப் பலன் எதுவாயினும் அடியேனுக்குச்சம்மதமே'' என்று விண்ணப்பித்து நின்ருர். நம்பிகள் தம் திருமேனியில் அவருக்கிருந்த ஆதராதிசயத்தை மெச்சியுகந்து முறுவலித்தார். இவையனைத்தையும் கண்டு கேட்டு அருகே நின்ற எம்பெருமானுர் கோவிந்தருடைய ஆசார்ய ப்ரபத்தி விசேஷத்தை வியந்து போற்றி அவரிடத்தே முன்னையினும் பிரீதியுடையரானுர்.

பின்னொரு நாள் உடையவர் நம்பிகளின் திரு நந்தவனத்தைப் பார்வையிட்டு வந்தார். சற்றுத் தூரத்தே கோவிந்தப் பெருமாள் நந்தவன கைங்கர்யம் செய்து கொண்டிருந்தவர் சடக்கெனக் கையை உதறி ஒருபுறம் விரையக் கண்டார். உடையவர் விஷயம் என்ன வென்றறியாதே அவர் என்ன செய்கிருர் என்று கவனித்து நிற்கையில், கோவிந்தப் பெருமாள் குனிந்தமர்ந்து அங்காந்து விரிந்த வாயோடு படம் தூக்கி நின்ற ஒரு சர்ப்பத்தின் வாயிலே கைவிட்டு ஏதோ செய்து கையெடுக்கப் பாம்பும் சென்று மறைய, கோவிந்தர் நேரே போய் நீராடி மீண்டும் கைங்கர்யத்தில் ஈடுபட்டதைக் கண்டார். உடையவர் வியப்பு மேலிட்டு நேரே கோவிந்தரிடம் சென்று ''கோவிந்தப் பெருமாளே நீர் இப்போது என்ன செய்து வந்தீர்?'' என்று கேட்டார். அவரும் நிதானமாக ''ஒன்றுமில்லை ஸ்வாமீ!' ஒரு பாம்பு வாய்திறந்து நாக்கை நீட்டிக் கொண்டு ஏதோ துன்புற்றிருந்தது கண்ணிலே பட்டது; போய்ப் பார்த்தேன். அதன் வாயினுள்ளே அடி நாக்கில் ஒரு முள் ஆழமாகப் பொத்துக்கொண்டிருந்தது. பாம்பினுல் அதனைத் தள்ள இயலவில்லை. நாக்கை உள்ளே இழுக்க முடியாமல் பரதவித்தது. அதனைப் பற்றி உள்ளே பொத்த முள்ளைப் பிடுங்கி எறிந்து விட்டு வந்தேன். வேறென்றுமில்லை'' என்று விண்ணப்பித்தார். கேட்ட எம்பெருமானுர்க்கு வியப்பு மேலும் பெருகிற்று. ''ஆஹா இவரது உயிரன்பு (பூததயை) தான் என்னே!'' என்று ஆச்சரியமுற்றுக் கோவிந்தப் பெருமானின் செயலைப் பாராட்டினுர். இந் நிகழ்ச்சி கோவிந்தர் பால் அவர் ஏற்கனவே கொண்டிருந்த அன்பை மேலும் வளர்த்தது.

சில நாளில் ஸ்ரீ ராமாயணம் பூர்த்தியாகி சாத்துமுறையும் பட்டாபிஷேகமும் இனிது நிறைவேறின. உடையவர் நம்பிகள் திருவடிகளிலே தெண்டனிட்டு ''ஸ்வாமி! தேவரீர் திருவடி வாரத்திலே தங்கி அடியேன் பெரும் பேறு பெற்றேன். இனி திருவரங்கப் பெரு நகரை நோக்கி விடைகொள்ளுகிறேன்'' என்று விண்ணப்பம் செய்தார். நம்பிகளும் ''உடையவரே! அவசரப்படாதீர். இது வரை ஸ்ரீ ராமாயணத்துக்கு இதிகாசம் கிடந்தவாறே ஒரு வகை பொருள் கூறினேம். ஆனுல் அதனுள் ஆழ்ந்து கிடக்கும் அரும்பொருளை உமக்கு இன்னும் அறிவித்தேனில்லை.

ஸ்ரீ ராமாயணம் முழுமையுமே த்வயத்தின் அர்த்தத்தை விவரித்து நிற்பது காட்டுவோம்'' என்று கூறி, வியந்து நின்ற உடையவருக்கு அப்பொருளை விளக்கிக் கூறலானர். (அவ்விளக்கம் முழுமையும் ராமாநுஜார்ய திவ்ய சரிதை என்னும் நூலிலே பரக்கக் காணலாம். அதனைச் சுருக்கமாகக் காண்போம்.) பெரிய திருமலை நம்பிகள் அருளிச் செய்கிறார்.

''வீற்றிருந்து ஏழுலகும் தனிக்கோல் செல்லப் பரம பதத்தினிலே மணிமா மண்டபத்திலே அனந்த கருட விஷ்வக்ஸேனுதி நித்ய சூரிகள் புடைசூழ்ந்து கைங்கர்யம் பரிமாற வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் குலவாயர் கொழுந்தான ஸ்ரீ நப்பின்னைப் பிராட்டி இவர்கள் திருவடி நெருட, இருள் இரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி இனத்துத்தி அணி பணம் ஆயிரங்கள் ஆர்ந்த அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் அணி விளங்கும் உயர் வெள்ளை யணையை மேவியிருந்த ஸ்ரீமந் நாராயணன், தன் லீலார்த்தமாகத் தோற்றுவித்த உபய விபூதிகளில் இந்த ஸம்ஸாரத்திலுள்ளார் நித்த முத்தரைப் போலே நம்மை என்றும் அனுபவிக்கத்தக்க யோக்கியதை உடையவராயிருந்தும் ''இழந்திருப்பதே!'' என்று அங்குள்ள அநுபவங்கள் ஒன்றும் உண்டதுருக் காட்டாதே தான் தனியன் போலே ''ஸஏகாகீ நரமேத'' என்றபடி மிகவும் மனம் நொந்து தான் பெய்த காவான மூவுலகிலுள்ள சேதனர் நிலையை எண்ணமிடலானுன். 'ஏன் இந்தச் சேதனர் இறகொடிந்த பறவை போலே வருந்துகிறார்கள். நாம் பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்து நம்மை யறிந்து வந்தடையத் தக்க கரணகளே பரங்களைக் கொடுத்திருக்கிறோம். ஆனல் அவர்களோ விறகு தறிக்கக் கொடுத்த கத்தி கொண்டு பசுவின் வாலைத் தறிப்பார் போன்றும், கணையெடுக்கக் கொடுத்த கோலால் கண்ணைக் குத்திக் கலங்குவாரைப் போன்றும், ''நாடாத மலர் நாடி நாடோறும் நாரணன் தன் வாடாத மலரடிக் கீழ் வைக்கவே வகுக்கின்று'' என்றும் ''மாயவன் தன்னை வணங்க வைத்த கரணம் இவை'' என்றும் சொல்லுகிறபடியே நம்மை யுணர்ந்து நம் திருவடி கைங்கர்யத்துக்குக் கொடுத்த யாக்கை இது என்று அறிந்து அதன்படி நடவாதே, ஆக்கையின் வழியுழன்று சப்தாதி விஷயங்களுக்கே அக் கரணங்களை உறுப்பாக்கிக் கர்ம வெள்ளத்திலிருந்து பிறவி என்னும் பெருங்கடலில் உந்தப் பெற்று அதில் அலைமோதுண்டு அவதிப் படுகின்றனவே என்று அவற்றின் அவலம் கண்டு அவை நல் வழிப்படக் ''கலைகளும் வேதமும் நீதி நூலும் கற்பமும் சொற்பொருள் தானும் மற்ற நிலைகளும் வானவர்க்கும் பிறர்க்கும் நீர்மையினல் அருள் செய்து'' என்று சொல்லுகிறபடியே சாத்திரங்களை யருளியும் அதன்படி நடவாதே கொல்வன முதலா அல்லன முயன்றும், சாத்திரம் கற்றும் தன் சொருபம் உணராதே தன்னை சுதந்தரனுகப் பாவித்து ஆத்மா பஹாரம் பண்ணித் தன்னினின்று மேலும் விலகுகின்றனவே என்று துக்கித்து, ஓலைப் புறத்துச் செல்லாத ராஜ்யங்களை எடுத்து விட்டுச் செலுத்திக் கொள்ளும் ராஜாக்களைப் போலே நாமே போய்த் திருத்த வேணும் என்று ''மீனோடாமை கேழலரி குறளாய்ப் பின்னுமிராமனுய்'' என்றபடியே தன்னைத் தாழவிட்டுப் பல அவதாரங்களைப் பண்ணினுன், அந்த அவதாரங்களோ வென்னில், மச்சாவதாரம் நீரொழிந்த விடத்தே செல்லாமையாலும், கூர்மாவதாரம் மலைபோன்ற பெருவடிவின தாய் நாட்டிடை நடையாடா மையாலும், வராகாவதாரம் பூமியை உத்தரிப் பித்துத் தாங்குதலிலேயே நின்றதாலும், நரஸிம்மாவதாரம் கழுத்துக்கு மேல் வடிவுவேறு பாடுற்றதாலும், ஸ்ரீவாமனுவதாரம் ஏற்கும் தொழிலிலேயே ஈடுபட்டமையாலும், பரசுராமாவதாரம் பிறவாதபடியாலும், அவ்வவதாரங்களின் உண்மை யுணர்ந்து திருந்துவாரை அவன் கண்டிலன். ஆகவே அனைவர்க்கும் மனத்துக்கினியனுய்த் தன் பெயரையே அவர்கள் பன்னிப் பன்னி உரைக்கும்படி, ஆடவர் பெண்மையை அவாவும்படியான கண்கவர் கட்டழகனுய்த்

தன் வடிவழகாலே திருத்த வேணும்என்று திருவுள்ளம் பற்றித் திருவயோத்தியிலே தசரதன் மதலையாய்த் தாரணியில் தோன்றியருளினான்.

அப்படி அவன் அவதரித்துப் போந்தமையை நான்முகன் 'ரகுவீர சரிதம்' என்ற சதகோடி சந்தஸ்ஸிலே செய்து வைக்க அதனை முழுதும் கேட்டுணர்ந்த நாரத பகவான் உரைக்க ராமசரிதத்தைப் பிரமனருளாலே கண் முன் கண்டு உலகில் எல்லாச் சேதனரும் உய்வகை உணர்தல் வேண்டி வேத உபநிடதப் பொருள்கள் அனைத்தையும் உட்பொதிந்து சாதாரண தர்மங்களையும், விசேஷ தர்மங்களையும் காட்டி, வீடு பேருன தலை சிறந்த பயனை வேண்டுபவனுக்கு அந்தரங்கஉபாயமான சரணுகதி தர்மத்தையும், சரணுகதி செய்யப்பட வேண்டியவனது உயர்வற உயர் நலத்தையும், அனைவர்க்கும் ஒக்க அருளும் அவன் எளிவரும் இயல்புகளையும் சுட்டிக் காட்டுமுறையில் ஸ்ரீராமாயணம் என்ற சிறந்த இதிகாசத்தை வான்மீகி பகவான் கூறியருளினுர்.

அவ் விதிகாசத்திலே, ''யதோ இமாநி பூதாநி ஜாயந்தே'' என்பது முதலாகவரும் வேத வாக்கியங்களை ஒட்டி யுத்த காண்டத்திலே ''வ்யக்த மேஷ மஹா யோகி பரமாத்மா ஸநாதன;'' என்று தொடங்கி, ''தமஸ; பரமோதாதா சங்கசக்ரகதாதர:'' என்றும், விஷ்ணு ஸத்ய பராக்ரம: என்றும் ''பவாந் நாராயணோ தேவ: ஸ்ரீமாந் சக்ராயுதோ விபு:'' என்றும் சக்கிரவர்த்தித் திருமகனது பரத்வத்தையும், தன் மேன்மை பாராதே குக, சபரி, சுக்ரீவன் இவர்களோடே ஒரு நீராகக் கலந்த அவன் சீலம் எளிமை முதலிய குணங்களையும், அனைவர்க்கும் உய்வு பாயமான சரணு கதியின் மேன்மையையும், அவன் அனைவருக்கும் அபயமளிக்கும் தன்மையன் என்பதையும் காட்டு கையாலே, விபீஷணுஷ்வான் விஷயத்தில் காட்டப் பெற்ற தீர்க்க சரணுகதியே ஸ்ரீராமாயணம் சுட்டி நிற்கும் குறிக்கோள். ஆகையால் தீர்க்க சரணுகதி போலே இவ்விராமாயணத்தை நம் பூர்வாசாரியார்கள் ஸ்ரீமத் த்வயத்தோடே இணைத்துப் பொருள் கண்டனர். இனி ஸ்ரீராமாயணம் எவ்விதம் த்வயத்தோடு ஒப்புமையுடையது, த்வயத்தையே சுட்டுகிறது என்று காண்போம்.

மந்த்ர ரத்னமான த்வயத்தில் கூறப்பட்ட ஸ்ரீய: பதித்வம் முதலான, கைங்கர்ய விரோதி நிவர்த்தி வரையுள்ள பொருள்களை விவரிக்கிறது ஸ்ரீராமாயணம். எப்படியென்னில்.

ஸ்ரீமத் பாலகாண்டத்திலே:—''புத்திமான் நிதிமான் வாக்மீ ஸ்ரீமாந் சத்ரு நிபர்ஷண:'' என்றும், ''பீனவக்ஷா விசாலாக்ஷா லக்ஷ்மீவான் சுபலக்ஷண:'' என்றும் ஸ்ரீமத் சப்தம் கூறப்பட்டது. ''இயம் ஸீதாமம சுதா ஸஹதர்ம சரீதவ'' என்று புருஷகார பூதையான பிராட்டியினுடைய நித்யயோகம் சொல்லிற்று. அதன் மூலம் ஸ்ரீய: பதித்வம் சுட்டப் பெற்றது.

ஸ்ரீமத் அயோத்யா காண்டத்திலே:— ''ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்'' என்றும் ''த்யாயந் நாராயணம் தேவம்'' என்று நாராயண சப்தமும், ''அர்த்திதே மாநுஷே லோகே ஜஜ்ஞே விஷ்ணுஸ் ஸநாதன.'' என்று விஷ்ணுபத வாச்யம் சொல்லி, நாராயண பதம் ஸ்வரூப குண விபூதிகளுக்கு வாசகமேயாயினும், குணபரமான இடமாகையாலே ''தமேவ குண ஸம்பந்நம் ராமம் ஸத்ய பராக்ரமம், ஜ்யேஷ்ட ச்ரேஷ்ட குணர் யுத்தம் ப்ரியம் தசரதஸ்ஸுதம்'' என்று தொடங்கிச் செல்லும் அவனது அனந்த கல்யாண குணங்களைச் சொல்லிற்று. புருஷ காரபலத்தாலே தன் பெருமிதம் சற்றே தணிந்தால் தலையெடுக்கக்கடவதான வாத்ஸல்யம், ஸ்வாமித்வம், ஸௌசீல்யம், ஸௌலப்யம், ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்ற குணங்களைச் சொல்லி நாராயணபதத்தையே விவரிக்கும்.

ஸ்ரீமதாரண்ய காண்டத்தில்:—"ராமம் ஸம்போதயாமாஸ சரணுவபிபீடயந்" என்றும் "ராமஸ்யாபாதௌ ஜக்ராஹ லக்ஷ் மணஸ்ய தீமத:" என்றும் சரணபதத்தைச் சொல்லிச் சரணம் உபலக்ஷணமாகக் கொண்டு சரணத்தை யுடையவனுடைய திவ்ய மங்கள விக்கிரகத்தை அங்கங்கே பரக்கக் காட்டி, "தர்மபாலேர் ஜநஸ் யாஸ்ய சரண்யஸ்ச மஹாசயா:" என்றும் "ததங்த்வாம் சரணூர்த்தஞ்ச சரண்யம் ஸமுபஸ்திதா:" என்று ஸர்வ சரண்யத் வத்தையும் சொல்லுகையாலே "நாண் மலராம் அடித்தாமரை" என்றும், "மூவுல கும் தொழுதேத்தும் சீரடியான்" என்றும் சொல்லுகிற படியே நாராயணனுடைய ஸர்வலோக சரண்யமான சரண நளின யுகளம் விரிவாகக் காட்டப் பெற்றது.

ஸ்ரீமத் கிஷ்கிந்தா காண்டத்திலே:- "ஸர்வலோகஸ்ய தர்மாத்மா சரண்யச் சரணர்புரா. குருர்மே ராகவஸ்ஸோ யம்" என்றும், "ஆர்த்தாநாம் பவாந்கதி: என்றும்"நிவாஸவர்க்ஷஸ்ஸாதுநாம்ஆபந் நாநாம் பராகதி:" என்றும் சரணபதத் தைச் சொல்லி "ப்ரணஷ்டா ஸ்ரீஸ்சகீர்த் திஸ்ச கபிராஜ்யஞ்ச சாச்வதம் | த்வத்ப்ர ஸாதாந் மஹாபாஹோ புந: ப்ராப்தம் இதம் மயா" என்று அநிஷ்ட நிவ்ருத்தி பூர்வக இஷ்டப்ராப்தியைச் சொல்லுகை யாலே "வல்வினை தீர்க்கும் கண்ணனை" என்றும் "வெய்ய நோய்கள் முழுதும் வியன் ஞாலத்து வீயவே" என்றும் "அஃதே உய்யப் புகுமாறு என்றும், "உய்வுபாயம் மற்றின்மை தேறி" என்றும் சொல்லுகிறபடியே அநிஷ்ட நிவிருத்தி (வேண்டாமை நீக்கல்) அபீஷ்ட ப்ராப்தி (வேண்டிய கிட்டல்) கரத்வ ரூப உபாயத் வம் சொல்லப்பட்டது.

ஸ்ரீமத் சுந்தரகாண்டத்திலே:—ராமஸ்ய வயவஸாயக்ஞா" என்றும் "ராமம் ஏவ அநுபச்யதி" என்றும், "ப்ரபத்தே" என் றும் க்ரியா பதத்தினுடைய அர்த்தமான மாநஸ ஸ்வீகாரம் சொல்லி, அது தானும் ப்ரார்த்தனுகர்ப்பமாக வேண்டுகையாலே "சரைஸ்து ஸங்குலாம் க்ருத்வா லங்காம் பரபலார்த்தந: மாம் நயேத்யாதி காகுஸ் தத்தத்தஸ்ய ஸத்ருசம்பவேத்" என்றும், "அஸந்தேசாத்துராமஸ்ய தபஸ்சாநுபால் நாத், நத்வா குர்மி தசக்ரீவ பஸ்ம பஸ்மார் ஹதேஜஸா" என்றும் "ஜீவந்தீம் மாம் யதா ராம: ஸம்பாவயதி கீர்த்தி மாந், தத் த்வயா ஷநுமன் வரச்யோ வாசாதர்ம மவாப் நுஹி" என்றும் பிரார்த்தனையைச் சொல்லி அதுதான் வாசிகமாகவும் காயிக மாகவும் வேண்டுகையாலே "கௌஸல்யா லோகபர்த்தாரம்" என்றச்லோகத்தாலும், "யதாதம் புருஷம் வாக்ரம்" என்ற ச்லோ கத்தாலும் வாசிக காயிக வ்யாபாரங்களைச் சொல்லுகையாலே "தமியேனுக்கருளாய்" றும் "ஆறெனக்கு நின்பதமே சரணுக"என் என்றும் "கழல்களவையே சரணுகக் கொண்ட" என்றும் சொல்லுகிற படியே வேண்டுதலைக் கூறி "நாடொறு மேக சிந் தையனுய்" என்று அதுவே சதா ஸர்வ காலமும் மனேவ்யாபாரமானமை கூறிற்று.

ஸ்ரீமத் யுத்த காண்டத்திலே:—"தீர்க்க வ்ருத்த புஜ ஸ்ரீமாந்" என்று உத்தர வாக் கியமான ஸ்ரீமச் சப்தமும் அவருடைய நித் திய ஸம்பந்தமும்; "வதநமுதி பூர்ண சந்த்ர காந்தம் விமல ஸசாங்க நிபாந நாத தாஸா" என்ற வற்றலே "கன்னலே அமுதே" என்றும் "கொடியோன் பரு கின்னமுதே" என்றும் சொன்னபடி அவ னுடைய நிரதிஸய போக்யத்வமும்; "பவாந் நாராயணே தேவ ஸ்ரீமந்சக்ராயுதோவிபு:" என்று நாராயணபதமும் "ஸ்வாமீ லோகஸ்ய ராகவ:" என்று அவன் ஸ்வா மித்வமும் "ராமம் ரத்னமயேபீடேரத்னயே பீடே ஸஹனீதம் ந்யவேசயத்" என்று மிதுனத்தையும், "அப்யஷிஞ்சந் நரவ் யாக்ரத்" என்று நாராயணத்தில் சதுர்த்தி யர்த்தமான நித்ய கைங்கர்யம் சொல்லி முடிக்கிறது.

அதுக்குமேலே தம்மைப் பேணுதே பெரு மானைப் பேணித் தம்மை அழிய மாறின இளைய பெருமாள் தன்மையையும், பெரு மாள் திருவுள்ளத்தையே அநுசரித்திருந்த பிராட்டியின் தன்மையையும் விளக்கி கைங் கர்யத்தில் களையறுப்பதான உத்தர நமஸ் ஸின் அர்த்தத்தை உத்திரகாண்டம் கூறு வதாக விவரித்தார்.

(தொடரும்)

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்டஇடம்
திரு. ஜி. சுந்தரேசன்	ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர் கோயில், திருக்களர்.	ஸ்ரீ இரஜதகிரீசுவரர் கோயில், திருத்தெங்கூர். ஸ்ரீ அக்னீசுவரர் கோயில், திருக்கொள்ளிக்காடு.
திரு. எம். கிருஷ்ண சுவாமி	ஸ்ரீ இரஜதகிரீசுவரர் கோயில், திருத் தெங்கூர், ஸ்ரீ அக்னீசுவரர் கோயில், திருக்கொள்ளிக்காடு.	ஸ்ரீ பாரிஜாதவனேசுவரர் கோயில், திருக்களர்.
திரு. என். கே. அரங்க சுவாமி	ஸ்ரீ அரங்கநாதசுவாமி கோயில், காரமடை.	ஸ்ரீ சங்கமேசுவரர் கோயில், கோட்டை, கோவை.
திரு. எம். பழனியப்பன்	ஸ்ரீ கோனியம்மன் கோயில், கோவை.	ஸ்ரீ அரங்கநாதசுவாமி கோயில், காரமடை.
திரு. ஆர். சாரங்கராசன்	ஸ்ரீ சித்திபுத்தி விநாயகர் கோயில், இராயப்பேட்டை.	ஸ்ரீ பாலசுப்பிரமணியசுவாமி, ஆலயம்மன் கோயில்கள், தேனும்பேட்டை, சென்னை.
திரு. பி. ஷண்முகநாதன்	ஸ்ரீ வேணுகோபாலசுவாமி கோயில், சத்யமங்கலம்.	ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோயில், சென்னிமலை.
திரு. வி. பழனி	ஸ்ரீ தாயுமானசுவாமி கோயில், அரசலூர், திருச்சி மாவட்டம்	ஸ்ரீ கல்யாண வேங்கடரமண சுவாமிகோயில், தான்தோன்றி மலை.
திரு. ஜி. சோமசுந்தரம்	ஸ்ரீ சாயாவனேசுவரர் கோயில், சாயாவனம்.	ஸ்ரீ கொழுந்தீசுவரர் கோயில், கோட்டூர்.



ஸ்ரீ தஞ்சை நாயகித் தாயார்,
ஸ்ரீ தஞ்சை மாமணிக் கோயில்

சிவஞான போதம்

—: திரு. க. வச்சிரவேல் முதலியார், பி.ஏ., எல்.டி., காஞ்சிபுரம் :—

பதினொன்றும் சூத்திரம்

காணுங் கண்ணுக்குக்
காட்டும் உளம்போல்
காணஉள் ளத்தைக்
கண்டு காட்டலின்
அயரா அன்பின்
அரன்கழல் செலுமே.

மெய்யுணர்வின் பயன் இருவகைப்படும்: ஒன்று பாச வீடு, மற்றொன்று சிவப் பேறு. ஞான குரவன் உணர்த்திய அருண்ஞானத்தால் தன் அறிவின்கண் முதற்பொருளைச் சிந்தித்து, உணரும் அறிவன், அம்முதற் பொருளோடு ஒற்றுமைப்பட்டு, அதன் அருள்வழி நிற்பன்; ஒற்றுமைப்பட்டு நிற்றலால் யான் எனது என்னும் செருக்கிற்குக் காரணமாகிய மூல மலவாதனை தாக்காது; அருள்வழி நிற்றலால் மாயையோடு கூடிய வல்வினை வாதனை தாக்காது-என்னும் கருத்துக்கள் பத்தாஞ் சூத்திரத்தில் உணர்த்தப்பட்டன.

மல மாயை வினைகளின் வாதனைகளால் தாக்கப் படாமையே பாச விடு (பாசத்தை அறிவாற் பற்றறு விடுதல்) எனப்படும்.

இச் சூத்திரம் பாச வீட்டின் பின்னர் எய்தற்கு உரியதாய் ஆன்ம லாபம் எனப்படும் சிவப்பேறு கூடுமாறு உணர்த்துகின்றது. மெய்கண்ட முதல்வர் இதன் கருத்தைப் பின்வருமாறு சொற் செய்து கூறுகின்றார்:-

"என்பது சூத்திரம்; என்னுதலிற்றோ வெனின், பரமேசுவரனது சீபாதங்களை அணையுமாறு உணர்த்துதல் நுதலிற்று."

சூத்திரத்தின் பொழிப்புரை:—பொருள்களைக் காணும் உரிமையுள்ள கண்ணுக்கு, அக் காட்சி நிகழும்படி, உயிர் (உள்ளம்) அதனை இடமாகக் கொண்டு உடனின்று செலுத்திப் பொருள்களைக் காட்டித் தானும் காணும். அதுபோல, பிறப்பு வீடு என்னும் இரு நிலைகளிலும் உயிர் அறிந்து நுகர்தற்குரிய பொருள்களை அஃது அறிந்து நுகரும்படி, முதல்வன் உயிரை இடமாகக் கொண்டு உடனின்று செலுத்தி, அறிவித்தும் தான் அறிந்தும் வருவன். ஏகனாகி இறைபணி நிற்கும் சீவன் முத்தன் இவ்வுபகாரத்தை ஐயத்தினீங்கித் தெளிய உணர்வன். அவன் இதனை மறவாது கடைப்பிடித்தலால் அவனுக்குமுதல்வனிடத்து மெய்யன்பு மீதூரும; அங்ஙனம் அன்புமீதூரும் போது முதல்வன் அவ்வன்பே இன்பாய் விளைதலின், அப்பேரின்ப நிறைவில் அழுந்தி நிற்றலே திருவடிப் பேறு எனப்படும் பரமுத்தி நிலையாம். செலும் என்னும் பயனிலைக்கு 'ஏகனாகி இறைபணி நிற்கும் முத்தன்' என முன் சூத்திரத்தினின்று எழுவாய் எடுத்துக்கொள்க.

'அயரா அன்பின் அரன்கழல் செலும்' என்பது (முதல்வனது உபகாரத்தை) மறவாமையால் விளையும் அன்பு காரணமாக முதல்வன் திருவடி எனப்படும் பேரின்பத்தில் அழுந்தி நிற்பன் எனப்பொருள்படும். அயராமை—மறவாமை; அஃது அறிவின் நிகழ்ச்சி; அன்பு என்றது இச்சை மீதூர்தல்; அஃது இச்சையின் நிகழ்ச்சி; அரன்கழல் செலும் என்பது தொழிலாற்றலின் நிகழ்ச்சி· பரமுத்தி நிலையாகிய நிட்டையை எய்தும் முத்தான்மாவுக்கு முதற்கண் அதன் ஞான இச்சை கிரியைகள், இம் முறையில் காரண காரியமாக நிகழ்ந்து, பின் மூவகை ஆற்றலும் முதற்பொருளையே விடயித்து நிற்கும் என்பது கருத்து.

"அன்பினில் விளைந்த ஆரமுதே" "ஈறிலாப் பதங்கள் யாவையுங் கடந்த இன்பமே! என்னுடைய அன்பே!" "அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே" என்றாற் போல எழுந்த திருமொழிகளில் வந்துள்ள அன்பு இங்கு 'அயராமையயான் வரும் அன்பு' என்ற சாத்திய அன்பே ஆம் என்பது உளங் கொளத்தக்கது. திருப்பாசுரத்தின் பதின்மூன்றும் திருப்பாட்டின் பயன்உரைக்கும் சேக்கிழார் அடிகள், "ஞானம் ஈசன்பால் அன்பே என்றனர் ஞானம் உண்டார்" என்றதும் இங்கு உடன்வைத்து எண்ணுதற் குரியது.

கண்ணும் வேறே, உயிரும் வேறே. ஆயினும் ஒருபொருளைக் காணும்போது உயிர் கண்ணோடு ஒற்றித்து நின்று கண்ணிற்குக் காட்டித் தானும் காணும். பொருட்டன்மையால் இரண்டும் வேறேயாயினும், உடனுந்தன்மையால் பிரித்தறிய வராதபடி இரண்டும் ஒன்றேயாய்த் தொழிற்படுகின்றன. இங்ஙனம் இருவேறு பொருள்கள் ஒன்றே எனும்படி ஒற்றுமைப் படுதற்கு ஏதுவாகிய சம்பந்தமே அத்வைதம் அல்லது அத்துவிதம் எனப்படும். இச் சம்பந்தமே முதல்வனால் செலுத்தப்பட்டுப் பொருள்களை அறிந்து நுகர்ந்துவரும் உயிர்க்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தமாம். இதனை இருமையின் ஒருமை எனத்திருஞானசம்பந்தர் திருவெழுகூற்றிருக்கையில் குறிக்கின்றார்.

அத்துவிதத்தின் சொல்லியல்பு பொருளியல்புகள் முதற்கண் இரண்டாஞ் சூத்திரத்தில் புனர் உற்பவம் உணர்த்துதற்கண் வைத்து 'அவையே தானேயாய்' என உணர்த்தப்பட்டது. பின், ஐந்தாஞ்சூத்திரத்தில் முதல்வன் திரோதான சத்தி ரூபமாய்க் கரந்துநின்று செய்யும் அதி சூக்கும பஞ்சகிருத்தியம் உணர்த்துமுகத்தால் 'நம் உணர்வின் நமியருள்' என உணர்த்தப்பட்டது. அவ்விடங்களில் முதல்வன் உயிர்களின் ஆற்றலை விளக்குகின்றான் என்ற அளவுதான் நம்மால் அறிந்துகொள்ள முடிந்தது. இங்கு உயிர்களின் ஆற்றலைவிளக்கித் தொழிற்பட வைத்தல் மட்டுமின்றி, அவை பொருள்களில் அழுந்தி இன்பத் துன்ப நுகர்ச்சி எய்தும் போது அதற்குத் துணையாகத் தானும் உடனின்று அறிந்து வருகின்றான் என்பது வெளிப்படையாகக் கூறப்படுகின்றது. உயிர்களின் அறிவிச்சை செயல்கள் பொதுவாக விளங்கி நிற்றற்கு முதல்வன் திருவருள் அவற்றை அதிட்டித்து (இடமாகக் கொண்டு) நிற்கும் உபகாரத்தைக் காட்டும் உபகாரம் எனவும், அங்ஙனம் விளங்கி நின்ற அறிவிச்சை செயல்கள் ஒருபொருளை விடயமாகப் பற்றி அதன் வண்ணமாய் நின்று இன்பத் துன்ப நுகர்ச்சியைத்தரும் போது அதற்கு ஏதுவாக உடன் நின்று அறிந்து இச்சித்துப் பற்றி உபகரிக்கும் உதவியைக் காணும் உபகாரம் எனவும் சித்தாந்த நூல்கள் கூறும்.

"தொண்டனேன் விளம்பு மாவிளம்பே" "நுகருமா நுகரே" என எழுந்த திருவிசைப்பா காணும் உபகாரம் பற்றி எழுந்த அனுபவத்துக்கு எடுத்துக் காட்டப்படுகின்றது.

> 'அறிவானுந் தானே
> அறிவிப்பான் தானே
> அறிவாய் அறிகின்றான்
> தானே—அறிகின்ற
> மெய்ப்பொருளுந் தானே
> விரிசுடர்பார் ஆகாயம்
> அப்பொருளும் தானே
> அவன்'

என்னும் அம்மை திருவந்தாதியில்,

"அறிவானுந் தானே அறிவிப்பான் தானே" என்றது காட்டும் உபகாரத்தைக் குறிப்பது எனவும், 'அறிவா யறிகின்றான் தானே' என்றது விடயத்தில் அழுந்துவித்தற் பொருட்டுச் செய்யப்படும் காணும் உபகாரம் பற்றியது எனவும் சிவஞான சுவாமிகள் விளக்கியருளுகின்றார்கள்.

இங்ஙனம் சீவான்ம பரமான்மாக்களுக்குள்ள இருமையின் ஒருமையாம் சம்பந்தமாகிய அத்துவித இயல்பைஉண்மையனுபவ நிலைக்கு மாறுபடா வகை விளக்கி அவ்

வத்துவித ஞானமே மெய்யன்பை விளைத்துப் பரானந்த அனுபவ நிட்டையை எய்துவிக்கின்றது என மெய்கண்ட தேவர் தம் நூலின் முதல் இடை முடிபு என்னும் மூன்றிடத்தும் வைத்து விளக்குதல் பற்றியே இவ்வருமையை உணர்ந்த உண்மை ஞானியாகிய தாயுமான அடிகள்,

"பொய்கண்டார் காணுப்
புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதன்
அருள்மேவுநாள் எந்நாளோ"

என வேண்டுவா ராயினர்.

"காணுங் கண்ணுக்குக்
காட்டும் உளம்போல்,
காணவுள்ளத்தைக் கண்டு
காட்டலின்"

என்றது ஓரதிகரணம்; "அயரா அன்பின் அரன் கழல் செலுமே" என்றது ஓரதிகரணம்; ஆக இரண்டதி கரணமாக வைத்து இச் சூத்திரப் பொருள் ஆராயப்படும்.

முதல் அதிகரணம்

வார்த்திகம்: "ஈண்டு அவனும் அவற்றது விடயத்தை உணரும் என்றது, இவ்வான்மாக்கள் அவனையின்றி அமைந்து ஒன்றையும் விடயியா ஆகலான்"

விளக்கம்: உயிர்கள் முதல்வனது உபகாரத்தைப் பெற்றே அமைகின்றன (தம் ஞான இச்சை கிரியைகள் விளக்கப் பெறுகின்றன); அவனது உபகாரத்தைப் பெற்றே பிறப்பு வீடு என்னும் இரு நிலையினும் தமக்கு உரிய விடயங்களை அழுந்தி அறிகின்றன. ஆதலால், உயிர்கள் தம் ஞான இச்சை கிரியைகள் விளங்கிச் சீவித்தற்பொருட்டு முதல்வன் அவற்றை அதிட்டித்து நிற்றல் மட்டுமன்றி அவை விடயங்களை அழுந்தி உணர்ந்து நுகர்தற்பொருட்டுத் தானும் உடனாகி நின்று செலுத்தி அவ்விடயங்களை அறிகின்றான்; உயிரால் அதிட்டிக்கப் பெற்றுக் காணவல்ல கண் அதனால் செலுத்தப்பட்டு, அதுவும் உடனின்று கண்டாலன்றி ஒருபொருளையும் காண மாட்டாமை போல.

காட்டும் உபகாரம் இரண்டாஞ் சூத்திரத்தினும் ஐந்தாஞ் சூத்திரத்தினும் இனிது விளக்கப்பட்டமையின் அங்குத் தெரித்துக் காட்டப் படாத காணும் உபகாரம் ஒன்றே, இங்குத் தன்னாற் கூறப்படும் பொருளாக வைத்து மேற்கோள் கூறப்பட்டது; எய்தியது இகந்து படாமைக் காத்தற்பொருட்டு ஏது இரண்டு உபகாரங்களுக்கும் கூறப்பட்டது: உயிர்கள் முதல்வனையின்றி அமைதலும் இல்லை; அவனையின்றி ஒன்றையும் விடயித்தலும் இல்லை என ஏதுவிற்குப் பொருள் கொள்க. ஒன்றையும் என்னும் முற்றும்மையால் பிறப்பு நிலையில் விடயமாகிய பிரகிருதி குணங்களையும் வீட்டு நிலையில் விடயமாகிய முதல்வனுடைய எண் குணங்களின் விளக்கமாகிய நிரதிசய இன்பத்தையும் எனக் கொள்க. "கோளில் பொறியில் குணமிலவே எண் குணத்தான்-தாளை வணங்காத்தலை" என்னுந் திருக்குறளின் நோக்கு எனப்படும் குறிப்புப் பொருளும் இது. கோள் இல் பொறி என்றது காண மாட்டாத கண் என்றபடி; எண் குணத்தான் தாள் என்றது முதல்வனது திருவருளை; தலை என்றது உயிரின் ஞான இச்சை கிரியைகளை. முதல்வன் ஒருவனே ஆதலின் எண் குணத்தான் என ஒருமையாலும்,உயிர்கள் பல ஆதல் பற்றித் 'தலை குணமில' எனப் பன்மையாலும் கூறப்பட்டமையும் கருதியுணர்தற்கு உரியது.

1. தன்னாற்கூறப்படும் பொருள்: உயிர்களால் உணரப்படும் விடயத்தை முதல்வனும் உடனின்று அறிவன்.

2. ஐயப்பாடு: முதல்வன் உயிர்களுக்கு விடயங்களைக் காட்டித் தான் விகாரமின்றி நிற்றலன்றித் தானும் காணும் என்றல் உண்மையோ, அன்றே?

3. பிறர் கூறும் பக்கம்: முதல்வன் காட்டும் உபகாரம் மட்டும் உடையன்; காணும் உபகாரமும் உடையன் என்பதற்குப் பிரமாணமின்மையின் மேலும், உயிர்தோறும் நின்று அவை நுகர்வன வெல்லாவற்றையும் தானும் அறிந்து நிற்பன் எனின்

முதல்வனுக்கும் உயிர்க்கும் பொருள்களை அறிதற்கண் வேறுபாடு அறியப்படாது. கண்ணுக்கு உயிர் காட்டிக் காணுமாறு போல் என உவமை கூறின், கண் விடயிப்பன எல்லாம் உயிர்க்கே ஆதல்போல உயிர் விடயிப்பனவெல்லாம் சிவனுக்கே ஆதல் வேண்டும். இன்னும் வீட்டு நிலையில் ஆன்மாவிற்கு விடயமாவது முதல்வனது சீபாதம் எனப்படும் சிவானந்தமேயாதலின், அங்கு முதல்வன் தன்னையே அறிவன் எனல் வேண்டும்.

4. மறுத்துரைக்கும் சித்தாந்தத் துணிவு:—

காணவல்ல கண்ணுக்கு அக்காட்சிநிகழுமாறு உயிர் கண்ணை அதிட்டித்தல் வேண்டும்; இதனால் கண் காட்சியுடையதாகின்றது. ஆயினும், அஃது ஒரு பொருளை நோக்குதற்கண் உயிரின் அறிவும் உடன் நிகழ்ந்தால் அன்றிப் பொருளின் காட்சியைக் கண் பெறுவதில்லை. அது போல, அறிவித்தால் அறியவல்ல உயிர்க்கு முதல்வன் அதனை அதிட்டித்து ஒன்றேயாய் நின்று அறிவு விளக்கத்தையும், பின் உடனின்று விடயங்களில் செலுத்துவதால் அவ்வவ்விடய நுகர்ச்சியையும் எய்துவிக்கின்றான். இதற்குத் தன்னேக்கு உள்ளுணர்வு (Introspection) மட்டுமின்றி ஆகமப் பிரமாணமும் மேலே காட்டப்பட்டன.

இனி, கண் சடமாதலால், யாண்டும் உயிர் கண்ணாகவே நின்று பொருள்களைக் காணும்; ஆதலால், கண்ணாற் காணும் காட்சி யாவும் உயிர்க்கே உரியன ஆகும். உயிர் சித்துப் பொருளாதலாலும், முதல்வன் செய்யும் செயல் யாவும் உயிரின் நன்மையின் பொருட்டே ஆதலாலும், உயிர்க்கு வரும் விடய அனுபவம் பின் கூறுமாறு அமையும்; பிறப்பு நிலையில், உயிர் தான் செய்த வினைப்பயனை நுகர வேண்டுதலாலும், உயிர் முதல்வன் என ஒரு பொருள் இருப்பதை மறந்து தானாகவே நின்று உலகப் பொருள்களை நுகர்தலின் அந் நுகர்ச்சி முதல்வனுக்கு ஆகாது உயிர்க்கே ஆயின. வீட்டு நிலையில் உயிர் தானென முனைத்தலின்றி முதல்வனே யாகி நின்று உணர்தலின், சிவானந்த அநுபூதி ஒன்றனையே பெற்று, ஏனைய உலகப் பொருள் பற்றிய காட்சிப் பயனைத் தாம் எய்தமாட்டார்; முதல்வன் ஏன்று கொள்வன்.

பிறப்பு நிலையில் முதல்வனது உணர்வும் உயிரின் அறிவும் பிரிப்பின்றி ஒன்றி ஒரு பொருளை அறிதற்கண் உயிர் சார்ந்ததன் வண்ணமாய் நின்று ஒவ்வொரு பொருளாகச் சுட்டி அறிதலின் விகாரப்படும் எனவும், அங்ஙனம் பலதிறப்படுதலின்றி ஒரு பெற்றித்தாயுள்ள சிவம் (ஒன்று) எல்லாப் பொருள்களையும் பொதுவகையால் ஒருங்கே உணர்தலோடு உயிர்களுடனின்று சிறப்பு வகையானும் அறியும் எனவும், மெய்கண்ட தேவர் பின்வரும் உதாரணச் செய்யுளால் விளக்குகின்றார்:—

ஐந்தையும் ஒக்க உணரா(து)
அவற்றுணர்வ(து)
ஐந்தும்போல் நின்றுணரும்
ஆகலான்—ஐந்தினையும்
ஒன்றென்றுப் பார்த்துணர்வ(து)
உள்ளமே; எவ்வுலகும்
ஒன்று ஒன்றுப் பார்க்கும்
உணர்ந்து.

"ஒரே மரத்தில் இரண்டு அழகிய பறவைகள் கூடி வாழ்கின்றன; அவற்றுள் ஒன்று அரசமரத்தின் இனிய கனியை உண்கின்றது; மற்றையது உண்ணாது பார்த்துக்கொண்டுள்ளது" என்னும் இருக்கு வேதம் முதல் மண்டிலம் 164 ஆம் சூக்தம் 20-ஆம் மந்திரம் ஈண்டு ஒப்பு நோக்கி உணர்தற்பாலது.

வீட்டு நிலையில் ஆன்மாச் சிவத்தையே விடயித்தலின், ஆண்டும் ஆன்மாவின் விடயத்தை முதற்பொருளும் உடனின்று உணரும் எனினும், அது தன்னையே உணரும் எனப்பட்டுத் தன்னைப் பற்றுதல் (ஆன்மாச்சிரயம்) என்னும் குற்றமாகாதோ என்பார்க்கு, மெய்கண்டார் பின்வருமாறு விளக்கம் கூறியருளுகின்றார்:—

ஏகனாய் நின்றே
இணையடிகள் ஒன்(று) உணரப்
போகமாய்த் தான்விளைந்த
பொற்பினான்—ஏகமாய்

உள்ளத்தின் கண் ஆனான்
உள்குவார் உள்கிற்றை
உள்ளத்தாற் காணாரே
உற்று.

முதல்வன் (ஆன்மாவிற்கு அறிவுவிளங்குதற்பொருட்டு) ஆன்மாவின்கண் ஒற்றுமைப் பட்டுப் பிரியாது நிற்பவன் (ஆனான்); மேலும், வீட்டு நிலைக்கண் முதற்பொருளைச் சார்ந்து ஒரு பெற்றித் தாய் உள்ள முத்தான்மா (ஒன்று) அதனோடு ஒற்றுமைப்பட்டு நின்று, புலனும் எவ்விடயங்களிலும் பரம்பொருளின் திருவருளியக்கத்தையே உணர்ந்து நிற்கையில் அதற்குப் பரபோகமாய் மேன்மேலும் விளையும் பொலிவினை உடையான். ஆதலால், கருதுவார் கருதும் பொருளை அவ்வான்மாவோடு கூடி நின்றே அறிவன் என்பது பொருத்தமேயாம். ஆதலால் தன்னையும் உணர்வன்—என்பது வெண்பாவின் கருத்து.

"ஒன்று (முத்தான்மா) ஏகமாய் நின்றே இணையடிகள் உணரப் (பர) போகமாய் முதல்வன் விளைவன்" என்பதை, அப்பர் சுவாமிகளுக்கு நீற்றறை ஈசன் அடிநீழலாகிக் குளிர்ந்தமையும், நம்பி ஆரூரருக்குப் பெற்ற சிற்றின்பமே பேரின்பமாக முற்ற வந்த பரிசும் போல்வனவற்றால் தெளிக. "எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் பொதுமறைக்கும், "பரத்தில் மறைந்தது பார்முதல் பூதம்" என்னுந் திருமந்திரத்துக்கும் இதுவே கருத்தாதல் உணரத்தக்கது.

முதல்வன் முத்தான்மாவின் உணர்வுடன் கலந்து நின்று, அது தன்னை விடயிக்கையில், தானும் தன்னை விடயித்தல் கண் கண்ணாடிமுன் எதிர் விம்பமாய்த் தன்னைக் காணுதலோடு ஒக்கும்; ஆதலால், அங்குத் தன்னைப் பற்றுதல் என்னும் குற்றம் வாராதென்க.

"உள்குவார் உள்கிற்றை" என்னும் தொடர்,

"கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கித்
தெள்ளியேன் ஆகி நின்று
தேடினேன் நாடிக் கண்டேன்;
உள்குவார் உள்கிற் றெல்லாம்
உடனிருந் தறிதியென்று
வெள்கினேன்; வெள்கி நானும்
விலா இறச் சிரித்திட் டேனே"

என்னும் அப்பர் சுவாமிகள் திருமொழியின் பிரதிபலிப்பாதல் காண்க.

வீட்டு நிலைக்கண் முதல்வன் ஆன்மாவாகவே நின்று உலக போகமாகிய நஞ்சைத் தான் கொண்டு பரபோகமாகிய அமுதை அருத்துதலை,

அவன் இவன் ஆன(து)
அவனருளா லல்ல(து)
இவன் அவன் ஆகான்என்
றுந்தீபற!
என்றும் இவனேயென்
றுந்தீபற!

என்னும் திருவுந்தியால் உணர்க.

இறைபணியாளர் மாற்றங்கள்

பெயர்	இருந்த இடம்	மாற்றப்பட்ட இடம்
திரு. ஏ. என். பார்த்தசாரதி	ஸ்ரீ சாரநாத சுவாமி கோயில் திருச்சேறை	ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், அய்யம்பாளையம் கோவை மாவட்டம்.
,, என். இராமசாமி	ஸ்ரீ வாழைத் தோட்டத்து அய்யன் கோயில், அய்யம்பாளையம்.	ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி கோயில், சென்னிமலை.

யாதினும் இனியான்

சித்தாந்தக் கலைமணி: மகாவித்துவான். சி. அருணைவடிவேலு முதலியார்

இறைவனை எய்தி இன்புற்றவர்கள் அவனை, பிற இனிய பொருள்கள் யாவற்றினும் மிக இனியனாக, ஏனையோர்க்கு அறிவிக்கின்றனர்.

"கனியிலும் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க்குழற் பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்து ஆளும் அரசினும்
இனியன் தன்னடைந்தார்க்கு இடை
மருதனே"

என்பது அப்பர் திருமொழி. இதன்கண் கனி முதலாகச் சொல்லப்பட்டவற்றுள், "பாவை நல்லார்" எனப்பட்ட மகளிரது இன்பமே சிறந்தது என்பது எல்லார்க்கும் ஒப்ப முடிந்தது; எவ்வாறெனில், அஃது ஒன்றினையே 'இன்பம்' எனச் சிறந்தெடுத்துக் கூறுதலின் என்க.

இனி, மேற்காட்டிய திருப்பாடலில், 'பாவை நல்லார்' என்றதில், 'நல்லார்' என்றது, 'அழகுடையார்' என்னும் பொருளதாயினும், 'நலம் செய்வார்' என்னும் பொருள் மேலும் நோக்குடையதாய், 'அன்புடையார்' என்பதனைத் தோற்றுவிப்பதாம். ஆகவே, அஃது, அவரது இன்பம் ஏனை இன்பங்களிலும் மிககதாதற்குச் சிறந்த காரணத்தைப் புலப்படுத்தியவாறாயிற்று. எங்ஙனம் எனில்,

ஏனைய இன்பப் பொருள்கள் அவ்வின்பத்தை நுகர்பவனால் விரும்பப்படுமேயன்றி, அப்பொருள்களால் அவன் விரும்பப்படுதல் இல்லை. ஆனால், தம்முள் இன்பம் நுகரும் ஒருவனும் ஒருத்தியும் ஒருவர் மற்றொருவரை இன்றியமையாதவராய் விரும்பி நிற்பர். அவ்விருப்பமே 'அன்பு' எனப்படுகின்றது. இங்ஙனம் ஒருவரிடத்து மற்றொருவர்க்கு நிகழும் அன்பே, அவர் தம்முட் பெறும் இன்பம் ஏனைய இன்பங்கள் எல்லாவற்றினும் மிக்க இன்பமாகத் தோன்றச் செய்கின்றது. எனவே, பாவை நல்லாரது இன்பம், ஏனைய எல்லா இன்பங்களிலும் மிக்கதாதற்குச் சிறந்த காரணம்,

"கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்றறியும்
ஐம்புலனும்
ஒண்டொடி கண்ணே உள"

என்றவாறு, ஒரு காலத்தே, ஓரிடத்தே, ஒரு பொருளானே, ஐம்புல இன்பமும் ஒருங்கு பெறுதல் என்பதின்றி, ஏனைய பொருளிடத்திற் பெறலாகாத ஓர் அன்பினைப் பெற்று நிற்றலேயாம் என்பது தெள்ளிது. இதனையே, 'பாவை நல்லார்' என்றது குறித்து நிற்றல் காண்க.

இத்தகைய பாவை நல்லாரினும் இனியவன் இறைவன் எனின், ஒத்த அன்புடைய ஒருவன் ஒருத்தி என்பவருக்குள் உள்ள அன்புப் பிணிப்பைக் காட்டிலும் சிறந்ததொரு பிணிப்பு, இறைவனுக்கும் உயிர்கட்கும் உளதாதல் வேண்டும். அருளும் அன்பும் ஆய பிணிப்பே அப்பிணிப்பு என்க. அஃதாவது உடம்பிற்கு உயிர்போல, உயிர்க்கு உயிராய் இறைவன் எஞ்ஞான்றும் நீங்காது உடனாய் நின்று, எல்லா நலங்களையும் புரிந்து வருகின்றான். அதனால் அவனுக்கு ஆகற்பாலது ஓர் எட்டுணையும் இல்லை. ஆகவே 'அருள்' என்கின்ற ஒன்றே காரணமாக அவன் அவற்றைச் செய்து வருகின்றான். அறியாமை காரணமாக அதனை உயிர்கள் உணராதிருப்பினும், அவ்வறியாமை நீங்கிய காலத்து, அதனை நன்குணர்ந்து முன்பு உணராதொழிந்தமைக்குப் பெரிதும் இரங்கியும், பின்பு ஒருஞான்றும் மறவாதும் பேரன்பு செலுத்தி நிற்கும். அப்பொழுது, மேற் குறித்தவாறு இறைவன் தனது அருள் காரணமாக உயிரைக் கைவிடாது பற்றித் தன்னிலே இருத்த, உயிரும் அன்பினால் அவனையே சார்ந்து அவனிடத்திலே இருக்க, அவ்விருவாற்றானும், எங்கும் இல்லாத பேரின்பம் புதிது புதிதாய்ப் பொங்கித் ததும்பி நிற்கும். அவ்வின்பத்திற்குப் பாவை நல்லாரது இன்பந் தானும் எவ்விடத்தது! இறைவனது அருள் நிலையை, "பற்றி உலகை விடாதாய் போற்றி" என்றும், தமது அன்பு நிலையை, "அம்பலக் கூத்தனைத்

தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனே'' என்றும் அருளிச் செய்கின்றார், நாவுக்கரசர்.

இவ்வருட் டொடர்பினைப் பெற்றவர்கட்கு இறைவனே யாதினும் இனிய னாகலின், அவர்கள் பாவை நல்லாரது அன்புத் தொடர்பினையும் விடத் துணிவார்கள் என்பதற்கு, திருநீலநக்க நாயனார் எடுத்துக்காட்டாக இலங்குகின்றார். திருநீலகண்ட நாயனார், இயற்பகை நாயனார், கலிக்கம்ப நாயனார், கழற்சிங்க நாயனார் என்பவர் களும் இறைவனது அருட்டொடர்பால், பாவை நல்லாரது அன்புத் தொடர்பினை அகன்றொழிந்த வராயினும், அங்ஙனம் ஒழிதற்கு வேண்டும் அருள் நிகழ்ச்சிக் காரணம் நிரம்ப இருந்தது. அத்தகைய காரணம் நிரம்ப இல்லாமலே திருநீல நக்க நாயனார் அத் தொடர்பினை அகன்று நிற்கத் துணிந்தது சிறந்ததொன்றாகிறது.

சோழ நாட்டில், 'திருச்சாத்த மங்கை' என்பது ஒரு சிவதலம். அஃது அந்தணர்கள் மிகுதியாக வாழும் ஊர். அவர்களில் 'திருநீல நக்கர்' என்பவர் ஒருவர். அவர் தாம் ஓதும் வேதத்தின் உள்ளீ டான பொருள், சிவபெருமானையும், அவன் அடி யாரையும் வழிபடுவதே என்னும் உண்மையை நன்கு உணர்ந்தவர். அதனால் அத்தலத்தில் உள்ள அயவந்தி நாதரை, நாள்தோறும் தவறாது சென்று முறைப்படி தீண்டி வழிபாடு செய்வதும், சிவனடியார்களுக்குத் திருவமுது படைத்தல் முத லியவற்றைச் செய்வதும் ஆகிய செயல்களைத் தம் கடமையாகக் கொண்டு செய்து வந்தார்.

அவர்தம் மனைவியாரும் சிவபத்தி சிவனடியார் பத்திகளிற் சிறந்திருந்தமை குறிப்பிடத் தக்கது. திரு நீலநக்கர் வரலாற்றில் அவர் மனைவியாரது பத்தி, நாயனாரது பத்தியினும் விஞ்சியது போல முனைந்து தோன்றும். அதனைக் குறிப்பிடவே போலும், சேக்கிழார், அவ்வூர்ச் சிறப்பைக் கூறும் பொழுது பெண்களைச் சிறந்தெடுத்துப் புகழ்கின்றார்! அங்கு இருபிறப்பாளர் மூன்று தீயை வளர்க்க, அவர்தம் பெண்டிர் அவற்றோடு தம் கற்புத் தீயைக் கூட்டி, நான்கு தீயாக வளர்ப்பார்கள் என்பது அப்புகழுரை.

ஆண்டு தோறும் வருகின்ற திருவாதிரை நாட்களில் ஓராண்டு திருவாதிரை யன்று, திருநீல நக்கர் அயவந்தி ஆலயத்திற்குச் சென்று பெருமானுக்குச் சிறப்பான வழிபாடுகளை யெல்லாம் செய்து முடித்தார். பூசை முடிந்தாலும் அவரது அன்பிற்கு முடிவு இல்லாமையால், உடனே கோயிலை விட்டு மீளாதவராய், கோயிலை வலம் வருவதும், வணங்குவதும், வழுத்துவதும் செய்து, திரு முன்பில் பெருமானை நோக்கிய வண்ணம் திருவைந்தெழுத்தைக் கணித்துக் கொண்டிருந்தார்.

நாயனார் கோயிலுக்குச் சென்று வழிபாடு செய் யும் பொழுது, உடன் இருந்து பலவகையாலும் உதவுபவர் அவர்தம் மனைவியாரே. ஆதலின், அன்றும் அவ்வாறே செய்துவிட்டு அருகில் நின் றிருந்தார் அம்மையார். அப்பொழுது மேலே இருந்த சிலந்தி ஒன்று தவறிச் சிவலிங்கப் பெரு மான் மீது விழுந்தது. அதைக் கண்ட அம்மை யார் மனம் துடித்து, சிலந்தியைக் கையால் அகற்றியதோடு அது வீழ்ந்த இடத்தில் தம் எச்சில் படுமாறு வாயால் ஊதிக் கையால் தேய்த் தார். இளங் குழந்தைகள்மேல் சிலந்தி விழுமா யின், அதன் விடத்தினால் அங்குக் கொப்புளம் உண்டாகாதிருத்தற் பொருட்டுத் தாய்மார்கள் அவ்விடத்தில் வாய் எச்சில்பட ஊதித் தேய்த்தல் வழக்கம். அவ்வாறே அம்மையார், பெருமான் திருமேனியில் கொப்புளம் உண்டாய்விடும் என் னும் பதைப்பினால் செய்தார்.

மனைவியாரது செய்கையைக் கண்ட நாயனார், அவரது அன்பினை நினையாது, தாம் திருவாதிரை யில் சிறப்புறச் செய்த அரிய வழிபாடுகள் எல்லாம் அடியோடு கெட்டுவிட்டதாகக் கருதிச் சினங் கொண்டவராய், "ஏடி அறிவிலீ, ஏன் இப்படிச் செய்தாய்?'' என்று கேட்டார். அம் மையார் நிகழ்ந்ததைச் சொல்ல, "பெருமான் மீது சிலந்தி விழுந்தால் அதனை இப்படித்தான் போக் குவதோ? வேறு வழி இல்லையோ? பெருமானை நீ என்னவென்று நினைத்து இப்படிச் செய்தாய்? யான் நிற்கும் நெறிக்கு ஒவ்வாத குணம் உடைய உன்னோடு எனக்கு உள்ள தொடர்பினை இனி யான் அறுத்துக் கொள்வதில் என்ன குற்றம் உண்டு? ஒன்றும் இல்லை; ஆதலின், இனி நீ என்னுடன் வரத்தக்கவள் அல்லை'' என்று சொல்லி, அம்மையார் ஊதி உமிழ்ந்தமையால் பெருமானுக்கு உண்டாகிய புன்மை நீங்குவதற் குரிய தூய வழிபாடுகள் செய்து முடித்து, நாயனார் தாம் மட்டும் தனியே தம் இல்லம் புகுந்தார்.

அம்மையார் தம் கணவரைப் பின்தொடர அஞ்சி, அது செய்ய மாட்டாதவராய்க் கோயிலி லேயே இருந்துவிட்டார். இதனைக் குறிக்கு மிடத்துச் சேக்கிழார், "நஞ்சம் உண்டவர் கோயிலில் நங்கையார் இருந்தார்'' என்கின்றார். அது நமக்குச் சில குறிப்புக்களைத் தருகின்றது.

நாயனுர் தம்மைக் கடிந்ததற்கு அம்மையார் அவரை வெருது, தம்மையே வெறுத்துக்கொண்டனர். அன்பினுல் உண்டான பதைப்புக் காரணமாக, சிவலிங்கப் பெருமானிடத்து அச் செயலை அப்பொழுது அம்மையார் செய்தார் எனினும், நாயனுர் கூறிய அறிவுரைகளால், நாம் ஏன் இவ்வாறு செய்தோம்? இது குற்றம் பொருந்திய செயல்தானே! சிலந்தியின் விடத்தை வேருெரு வகையினுல் நீக்கி இருக்கலாமே! நாயனுர் உரைத்தது உண்மை அன்றே! என்ன இருப்பினும் பெண் புத்தி பின் புத்தி என்கிறுர்களே! அது உண்மையாக அன்றே ஆய்விட்டது! 'பிற சிறு குற்றங்களாயின், நாயனுர் பொறுப்பார்; இப் பெருங் குற்றத்தினை அவர் ஒருகாலும் பொருர்; ஆதலின், இதனைப் பொறுக்குமாறு நாம் எங்ஙனம் அவரை வேண்டுவது? இனி, குற்றம் செய்தாரையும், தன்னை அடைந்த வழி அக் குற்றம் பொறுத்து ஏற்றருள்பவனுகிய சிவபெருமானையன்றி நமக்குத் தஞ்சமாவார் ஆர்? ஒருவரும் இல்லை; ஆதலின், அவனையே தஞ்சமாக அடைவேன்'' எனறெல்லாம் அம்மையார் எண்ணிக் கோயிலிலேயே இருந்துவிட்டார் என்பதை, மேற்காட்டிய சேக்கிழார் திருமொழி உய்த்துணர வைக்கின்றது.

எங்ஙனம் எனில், ''நஞ்சம் உண்டவர்'' என்பது! குற்றம் செய்தவர்களையும் பொறுத்து ஏற்றுக் கொள்பவர்' என்னும் கருத்தைத் தொனிப்பிப்பதாதலின், அம்மையார், தம்மைக் குற்றம் செய்தவராகவும், அதனைப் பொறுத்துத் தம்மை பாதுகாப்பவன் சிவபெருமான் ஒருவனே யாகவும் கருதி, அப் பெருமான் திருக் கோயிலிலேயே இருந்தார் எனக் குறித்தவாருயிற்று. 'நங்கையார்' என்றல், பெண்டிருட் சிறந்தவரையே யாதலின், 'இன்ன பெருஞ் சிறப்பை உடைய அம்மையாரினும், சிறந்த பெண்டிர் யாரைக் காண இயலும்' என்னும் கருத்தைத் தோற்றுவிக்கவே, அம்மையாரை இங்குச் சேக்கிழார்; 'நங்கையார்' என்றே குறித்தருளினுராவார்.

குற்றம் செய்யாமையே 'யன்றி, அன்பின் மீதூர்வால் நன்றே செய்த ஒருவர், குற்றம் செய்தாராக அவர்தம் கேள்வரால் வெறுக்கப்படுதலும், அதன்பின் அவர், தாமே தம்மை நொந்து தன்னிடத்தே தஞ்சம் புகுதலும் நிகழுமாயின், அதனை அருளாளனுகிய இறைவன் பொறுத்துக் கொண்டு வாளா இருப்பானே!

அன்று இரவே அயவந்திப் பெருமான் திருநீலநக்க நாயனுரது கனவில் தனது உண்மை வடிவத்துடன் தோன்றி, 'அன்பனே, இதோ பார், என் உடம்பில் உன் மனைவி ஊதி உமிழ்ந்த இடம் தவிர, மற்றைய இடங்களில் எல்லாம் சிலந்தியால் ஏற்பட்ட கொப்புளங்களை' என்று காட்டியருளினுன்.

நாயனுர் அஞ்சி எழுந்து, தம் பெருமான் தம் பிழைபொறுத்துத் தம் குடி முழுதும் ஆட்கொள்ள விரையும் பெருங் கருணையை நினைத்து அழுதார்! கை குவித்துத் தொழுதார்! ஆடினுர்! பாடினுர்! ''தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி'' என்று திருவாசகம், சிவபெருமானைப் போற்றியது எத்துணைப் பொருள் நிறைந்த மொழி என்பதை உன்னினுல், உள்ளம் உருகுமன்றே?

நாயனுர் மறுநாட் காலையில் வழக்கம்போல முறைப்படி கோயிலுக்குச் சென்று, தம் பெருமானது கருணைச் செயலைத் தம் மனைவியார்க்குத் தெரிவித்து, பெருமானை வழிபட்டு, மனைவியாருடன் இல்லம் சேர்ந்தார்.

இந் நிகழ்ச்சிகளால், 'பத்தி மார்க்கம்' எனப்படும் 'அன்பு நெறி', 'விதி மார்க்கம்' எனப்படும் நூல் நெறியினின்றும் ஒரோவிடத்து மாறுபடினும், குற்றம் உடைத்தாகாது என்பதும், அன்னதொரு பேரன்பு, விதி மார்க்கத்தின் முதிர்வாய் விளையும் என்பதும் பெறப்படும். விதி மார்க்கம் பத்தியின்றி ஆவதன்றுகலின் விதி மார்க்கமும் பத்தி மார்க்கந்தான். ஆயினும், பத்தியானது, நூல்களுள் விதிக்கப்பட்டனவற்றையே பற்றுக் கோடாகக் கொண்டு நிகழுங்கால், 'விதி மார்க்கம்' என்றும், அவ்வாறின்றி, அதனை ஏற்ற பெற்றியால் தழுவியும் தழுவாதும் நிகழுங்கால், 'பத்தி மார்க்கம்' என்றும் சொல்லப்படும்.

இவ் வரலாற்றுள், அன்பு நெறியில் அம்மையார் நாயனுரினும் மிஞ்சியிருந்தார் என்பது போலத் தோன்றும். ஆயினும், நாயனுர், தம் மனைவியாரை இறைவனிடத்தில் அன்போ, அச்சமோ சிறிதும் இல்லாதவராய் இருந்தார் எனக் கருதியதாகக் கூறுதல் இயலாது; ஏனெனில், 'அம்மையார் இறைவன் மீது விழுந்த சிலந்தியை அகற்றவே தம் செயலைச் செய்தார்' என்பதனை உடம்பட்டு, 'அதனை வேருேராற்ருல் அகற்ருது இவ்வாறு செய்தல் கூடுமோ?' என நாயனுர் கூறினுராகலின். ஆகவே, இறைவனிடத்து எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை அறிந்திலர் அம்மையார் என்று மட்டுமே அவர் நினைத்தமை தெளிவு. இதனை, ''பொறியிலாய் (அறிவிலீ)'' என்று அவர் அம்

மையாரை விளித்தமை வலியுறுத்தும். ஆகவே, அம்மையாரது குற்றத்தை யன்றி, அன்பையும் அவர் ஒருங்கு உணர்ந்தே நின்ருர். குற்றம் அன்போடு கூடியதாகலின், அது சிறிதாய்ப் பொறுக்கப்படுவதற்குரியதே. எனினும், அவ் வாறு செய்யாது நாயனர் அம்மையார்க்கு, அவரது அன்பினை நோக்காமல் குற்றம் ஒன்றினையே நோக்கி, ஒறுப்பின் மேல் எல்லையான ஒன்றைத் தரும் முறையில் அவரைத் துறந்தொழிந்தது அவர் இறைவனிடத்துக் கொண்ட அன்பின் அளவின்மையையே காட்டுவதாகும். எனவே, இறைவனிடத்து உள்ள அன்பில், நாயனரும், அவர்தம் மனைவியாரும் ஒருவர்க்கொருவர் பின்னிடாது ஒத்து நிற்பவர் என்பதும், அவ்வன்பு ஒருவரிடத்துப் பதைப்புக் காரணமாக விதி மார்க்கத்தைக் கடந்து வெளிப்பட்டது; மற்றொருவரிடத்து, கையிகந்த தண்டமும், கற்பின் மேம்படு காதலியாரைத் துறப்பதுமாய் வெளிப்பட்டது என்பதும் புலனுகின்றன.

இவ்வாறு எவ்வாற்ருலும் தமக்கு இனிய தம் மனைவியாரை இறைவனுக்குச் செய்த ஒரு சிறு குற்றம் காரணமாக ஒரு நொடிப் பொழுதில் நாயனர் துறந்தார் எனின், அம்மையாரினும், மற்றும் யாரினும் இறைவனே நாயனருக்கு இனியனுயினமை தெள்ளிதின் விளங்குகின்றது.

இவ்வளப்பரும் பேரன்புடையவராகிய இந் நாயனர் வாயிலாக மற்றும் ஓர் அருஞ் செயல் நிகழ்ந்தது.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் வாழ்ந்த காலமே இவர் காலமும். அதனுல், அவர் பல தலங்களுக்குச் செல்லுங்கால் திருச்சாத்தமங்கைக்குச் சென்ருர். அவரது வருகையை அறிந்து இந் நாயனர் பெருமகிழ்வுற்று, நடைக் காவணம் இட்டு, நிறைகுடம் முதலியவற்றுடன், சிறப்பாக அவரைத் திருக் கூட்டத்துடன் வரவேற்று, அனைவரையும் உண்டி முதலியவற்ருல் நன்கு உபசரித்து, அன்று இரவும் அங்குத் தங்கிப் போம்படி வேண்டிக் கொண்டார். ஞான சம்பந்தரும் இசைந்து இருக்கையில், இரவு வந்தது. அனைவரும் திருவமுது உண்டு முடிந்தபின், ஞான சம்பந்தர் திரு நீல நக்கரை அழைத்து, 'நம் திருக் கூட்டத்துள் திருநீலகண்டப் பெரும்பாணர்க்கும் அவர்தம் மனைவியார்க்கும் தங்குதற்கு ஓர் இடம் கொடுங்கள்' என்று சொல்லியருளினர். அவ்விருவரை மட்டுமே ஞான சம்பந்தர் குறிப்பிட்டுச் சொல்லியது, அவர்கள் குலமுறை, ஏனையவரோடு ஒருங்கிருக்க இயலாதது என்றும், அந்தணர்கள் வாழும் இடத்தில் அவர்க்கு இடந்தருதல் அரிது என்றும் கருதியதினுலேயாம் என்பது வெளிப்படை. அதனைக் கேட்ட திரு நீல நக்கர் தமது இல்லறத்தில் நித்தியாக்கினி வளர்க்கும் நடுவீட்டையே திருநீலகண்டப் பெரும்பாணர்க்கும் அவர் மனைவியார்க்கும் தங்கும்இடமாகக்கொடுத்தார். திருநீலகண்டப் பாணர்க்கும் அவ்வறையுட் செல்ல அச்சந்தான். ஆயினும், அடியார் கட்டளைப்படி அதனுட் சென்றபோது, அங்கு அவியாது சிறுக எரிந்து கொண்டிருந்த நித்தியாக்கினி, அக் குண்டத்தினின்றும் வலஞ்சுழித்து ஓங்கி எரிந்து, ஒளி வீசியது. அதனைக் கண்ட அனைவரும் அடியாரது பெருமையை நினைந்து அதிசயமுற்று மகிழ்ந்தனர். திருநீல நக்கருக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவில்லை. 'அடியார் பத்தி' என்ருல், இன்னேரன்னவையன்ரே அடியார் பத்தி! முன் கூறிய நிகழ்ச்சியில் திருநீல நக்கரது சிவ பத்தியும், இந் நிகழ்ச்சியில் அவரது சிவனடியார் பத்தியும் இனிது விளங்கி நிற்கின்றனவன்ரே? முன் நிகழ்ச்சியிற் போல, இந் நிகழ்ச்சியில் வருணச்சிரம நெறி, விதி மார்க்கத்திற்கே வேண்படுவதின்றி, பத்தி மார்க்கத்திற்கு வேண்டப் படுவதன்று என்பது விளங்கும். இவ்வரும் பெரும் செயல்களால் திருநீல நக்கரது பெருமையை உணர்ந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனர் மகிழ்ச்சியுற்று, அவரைத் தமது திருப்பதிகத்திற் பாராட்டி, "சாத்தமங்கை அடிகள் நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே" என்றும், "நிறையினுர் நீல நக்கன் நெடுமா நகர் என்று தொண்டர் அறையும்ஊர் சாத்த மங்கை" என்றும் அருளிச் செய்து, தமது நட்பையும் அவருக்கு அளித்தருளினர். அதனுல், திருநீல நக்கர் மகிழ்ச்சியுற்று முன்போலவே தம் பணியினைச் செய்து வாழ்ந்து, திருஞான சம்பந்தர் திருமணக் காட்சியை வணங்கச் சென்று, தம் மனைவியாருடன் திரு நல்லூர்ப் பெரு மணத்தில் சோதியுட் கலந்தருளினர். உண்மைச் சிவபத்தி சிவனடியார் பத்திகளைப் பெற நாமும் இந் நாயனரை வணங்குதல் செய்வோம்.

இரண்டாம் திருமுறை

திருப்பதிகம் - தேவாரம்

டாக்டர் திரு. மா. இராசமாணிக்கனார், M.A., L.T., M.O.L., Ph.D.

திருமுறை என்னும் தொடர் நாயன்மார் காலத்திலே அமைந்தது என்று கூறுதல் இயலாது. பல்லவர் காலத்திலும், சோழர் காலத்திலும் நாயன்மார் பாடல்களுக்கு வழங்கப் பெற்ற பெயர் திருப்பதிகம் அல்லது திருப்பதியம் என்பதேயாகும். இதனை முதன் முதலில் வெளிப்படுத்தியது திருவல்லம் கல்வெட்டேயாகும்.

திருப்பதிகங்களைக் குறிக்க 'தேவாரம்' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டது. ஆயின், இச் சொல்வழக்கு முதலில் வழிபாட்டைக் குறித்தது. முதற் குலோத்துங்கச் சோழன் தக்கோலம் கோவிலில் 'தேவாரம் செய்தான்' என்று காஞ்சி உலகளந்த பெருமாள் கோவில் கல்வெட்டுத் தெரிவிக்கின்றது. இங்குத் தேவாரம் என்பது வழிபாடு என்னும் பொருளில் வந்துள்ளது. இராசேந்திர சோழன் அரண்மனையில் வழிபாட்டு வேலைகளைக் கவனிக்கும் அதிகாரி 'தேவார நாயகம்' எனப்பட்டான் என்பது காஞ்சிக் கயிலாசநாதர் கோவில் கல்வெட்டால் அறியலாம். இங்ஙனம் முதலில் வழிபாட்டைக் குறித்த 'தேவாரம்' என்னும் சொல், காலப் போக்கில் வழிபாட்டுக்குரிய பாடல்களின் தொகுப்பைக் குறிக்கப் பயன்பட்டது போலும்!

பத்துப் பாடல்களைக் கொண்ட தொகுப்புப் 'பதிகம்' எனப்படும். ஒரு பதிகத்தில் பத்து அல்லது பதினொரு பாடல்கள் இடம்பெறும். சம்பந்தரது ஒவ்வொரு பதிகத்திலும் எட்டாம் பாடல் இராவணன் கயிலை பெயர்த்ததைக் குறிப்பிடுகின்றது; ஒன்பதாம் பாடல் பிரமனும் மாலும் காணாத சிவன் என்பதைக் குறிப்பிடுகின்றது; பத்தாம் பாடல் பௌத்தர், சமணர் கண்டனத்தைக் கொண்டது. பதினோராம் பாடல் பதிகத்தைப் படிப்பவர் பெறும் பயனைக் கூறுவது. பதிகத்தில் உள்ள பிற பாடல்களில் சிவனார் வருணனை, அவருடைய வீரச் செயல்கள், தலம் பற்றிய சிறப்பியல்புகள் முதலியன இடம் பெற்றிருக்கும். மிகச் சில பாடல்களில் மக்களுக்குச் சமய அறிவுரை கூறப்பட்டிருக்கும்.

தலங்களின் அமைப்பு:

கி. பி. ஏழாம் நூற்றாண்டில் திருநாவுக்கரசரும் திருஞான சம்பந்தரும் சிவத்தலங்கள் பலவற்றுக்கும் சென்று பதிகம் பாடினர். கி. பி. 9-ஆம் நூற்றாண்டில் சுந்தரர் பல தலங்களுக்கும் சென்று பதிகம் பாடினார். இங்ஙனம் பாடப்பெற்ற தலங்கள் வைப்புத் தலங்கள் உட்பட ஏறத்தாழ நானூறு எனலாம். இவற்றின் பெயர்களே இவற்றின் பலதரப்பட்ட வரலாறுகளை எடுத்துக் கூறும் முறையில் அமைந்துள்ளன.

நம் முன்னோர் சிவலிங்கங்களை ஆற்று ஓரங்களிலும், குளக்கரைகளிலும், நீர்த்துறைகளிலும், "கா" எனப் பெயர்பெற்ற சோலைகளிலும், 'பொழில்' என்னும் பெயர் பெற்ற இளமரச் சோலைகளிலும், 'காடு' (வனம்) எனப் பெயர் பெற்ற இடங்களிலும் நிறுவி வழிபட்டு வந்தனர் என்பது கீழ்க்கண்டவற்றால் உணரப்படும்.

1. ஆறு: இடையாறு, ஐயாறு, கோட்டாறு, நள்ளாறு.
2. குளம்: கடிக்குளம்.
3. துறை: அன்பில் ஆலந்துறை, ஆவடுதுறை, கடம்பந் துறை, குரங்காடுதுறை, சோற்றுத் துறை, பராய்த்துறை, பாலைத்துறை, பாற்றுறை, பேணுபெருந்துறை, மயிலாடுதுறை, மாந்துறை, வெண்டுறை.
4. கா: ஆனைக்கா, குரக்குக்கா, கோலக்கா, நெல்லிக்கா.
5. பொழில்: ஆலம்பொழில்.
6. காடு: ஆலங்காடு, கொள்ளிக்காடு, சாய்க்காடு, தலைச்சங்காடு, தலையாலங்காடு, மறைக்காடு, வெண்காடு, வேற்காடு.

7. வனம்: இடும்பாவனம்,

8. திருச்சிராப்பள்ளி மலையிலுள்ள சமணர் குகைக் கல்வெட்டில் ஒரு சமண முனிவரது பெயர் 'சிரா' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 'பள்ளி' என்பது சமணர், பௌத்தர் கோவிலைக் குறிக்கும் பெயராகும். எனவே சிராப்பள்ளி என்பது சமணர் கோவிலைக் குறித்து எழுந்த தாகும். சமண பௌத்த கோவில்களுக்குரிய பள்ளி என்ற பெயர் காலப்போக்கில் சிவன் கோவில்கள் சிலவற்றையும் குறித்தனவோ, அல்லது சமண பௌத்த கோவில்கள் காலப் போக்கில் சிவன் கோவில்களாக மாற்றப்பட்ட னவோ, உண்மை தெரியவில்லை. கீழ் வரும் சிவன் கோவில்கள் 'பள்ளி' என்று முடி கின்றன.

அகத்தியான் பள்ளி, காட்டுப்பள்ளி, சக்கரப் பள்ளி, சிராப்பள்ளி, செம்பொன்பள்ளி, நனி பள்ளி, மயேந்திரப்பள்ளி.

9. நெற்களம் அல்லது போர்க்களமாக இருந்த இடங்கள் சிவலிங்கம் நிறுவப்பட்டு நாளடைவில் கோவில்கள் எழுப்பப்பெற்றன என்பது, அஞ்சைக் களம், நெடுங் களம், வேட் களம் என்னும் பெயர்களைக் கொண்டு உணரலாம்.

10. ஊரை அடுத்து அமையும் குடியிருப்பு சேரி எனப்பட்டது. அங்ஙனம் அமைந்த புதிய குடியிருப்புக்களிலும் சிவன் கோவில் அமைக் கப்பட்டது என்பது தெளிச்சேரி, மணஞ்சேரி என் னும் பெயர்களால் அறியலாம்.

11. புதியனவாக அமைந்த ஊர்கள், புதூர் என்றும் புத்தூர் என்றும் பெயர் பெறுதல் இயல்பு. கொள்ளம்புதூர், திருப்புத்தூர், வாள் ஒளிபுத்தூர் என்பவை இவ்வாறு அமைந்த புதிய ஊர்களாகும். அரிசில் ஆற்றங்கரையில் அமைந்த புத்தூர் அரிசில்கரைப்புத்தூர் எனப் பெயர் பெற்றது. கடுவாய் (குடமுருட்டி) ஆற் றங்கரையில் அமைந்த புத்தூர் கடுவாய்க் கரைப்புத்தூர் எனப்பட்டது.

12. சிவபெருமான் காலகாலன் ஆதலாலும், அழித்தற்கடவுள் ஆதலாலும் மயானம் (சுடுகாடு) அவனுக்கு உகந்த இடமாகக் கருதப்பட்டது. ஆதனல் அங்குக் கோயில்கள் எழுந்தன. அங் ஙனம் எழுந்தவையே கச்சி மயானம், கடவூர் மயானம், நாலூர் மயானம் என்பன.

13. இன்றுள்ள தென் ஆர்க்காடு மாவட்டத் திலும், சோழநாட்டுச் சில இடங்களிலும் புலி கள் வாழ்ந்த காடுகள் இருந்தன. அவை அழிக்கப்பட்டன. அங்குக் காலப்போக்கில் ஊர்கள் அமைந்தன. அவையே ஓமாம் புலியூர், பாதிரிப்புலியூர், பெரும்புலியூர், பெரும்பற்றப் புலியூர், எருக்கத்தம்புலியூர் என்பன.

14. முல்லை நிலத்திற்கு நுழைவாயிலாக அமைத்த இடம் 'முல்லைவாயில்' எனப்பெயர் பெற்றது போலும்! காலப்போக்கில் அங்கு ஒரு கோவில் ஏற்பட்டது. அவ்வாறே மருத நிலத்து வாயில் என்று கருதப்பட்ட இடத்திலும் ஓர் ஊர் அமைந்தது. அது 'நெல்வாயில்' எனப் பட்டது. அங்கும் ஒரு கோயில் அமைக்கப் பட்டது. குடவாயில் என்பது மேற்கு வாசல் எனப் பொருள்படும். பெரிய நகரத்தின் மேற்கு வாசல் என ஓரிடம் பெயர் பெற்றிருக்கலாம். அங்கும் ஓர் கோயில் அமைக்கப்பட்டது.

15. குன்றுகள் மீதும் அவற்றின் அடிவாரத் திலும் கோயில்கள் அமைந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவை கழுக்குன்றம், கொடுங்குன்றம் (பிரான் மலை) பரங்குன்றம், முதுகுன்றம் என்பன, முதுகுன்றம் என்னும் ஊரில் குன்றே இல்லை. இப்பெயர் எவ்வாறு வந்ததென்பது ஆராய்ச் சிக்குரியது. பழமையான கோயில் கோபுரங் கள் குன்றுபோல் உயர்ந்திருந்த காரணத்தால் கோவில் முதுகுன்றம் எனப்பெயர் பெற்றது— அப்பெயர் காலப்போக்கில் ஊரின் பெயராக வழங்கப்பட்டது என்று கொள்ளலாம்.

17. சங்ககாலத் தமிழகத்துச் சிற்றரசருள் வேளிர் என்றும் பெருவேளிர் என்றும் இருவகை யினர் இருந்தனர். நெடுஞ்செழியன் என்ற பாண்டியனைச் சேர சோழரும் ஐம்பெருவேளிரும் எதிர்த்துத் தோற்றனர். அத்தகு பெருவேளி ருள் ஒருவனது ஊர் பெருவேளூர் எனப்பட்டது போலும்! இது திருவாரூருக்கு வடமேற்கில் ஏறத்தாழ 8கல் தொலைவில் உள்ளது. சாதாரண வேள் ஒருவனது ஊர் வேளூர் எனப் பெயர் பெற் றது. அது கிழக்கில் இருந்த காரணத்தால் 'கீழ்வேளூர்' என்றழைக்கப்பட்டது. அஃது இக்காலத்தில் 'கீவளூர்' என்று பிழைபட வழங் கப்படுகின்றது. இருக்குவேளிர் மரபு ஒன்று சங்க காலத்தில் இருந்தது. இருக்குவேளிர் இருந்த ஊர், இருக்குவேளூர் எனப் பெயர் பெற்றது. அது பறவையின் தொடர்பால் 'புள் இருக்குவேளூர்' எனப் பிற்காலத்தில் பெயர் பெற்றது போலும். அதுவே இன்று வயித்தீசுவரன் கோவில் எனப் படுகிறது.

17. சம்பந்தர் காலத்தில் சீகாழிக்குக் கீழ் வரும் பன்னிரண்டு பெயர்களும் வழங்கப் பட்டன.

1. பிரமபுரம். 2. வேணுபுரம். 3. புகலி. 4. வெங்குரு. 5. தோணிபுரம். 6. பூந்தராய். 7. சிரபுரம். 8. புறவம். 9. சண்பை. 10. காழி. 11. கொச்சைவயம். 12. கழுமலம். சீகாழியில் வேணுபுரம் முதலிய கோயில்கள் இன்றும் இருக்கின்றன. இவை சீகாழி என்னும் நகரத் தின் பன்னிரண்டு பகுதிகளாக இருந்தவை என்று கொள்ளலாம். பிரமபுரம் என்பது பிராமணர் வாழ்ந்த நகரப் பகுதி ஆதலால் இப்பெயர் பெற்றது. வேணுபுரம் என்பது மூங்கிற்காடு இருந்து நகரமான பகுதியாகும்.

தலங்களின் பெயர் மாற்றம் :

அக்காலத்தில் (கி. பி. 7-ஆம் நூற்றுண்டு) வழங்கப்பட்ட சிவத்தலங்களின் பெயர்கள் பல இக்காலத்தில் மாறி வழங்கப்படுகின்றன. சான் றுகச் சிலவற்றைக் கீழே காண்க :

பழைய பெயர்கள்	இன்று வழங்கும் பெயர்கள்
கீழ்வேளூர்	கீவளூர்
புள் இருக்குவேளூர்	வயித்தீசுவரன் கோவில்
குடவாயில்	குடவாசல்
திருநணு	பவானி
அறையணி நல்லூர்	அரகண்ட நல்லூர்
திருக்கோளிலி	திருக்குவளை
திருப்பாச்சில்	திருவாசி
திரு ஆனைக்கா	திருவானைக்கோவில்

[இது சென்னை மயிலாப்பூர், கபாலீச்சுரத் தில் நடைபெற்ற திருமுறை விழாவில் பேசிய தன் சுருக்கம்—6-8-64].

நடைபெற்ற நிகழ்ச்சிகள் :

நயினர் கோவில் (நாகநாதர் கோவில்) திருமருதூர், இராமநாதபுரம் சமஸ்தானம். —ஆடிப்பூர உத்ஸவம்

ஶ்ரீ செங்கமலத்தாயார், மன்னுர்குடி—பிரும்மோத்ஸவம்.

,, ஆதிரெத்தினேஸ்வரர் ஆலயம், திருவாடானை, இராமநாதபுரம் சமஸ்தானம். —மகோத்ஸவம்

,, கமலாம்பிகை, திருவாரூர்—ஆடிப்பூர மகோத்ஸவம்.

,, தியாகராஜஸ்வாமி தேவஸ்தானம், திருவாரூர்—நம்பி ஆரூரர் திருவிழா.

,, வெட்டுடையார் காளியம்மன் கோயில், அரியக்குறிச்சி, கொல்லங்குடி —பூச்சொரி திருவிழா.

,, ஆதிரெத்தினேஸ்வரர் ஆலயம், திருவாடானை, இராமநாதபுரம் சமஸ்தானம் —ஆடிப்பூர உற்சவம்.

,, வாஞ்சிநாதர் திருக்கோயில், திருவாஞ்சியம்—ஆடிப்பெருவிழா.

,, சுப்பிரமணியஸ்வாமி தேவஸ்தானம், திருத்தணி—ஆடிக் கிருத்திகைத் திருவிழா.

,, சங்கரநாராயண சுவாமி தேவஸ்தானம், சங்கரநயினர் கோயில் —ஆடித்தபசு மண்டகப்படி.

,, திருவண்ணுமலை—ஶ்ரீ அருணகிரிநாதர் திருவிழா. (15-8-64)

,, லக்ஷ்மி நரஸிம்மஸ்வாமி தேவஸ்தானம், சோளிங்கபுரம் —திருப்பவித்ரோத்ஸவம்.

கீதாஸாரம்

இரண்டாவது அத்தியாயத்தின் ஸாரப்பொருள்

:—காரப்பங்காடு ஸ்ரீ வேங்கடாசார்ய சுவாமிகள், மயிலாப்பூர்.:—

(முன் இதழ்த் தொடர்ச்சி)

முதல் அத்தியாயமும் இரண்டாவது அத்தியாயத்தின் முதல் பத்து சுலோகங்களும், கீதா சாஸ்திரத்தின் முன்னுரை என்று கூறப்படுகின்றது. இம் முன்னுரையின் ஸாரப்பொருள்களான துரியோதனன் நிலை, அர்ஜ்ஜுனன் நிலை இவற்றைக் கண்டோம். இனி, **''நத்வே வாஹம் ஜாது நாஸம்...''** என்னும் சுலோகம் முதல் **''ப்ரஹ்ம நிர்வாணம் ருச்சதி''** என்னும் வரையில் உள்ள இரண்டாம் அத்தியாயத்தின் ஸாரப் பொருளைக் காண்போம்.

பரமாசாரியரான ஆளவந்தார் இரண்டாவது அத்தியாயத்தின் ஸாரப்பொருளைப் பின்வரும் சுலோகத்தில் அருளிச் செய்திருக்கிறார்.

''நித்யாத்மா ஸங்க கர்மேஹா
கோசரா ஸாங்க்ய யோகதீ:
த்விதீயே ஸ்த்திததீலக்ஷா ப்ரோக்தா
தந்மோஹ சாந்தயே''—என்று.

இச் சுலோகத்தில், **நித்ய ஆத்ம, அஸங்ககர்ம ஈஹா கோசரா, ஸ்த்தித தீலக்ஷா, ஸாங்க்ய யோகதீ:, தந்மோஹ சாந்தயே, த்விதீயே ப்ரோக்தா**—என்று சொற்களைச் சேர்த்துப் பொருள் கொள்ளுதல்வேண்டும்.

"என்றும் உள்ள ஜீவாத்மா, பற்றற்ற (தனக்குரிய) தருமானுஷ்டானம் (தருமத்தை செய்தல்)—இவ்விரண்டையும் விஷயமாகக் கொண்டுள்ளதும், ஜீவாத்மாவைக் கண்கூடாகக் காணுதலைப் பயனாக உடையதுமான ஜீவாத்மா, கருமயோகம் என்னும் இவ்விரண்டைப்பற்றிய அறிவானது, அந்த அர்ஜ்ஜுனன் அறியாமை ஒழிதற்காக இரண்டாம் அத்தியாயத்தில் உபதேசம் செய்யப்பெற்றுள்ளது'' என்பது இங்குப் பொருள்.

ஜீவாத்மா நித்தியன் என்பது: இச் சுலோகத்தில் கூறப்பெற்றிருக்கும் 'ஜீவாத்மா நித்தியன்' (ஜீவாத்மா என்றும் உள்ளவன்) என்பதைப் பற்றி, ஸ்ரீபார்த்தஸாரதி இவ்விரண்டாம் அத்தியாயத்தில் அருளிச்செய்துள்ள சுலோகங்களைத் தழுவி விளக்கிக் கூறுவோம் :

''நத்வே வாஹம் ஜாது நாஸம்
நத்வம் நேமே ஜநாதிபா:!
ந சைவ ந பவிஷ்யாம:
ஸர்வே வயமத: பரம்!!''

இச்சுலோகம் கீதாசாஸ்திரத்தின் முதல் சுலோகமாகும். இதன் கருத்து:

"எல்லாரையும் தூண்டி நடத்துபவனாகிய நான் நிகழும் இக்காலத்திற்கு முன்பு இருந்தேன்; (அர்ஜ்ஜுனா!) நீயும் இருந்தாய்; இவர்களும் இருந்தார்கள். நான், நீ, இவர்கள் ஆகிய எல்லோரும் வருங்காலத்திலும் இருக்கப் போகிறோம்'' என்பது. (இங்கு இறந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் என, காலம் மூன்றாய் இருக்க, நிகழ்காலத்தைக் கூறாது, இறந்த

காலம் வருங்காலம் இவ்விரண்டை மாத்திரம் கூறிப் பேசும் ஸ்ரீபார்த்தஸாரதியின் திருவுள்ளக் கருத்து யாதெனில், நிகழ் காலத்தை, இறந்த காலத்தில் அல்லது வருங்காலத்தில் அடக்கிவிடலாம் என்பது).

"எங்ஙனம் எல்லாரையும் தூண்டி நடத்தும் பரமாத்மாவாகிய நான் நித்தியனே (முக்காலத்திலும் இருப்பவனே), (இதில் சிறிதும் ஐயம் இல்லையல்லவா?) அங்ஙனமே, ஜீவாத்மாக்களாகிய நீங்களும் நித்தியர்கள். (என்றும் உள்ளவர்கள்). இவ்வுண்மையை முதன் முதலில் நீ அறிதல் நன்றாம்" என்பது இங்கு ஸாரப்பொருளாம்.

மேற்கூறிய **'நத்வேவாஹம்'** என்னும் சுலோகத்தில் அவசியம் அறிய வேண்டிய வேறொரு ஸாரப்பொருளும் உண்டும்.

ஆத்மபேதம்: பேரறிவாளனை பரம புருஷன், 'நான்' என்று தன்னையும், 'நீ' என்று அர்ஜ்ஜுனனையும், 'இவர்கள்' என்று ஏனையோரையும், 'அஹம்', 'த்வம்', 'இமே' என்னும் சொற்களால் கூறியிருக்கிறான் அல்லவா? இதனால், "பரமாத்மா வேறாக இருப்பவன்; ஜீவாத்மா வேறாக இருப்பவன். ஜீவாத்மாக்களுள் ஒவ்வொருவரும் வேறாக இருப்பவர்" என்னும் உண்மை நன்கு விளங்குகின்றதல்லவா?

சங்கை : மேற்கூறியவாறு, பரமாத்மாவிற்கும் ஜீவாத்மாவிற்கும் ஜீவாத்மாக்களுள் ஒருவரைக்குறித்து மற்றொருவருக்கும் வேற்றுமைஉண்டு என்று கூறுவதற்கு இடம் சிறிதும் இல்லை. நிலம், நீர், எரி, கால், விண் என்னும் ஐம்பொருள்களுள் ஒன்றாகிய விண் என்னும் ஆகாசம் என்றும் உள்ளதாயும், எங்கும் பரந்திருப்பதாயும், கூறு இன்றி இருப்பதாயும், ஒன்றாயும் இருக்கின்றதென, தார்க்கிகர் கூறுகின்றனர். இதனால், மேற்கூறிய ஆகாசம் ஒரு பொருளாகவே இருக்கின்றமையின், அதில் வேற்றுமை உண்டு எனக் கூறுவதற்கு இடம் சிறிதும் இல்லை. ஆயினும், குடத்திற்குள் இருக்கும் ஆகாசம் (இடைவெளி) கடாகாசம் என்றும் கூறப்பெறுகின்றன. மேற்கூறிய கடாகாசத்திற்கும் மடாகாசத்திற்கும் வேற்றுமை உண்டு. அன்றியும், (ஸமீபத்தில் உள்ள) இக்குடத்தில் இருக்கும் இடைவெளி தத் கடாகாசம் என்றும், (தூரத்தில் உள்ள) அக்குடத்தில் இருக்கும் இடைவெளி தத் கடாகாசம் என்றும் கூறப்பெறுகின்றன. இவ்விரு கடாகாசங்களுக்கும் வேற்றுமை உண்டு.

இவ் விஷயத்தை உதாரணமாகக் கொண்டு பின்வரும் உண்மையை உணருதல் வேண்டும்.

ஆத்மா என்னும் பொருள் என்றும் உள்ளதாயும், எங்கும் பரந்திருப்பதாயும், கூறு இன்றி இருப்பதாயும், ஒன்றாயும் இருக்கின்றதென வேதம் முதலிய நூல்கள் கூறுகின்றன. இதனால், ஆத்மா என்னும் பொருள் ஒன்றாகவே இருக்கின்றமையின் அதில் வேற்றுமை கூற, சிறிதும் இடம் இல்லை. ஆயினும், (உடலில் அமைந்துள்ள) மனம் என்னும் அந்த: கரணத்தோடுகூடிய (சைதன்யம் என்னும்) ஆத்மா ஜீவன் என்றும், க்ருஷ்ணன் என்னும் திருமேனியோடு கூடிய (சைதன்யம் என்னும்) ஆத்மா பரமாத்மாவென்றும் கூறப்பெறுகின்றன. மேற்கூறிய ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் கடாகாசத்திற்கும் மடாகாசத்திற்கும் உள்ள வேற்றுமை போன்று வேற்றுமை உண்டு.

(ஸமீபத்தில் இருக்கும்) இவ்வுடலில் உள்ள இம்மனத்தோடு கூடிய (சைதன்யம் என்னும்) ஆத்மா இந்த ஜீவன் என்றும், (தூரத்தில் இருக்கும்) அந்த உடலில் உள்ள அம்மனத்தோடு கூடியிருக்கும்

(சைதன்யம் என்னும்) ஆத்மா அந்த ஜீவன் என்றும் கூறப்பெறுகின்றன. மேற்கூறிய இந்த ஜீவனுக்கும் அந்த ஜீவனுக்கும் **'ஏதத்கடாகாசம்' 'தத்கடாகாசம்'** என்னும் இரு பொருள்களுக்குள்ள வேற்றுமை போன்று வேற்றுமை உண்டு.

பரமபுருஷன் மேற்கூறியவாறு, பரமாத்மா ஜீவாத்மா இவர்களுக்குள்ள வேற்றுமையையும், ஜீவாத்மாக்களுள் ஒருவரைக் குறித்து வேறொருவருக்குள்ள வேற்றுமையையும் திருவுள்ளத்தில் கொண்டு, **'அஹம்'** என்று தன்னையும், **'த்வம்'** என்று அர்ஜ்ஜுனனாகிற ஜீவனையும், **இமே** என்று ஏனையோரான ஜீவாத்மாக்களையும் குறித்துப் பேசியிருக்கிறான்.

வாயும் வயிறுமாயும் உள்ள குடமும், நான்கு சுவர்களும், இக்குடமும், அக்குடமும் அழிந்து விட்டால் ஆகாசம் ஒன்று தானே, மேற்கூறிய உதாரணத்தில் உண்மைப் பொருளாய்த் தேறுகின்றது. இது போன்று, இங்கு, உடலில் உள்ள மனம் என்னும் அந்தக் கரணமும், கண்ணன் திருமேனியும், இவ்வுடலில் உள்ள இம்மனமும், அவ்வுடலில் உள்ள அம்மனமும் அழிந்து போகும்போது சைதன்யம் என்னும் ஆத்மா ஒன்றுதானே உண்மையாய்த் தேறி நிற்கும்.

ஸமாதானம் : பரம புருஷன் மேற்கூறியவாறு வேற்றுமையைத் திருவுள்ளத்தில் கொண்டு, 'நான்' 'நீ' 'இவர்கள்' என்று, பரமாத்மாவையும், ஜீவாத்மாவையும், ஜீவாத்மாக்களையும் வெவ்வேறாக வைத்து அருளிச் செய்திருக்கிறான்.' என்று கூறுவதற்கு இந்தக் கீதையிலும் மற்ற வேதம் முதலிய நூல்களிலும் இடம் சிறிதும் இல்லை. பின்னை, எவ்வாறான வேற்றுமையை அருளிச் செய்திருக்கிறான் என்னில், கூறுவோம் : இரு தூண்களுக்குள் ஒன்றைக் குறித்து மற்றொன்றுக்கு வேற்றுமையை நாம் காண்கிறோம் அல்லவா ? இவ்வாறான வேற்றுமையையே திருவுள்ளத்தில் கொண்டு, பரம புருஷன், நான், நீ, இவர்கள் என அருளிச் செய்திருக்கிறான்—என்று கொள்ளுதலே மிகவும் பொருத்தமானதாகும். காரணம் பின்வருமாறு :—

'ஸர்க்கேபி நோப ஜாயந்தே ப்ரளயே நவ்யதந்திச' (14-2) என்னும் இவ்வாக்கியம், கீதையில் அருளிச் செய்யப் பெற்றுள்ளது. ஸ்ரீபார்த்தஸாரதி இவ்வாக்கியத்தில் 'வீடு பேறு பெற்றிருப்பவர் படைக்குங் காலத்தில் உண்டாகின்றனர் என்பதும், ஊழிக்காலத்தில் அழிகின்றனர் என்பதும் இல்லை' என்னும் உண்மையை வெளியிட்டிருக்கிறான். இங்கு ஜீவாத்மாக்களுக்குள்ள பன்மை அவசியம் அறியத்தக்கதாகும்.

(தொடரும்)

நடைபெற்ற நிகழ்ச்சிகள்

கஞ்சனூர்க் கற்பகாம்பாள் சமேத அக்னீசுவர சுவாமி கோயில்—அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம். (20-8-64)

தருமையாதீனம் ஆறுவது குருமகா சந்நிதானம்—குருமூர்த்த நூதன ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம். (21-8-64)

திருபுவன வரதராசப் பெருமாள் கோயில் கல்வெட்டுச் செய்திகள்

திரு. வை. சுந்தரேச வாண்டையார்

விசேட வழிபாடுகள்

வீரநாராயண விண்ணகர ஆள்வார் கோயிலில் எழுந்தருளியுள்ள வீற்றிருந்த பெருமாள், அழகிய மணவாளர், நரசிங்க ஆள்வார், இவர்களுக்கு மாசித் திருப் புனர்பூசம், ஜெயந்தி அஷ்டமி, மார்கழி ஏகாதசி, உத்தராயண, தட்சிணயனங் கள், ஐப்பசி சித்திரை விஷுக்கள்-இவை களில் விசேட வழிபாடுகள் நடத்துவதற் கும், திருவாய் மொழி விண்ணப்பஞ் செய் வதற்கும், ஸ்ரீ வைணவர்களைத் திருவமுது செய்விப்பதற்கும் ஆண்டு ஒன்றுக்கு நெல் 2475 கலங்கள் செலவிடப்பட்டுவந்தன.

வேதக் கல்லூரி

இத் திருக்கோயிலில் வேதக் கல்லூரி ஒன்று இருந்தது. அதில் இருக்கு வேதம் கற்பிக்க மூவர், யஜுர் வேதம் கற்பிக்க மூவர்; சந்தோக சாமம், தலவகார சாமம், அபூர்வம், வாஜசேனீயம், போதா யனீயம், சத்தியா சாத சூத்திரம், இவை களைக் கற்பிக்த ஒவ்வொருவரும், ஆகப் பன்னிரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட் டிருந்தனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு நெல் நான்கு கலங்கள் கொடுக்கப்பட்டு வந்தன. இவைகளன்றி வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம், பாரதம், இரா மாயணம், மனுசாஸ்திரம், வைகானச சாஸ்திரம் இவைகளை விரிவுரை இயற்ற ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆசிரியர் இருந்தனர்.

இக் கல்லூரியில் இருக்குவேதம் பயில அறுபது மாணவர்களும், யஜுர் வேதம் பயில அறுபது மாணவர்களும், சந்தோக சாமத்துக்கு இருபது மாணவர்களும், மற்ற சாஸ்திரங்களுக்கு ஐம்பது மாணவர்களும், ஆக 190 மாணவர்கள் இருந்தனர். இவர் களுக்கு நாள் ஒன்றுக்கு 11 கலம் 10 குறுணி 4 நாழி செலவாகி வந்தன. வேதாந்தம், வியாகரணம், ரூபாவதாரம் இவைகளைக் கற்க எழுபது மாணவர்கள் இருந்தனர். ஆசிரியர், மாணவர், இவர் கள் அனைவர்க்கும் ஆண்டு தோறும் 9,525 கலம் நெற்கள் வேண்டியிருந்தன.

இக் கோயிலில் விசேட வழிபாடுகள், வேதக் கல்லூரிச் செலவுகள் இவைகளின் பொருட்டு ஆண்டு ஒன்றிற்கு நெல் பன்னீ ராயிரம் கலங்கள் வேண்டியிருந்தன. இவைகளின் பொருட்டு சேனுதிபதி இரா சேந்திர சோழ மாவலி வாண ராஜர் பொருளுதவி செய்துள்ளனர். அரசரு டைய திருமேனி நன்ருக இருக்குமாறு இச் சேனுதிபதி இத் தருமத்தைச் செய் துள்ளனர். திரிபுவன மாதேவிச் சதுர் வேதி மங்கலத்தார் முதலாம் இராசாதி ராச சோழனின் முப்பதாம் ஆட்சியாண் டில் (அதாவது கி. பி. 1048 இல்) செம்பி யன் உம்பள நாட்டு வேளான் இக் கோயி லில் (வரதராசப் பெருமாள் கோயில்) கட் டியுள்ளதும் செம்பியன் உம்பள நாட்டு வேளார்த் திருமண்டபம் என்னும் பெய ருடையது மாகிய திருமண்டபத்தில் கூட் டம் கூடி ஆண்டு ஒன்றுக்கு 1200 கலம் வருமானமுள்ள 72 வேலி நிலங்களை வாங்கி, அவைகளுக்கு இராசேந்திர சோழ உத்தமாகிரம் என்னும் பெயரை வைத்துள்ளனர். இம் மூலதனத்தைக் கொண்டு மேற்குறித்த விசேட வழிபாடு, கல்லூரி இவைகள் நடைபெற்றுவந்தன.

(தொடரும்)

...NEMARA PUB...
4 - AUG 1965
...ADRAS



ஸ்ரீமந் நிகமாந்த மகா தேசிகன்
ஸ்ரீ நீலமேகர் சந்நிதி, தஞ்சை.

தொடர்ந்து தென்னுப்பிரிக்காவில் இலக்கியச் சமயச் சொற்பொழிவுகள் ஆற்றவும் தான் திருவாசகமணி கே. எம். பாலசுப்பிரமணியம் அந்தச் சபையினரால் அழைக்கப்பட்டிருந்தார்.

முதன் முதலாக 21—8—63 அன்று இரவு 8 மணிக்கு டர்பன் நகரமன்றக் கட்டிடத்தில் மூன்று தளங்களிலும் நிரம்பி வழிந்த 3000பேர் கொண்ட மக்களிடையே இந்தியாவின் உடையாகிய வேட்டி, ஜிப்பாவை அணிந்து கம்பீரமாக நின்று திருவாசகமணி ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பெருக்கு, அந்நாட்டினர் அதுவரை கேட்டிராததோர் அற்புதப் பேச்சாக அமைந்ததோடு அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்து மிகமிகப் பாராட்டுப் பெற்றது. பலநிறம்-பலசமயம் - பலதரம் - இவற்றின் பிரதிநிதிகள் நிறையப் பெற்ற அக் கூட்டத்தில் திருவாசகமணி ஆரவார வரவேற்பையும் அழியாப் புகழையும் பெற்றுத் திகழ்ந்தார்.

அதன் பின்னர், அவர் தமிழர்கள் பெருவாரியாகக் குடியிருக்கும் நெட்டால் மாகாணத்திலேதான் பற்பல சொற்பொழிவுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆற்றி வந்தார். அவர் பேசிய தமிழ்ப் பேச்சுக்களின் தலைப்புக்கள், திருவாசகம், தேவாரம், விநாயகர், தமிழ் இசை, பரத நாட்டியம், ஜீவகாருண்யம், சிவ-விஷ்ணு, நாலாயிர திவ்யப்பரபந்தம், சுப்பிரமணிய பாரதி, பழந் தமிழ் நாகரிகம், சைவ சித்தாந்தம், வடலூர் வள்ளல் அருட்பா, சிவக் காட்சி, தொண்டர் பெருமை, திருக்குறள் அறத்துப் பால், பொருட் பால், காமத்துப் பால், ஆழ்வார்களும் நாயன்மார்களும், பெரிய புராணம் முழுவதும், பெண்கள் பெருமை, கார்த்திகை தீபம், தீபாவளி, சிவராத்திரி, ஆருத்ரா, சரஸ்வதி பூஜை, பொங்கற் பண்டிகை, போன்றவையாகும்.

இதில் மிகவும் பாராட்டப்பட வேண்டியது மார்கழி மாதத்தில் திருவாசகமணி திருப்பாவை-திருஎம்பாவை என்னும் இரு பாவைகளைப் பற்றியும் டர்பன் வைத்திய நாதேஸ்வரர் ஆலயத்தில் நிகழ்த்திய முப்பது தமிழ்ப் பேருரைகளாகும். இவற்றை ஒலிப்பதிவு செய்து கொண்டுள்ள டர்பன் தமிழர்கள் இவ் விழாவினை ஒவ்வோராண்டும் இனிது நடாத்த இவைகள் பேருதவியாக இருக்கும்.

திருவாசகமணி பேசிய ஆங்கிலச் சொற்பொழிவுகளில் சமயச் சார்பில் முக்கியத்துவம் வாய்ந்தவைகளுள் கீழ்க் குறிக்கப் பெற்றவைகள் சிலவாகும்: திருக்கோயில் வழிபாடு, நடராஜர் தத்துவம், சிவலிங்க தத்துவம், ஓங்காரத்தின் உட்பொருள், சைவ சித்தாந்தம், உருவ வழிபாடு, சுவாமி விவேகானந்தர், சுவாமி பரமஹம்ஸ யோகானந்தர், யோக சாஸ்திரம், இறை வழிபாடு, வாழ்க்கையில் சமயம், வேதமும் சைவ சித்தாந்தமும், இந்து மதம் முதலியன.

இவைகளேயன்றி, கிறிஸ்துவர்கள் கூட்டத்தில் அவர்கள் வேதத்தையும் சைவத்தையும் ஒப்பிட்டுக் கிளேர்வுட் என்னும் இடத்தில் திருவாசகமணி பேசியபோது, அவற்றின் பொதுமை முதன்மைக் கருத்துகளைத் தெளிவுற எடுத்து விளக்கினர்.

டர்பன், ஜோகன்ஸ்பர்க், பிரிடோரியா ஆகிய மூன்று பெரும் நகரங்களிலும் முறையே மூன்று சொற்பொழிவுகள் "ஓர் இந்து காணும் குரான்" என்ற தலைப்பில் திருவாசகமணி பாலசுப்பிரமணியம் ஆற்றியுள்ளார். இம் மூன்றிற்கும் ஆயிரக் கணக்கான முஸ்லீம் சகோதர சகோதரிகளும் சில நூறு இந்துக்களும் விஜயம் செய்து சொற்பொழிவுகளைச் செவிமடுத்துப் பாராட்டிச் சென்றனர். ஆனல், இக் கூட்டங்களில் திருவாசகமணி பேசியது குரானைப் பற்றி மட்டுந் தானு? அதுதான் இல்லை. ஒவ்வொரு குரான் வாசகம் அல்லது தத்துவம் அதற்கு நேரானதும், அதே பொருளைத் தருவதும் ஆகிய தேவார, திருவாசக, பாடல்களையும், வேத, உபநிஷத வாக்கியங்களையும் தமிழிலே இசையுடன் பாடிக்காட்டி

விளக்கி, அவற்றின் எதிர்பாராத ஒற்றுமையைக் கண்டு அனைவரும் ஆச்சரியப்பட்டு ஆனந்தம் கொண்டு அங்கீகரிக்கும் வண்ணமும் திறம்படப் பேசியுள்ளார் திருவாசகமணி. இந்த செய்தற்கரிய தொண்டின் பயனாக அந்நாட்டின் இந்துக்கள் இஸ்லாமையும், இஸ்லாமியர் இந்து சமயத்தையும் சரியான முறையில் எடைபோட்டுப் புரிந்து கொண்டதோடு, ஒருவரையொருவர் நன்கு மதித்துப்போற்றவும் தலைப்பட்டுள்ளனர் என்பதுதான் நாம் ஈண்டுக் கருதற்பாலதாகும். பிரிடோரியா முஸ்லீம் கூட்டத்தின் தலைவர் திரு. ஆடம் உஸ்மான் என்பவர் இது பற்றி எழுதியுள்ளதைச் சற்று நோக்குவோம் :—

"பேராசிரியர் திரு. கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களின் தென்னாப்பிரிக்க வருகையானது, இந்துக்களுடைய உள்ளங்களை மட்டுமேயன்றி, முஸ்லிம்களுடைய உள்ளங்களையும் மகிழ்ந்து கிளர்ச்சியுறச் செய்தது. பல வேறுபட்ட மதத்தைச் சேர்ந்த மக்களிடையும், அவர் தம்முடைய விரிவுரைகளால், ஆர்வ நோக்கிலும் ஆற்றற் செயல்களிலும் முழு ஒற்றுமை உணர்ச்சியைத் தோன்றும்படி செய்திருக்கின்றார்.

"திருக்குரானும் முகம்மது நபியும்" என்னும் தலைப்பில், பிரிட்டோரியா என்னுமிடத்தில் அவர் நிகழ்த்திய சொற்பொழிவானது, உண்மையாகவே தலைசிறந்த தொன்றாக விளங்கியது. அதனைக் கேட்கும் அரிய பேறு பெற்றவர்கள் அனைவரும், இரண்டரை மணி நேரம் தம்மையும் மறந்திருந்து திளைத்து இன்புற்றனர். அவருடைய சொற்பொருட் சுவை நலம், ஆய்வுத்திறன், சொல்வன்மை, உண்மையுணர்வு, உயிர்த்துடிப்புள்ள நகைச்சுவை நயம் ஆகியவைகள், அனைவருள்ளங்களையும் கொள்ளை கொண்டு விட்டன. அவர் தம் வருகை இந்துக்கள், முஸ்லிம்கள் ஆகிய அனைவராலும் நன்றி கெழுமிய—மதிப்பு மிக்க—அன்புணர்ச்சிகளுடன் இங்கே என்றென்றும் மறவாமல் போற்றிப் பாராட்டப் பெற்று வரும்."

(1) " The visit of professor K. M. Balasubramaniam to South Africa not only stirred the hearts of Hindus but also of Muslims, ...By his lectures he has brought about a spirit of thorough unity in aspiration and achievement among the different religious groups. His lecture delivered in Pretoria on "the Holy Quaran and Muhammad" was truly a masterpiece, and those who were fortunate enough to have heard him were carried away for nearly two and a half hours by his facts, analysis, oratory, his sense of honesty and his pulsating sense of humour.........the memory of his visit will ever be cherished by Hindus and Muslims with feelings of respect and gratitude."

வெள்ளைக்காரரிடையே திருவாசகமணியவர்கள் சைவ சமயம் பற்றி ஆற்றிய ஆங்கிலச் சொற்பொழிவுகளின் விளைவினை எதிரொலிப்பதாகும், டர்பன் நகரில் யோகப் பயிற்சி ஆசிரியையாக விளங்கும் 'ஓம் தேவி' என்னும் ஐரோப்பிய மாதரசி, திருவாசக மணிக்கு எழுதிய கீழ்க்காணும் வாக்கியம்:

"தங்களுடையசொற்பொழிவினைக்கேட்டோர் அனைவருமே, களிதுளும்பி மகிழ்ந்து இன்புற்றனர். தங்களை இங்கேயே இன்னும் நெடுங்காலம் தங்கச் செய்து பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று நாங்கள் பெரிதும் விரும்புகின்றோம்"

(2) "All those who have heard you speak are thrilled with your lectures and your personality and we would like to keep you with us much longer."

திருவாசகமணி டிரான்ஸ்வால்மாகாணத்திலும் பல சொற்பொழிவுகள் செய்துள்ளார். அவர் பொதுவாகச் சென்று வணங்கியும் சொற்பொழி வாற்றியும் கண்ணுற்ற தென் ஆப்பிரிக்கத் திருக்கோயில்கள் கீழ்க் காண்பவையாகும்:

டர்பன் நகரம்: அம்கனி ரஸ்தா வைத்திய நாதேஸ்வரர் ஆலயம், அம்பிலோ ரஸ்தா அம்பலவாணேஸ்வரர் ஆலயம், கிளேர்வுட் சுப்பிரமணியர் ஆலயம், கேடோமேனர் முத்திலிங்கேஸ்வரர் ஆலயம், பீட்டார் மாரிட்ஸ்பர்க்: சிவசுப்பிரமணியர் கோயில், ஜோஹனஸ் பர்க்: மெல்ரோஸ்

திருக்கோயில்

(சென்னை அரசாங்க அறநிலைய ஆட்சித் துறையின்
திங்கள் வெளியீடு)

★

ஆறும் ஆண்டு

(1963 அக்டோபர் முதல் 1964 செப்டம்பர் வரை)

★

பதிப்பித்து வெளியிடுபவர் :

ஆணையர், அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 34.

★

அச்சிடுவோர் ;

பார்க்கர் அச்சகம்,
11, பந்தர் தெரு, சென்னை-1.

ஓம்

[திருக்கோயிலின் ஆறும் ஆண்டு இதழ்களில் வெளிவந்த கட்டுரைகள்]

ஆசிரியர் எழுதிய கட்டுரைகள்

(1963 அக்டோபர் முதல் 1964 செப்டம்பர் வரை)

	பக்கம்
அகப்பொருளில் அருட்பொருள்	102
அன்னையருட் பாத மலர்	1
அருள் நந்தி சிவாசாரியார்	228
ஆண்டாளின் சிறப்பு	271
உத்தரமேரூர்க் கல்வெட்டுக்கள்	300
எழுத்துநிலை மாற்றம்	57
குருஞான சம்பந்தர்	451
சண்டேசானுக்கிரக மூர்த்தம்	149
சாந்தலிங்க சுவாமிகள்	353
சிவஞான சித்தியார்	275
சிவப்பிரகாசரும் திருவண்ணாமலையும்	161
சிவனெனும் நாமம்	321
சிறப்புடைய புராணங்கள்	140
சூரியனார் கோயில்கள்	192
சென்னை மாவட்டக் கோயில் வரலாறு	526
சேக்கிழார் விளக்கும் செம்பொருள்	61
சேக்கிழாரும் சைவ சித்தாந்தமும்	549
சோமாஸ் கந்த மூர்த்தம்	49
தத்துவ ஞான வித்தகர்	415
தாயுமான சுவாமிகள்	561
திருக்களிற்றுப் படியார்	469
திருக்குறளும் திருநாவுக்கரசரும்	513
திருப்பாசுரம் (பொருள் விளக்கம்)	313
திருமுறை நூல்களின் சிறப்பு	468
திருமுறைகளின் பெருமை	459
திருவருட்பாவில் ஒரு திருப்பாடல்	373
திருவாசகத்தில் அறிவியல்	361
திருவுத்தர கோச மங்கை	401
திருவெழு கூற்றிருக்கை(பொருள் விளக்கம்)...	265
தெய்வப் புலவர் திருவள்ளுவர்	409
தென்னாப்பிரிக்காவில் திருவாசகமணி	601
நமது தாய்நாடு	271
நீ அமரன் ஆனாய்	457
நுண்பொருட் கருத்து விளக்கம்	609
படத் திறப்பு விழா	288
பழநி ஆண்டவர் சிறப்பு	225
பிட்சாடன மூர்த்தம்	425
வான்மீகி முனிவர் வாழ்ந்த இடம்	476
க்ஷேத்திர வெண்பா (பொருள் விளக்கம்)	520

பிற அறிஞர்கள் எழுதிய கட்டுரைகள்

அண்ணங்கராச்சார்ய சுவாமிகள்

தொண்டை நாட்டுத் திருப்பதி அனுபவம் 17, 89, 111, 169, 339, 377, 447, 488, 533.

அருணைவடிவேல் முதலியார், சி.

அன்பின் என்பு 96, 113, 173
ஒரு நம்பி 359, 383, 485.
யாதினும் இனியான் 590.

இராசமாணிக்கனார், மா.

செய்யூர்க் கல்வெட்டுக்கள் 36, 76, 133.
பரமேசுவர மங்கலம் கல்வெட்டுக்கள் 199, 294, 351.
ஆமாத்தூர்க் கல்வெட்டுக்கள் 404, 442.
சேக்கிழாரும் கல்வெட்டுக்களும் 479.
குன்றத்தூர்க் கல்வெட்டுக்கள் 544.

இராமச்சந்திரன் செட்டியார், கோ. மா.

மாமுகடி 43.
கூட்டு வழிபாடு 121.
வெள்ளையர் பாராட்டிய கோயில் 158.
வீர சைவ நிலையங்கள் 309.
நாச்சியார் கோயில் கல்வெட்டு 347.
திருவஞ்சைக் களம் 385.

இராமநாதன் செட்டியார் (பாலகவி)

சிவஞான போத உண்மை 14.
திருமூலர் பரம்பரை 79.
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே 203.
ஒன்றவன்தானே 250.
இன்னுயிர் மன்னும் புனிதன் 329.

சிவஞான தேசிக சுவாமிகள்

திருவைந்தெழுத்து 47.
ஒருவனா, ஒருருவனா? 109.
திருநாவுக்கரசர் தேவாரம் 155, 257, 281.
திருவேகம்பம் 389.

சுந்தரேச வாண்டையார், வை.

பொது நிலை 33.
எண்ணாயிரம் கல்வெட்டுக்கள் 93.
பன்னிரண்டாம் திருமுறை 131.
திருவொற்றியூர்க் கல்வெட்டு வரலாறு 213.
திருமுக்கூடல் கல்வெட்டுக்கள் 254.
வேதக் கல்லூரி 284.
செம்பியன் மாதேவியார் 444.
மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் 491.
திருபுவனை கல்வெட்டுகள் 527.

தாத்தாச்சாரியார், என். எஸ்.

அரங்கமும், அரங்கனும் 241.
திருமகளும், திருவருளும் 304.
அர்ச்சாவதாரம் 343.
ஆழ்வாரின் அடங்காக் காதல் 376.
பறவைகள் செய்த பாக்கியம் 481, 559.

பட்சி ராஜன், கே.

ஸ்ரீவைஷ்ணவ குரு பரம்பரை 22, 65, 129, 238, 333, 407, 439, 494, 529.

வச்சிரவேல் முதலியார், க.

சிவஞான போதம் 11, 137, 233, 287, 337, 381, 455-

வேங்கடாச்சாரிய சுவாமிகள், கா.

கீதாஸாரம் 393, 501, 538, 597-

ஸ்ரீநிவாசாச்சாரியார், வி. கே.

கண்ணுயிருப்பவன் கண்ணன் 28, 69, 117, 177.
கண்ணன் சொற்பொருள் ஆராய்ச்சி 291.
ஆழ்வார் அநுபவம் 357.

ஸ்ரீநிவாச ராகவாச்சாரியார், ஆர்.

ஸ்ரீவைஷ்ணவ ஆச்சாரியர்கள் 25, 73.

வேங்கட கிருஷ்ணமாச்சாரியார், கா. ப.

திருமலையப்பன் திருப்பள்ளி எழுச்சி 503, 542.

தனிக் கட்டுரைகள்

அவ்வை துரைசாமிப் பிள்ளை—ஞானக்காட்சி 196.
ஆணையாளர்—வித்வத்ஸதஸ் தொடக்கவுரை 97.
இராஜகோபாலன் கே. ஆர்.—சூரியன் 432.
ஊரன் ந. இரா.—திருத்தலத்து இறைவன் இறைவி திருப்பெயர்கள் 181.
கிருபானந்தவாரியார்—சொந்தம் 193.
சுப்பிரமணியப் பிள்ளை ஜி.—அதோமுக தரிசனம் 206.
துரையரங்கனர்—உய்திக்குரிய ஒரே வழி 246.
தேசிகப்பிள்ளை ஆர்.—ஸ்ரீவைஷ்ணவம் 259.
மீனட்சி சுந்தரனர் தெ. பொ.—அழகு வழிபாடு 135.
முதலமைச்சர்—தமிழ் நாட்டுத் திருக்கோயில்கள் 145.
வேங்கட ராமையா கே. எம்.—அயந்திகழ் நறுங்கொன்றைத் தெரியலான் 153.



ஸ்ரீ வைத்தீஸ்வரன் கோயிலில் சென்னை மாநில கவர்னர் அவர்கள்
(திருப்புள்ளிருக்கு வேளூர்)



மாயூரம் ஸ்ரீமாயூர நாதர் கோயிலில், சென்னை மாநில கவர்னர் அவர்கள்

திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி கோயிலில் சென்னை மாநில கவர்னர் ஸ்ரீ ஜெயசாமராஜ உடையார் அவர்கள் வரவேற்றுச் சிறப்பிக்கப் பெறுதல்.

CONNEMARA PUBLIC LIBRARY
4 - AUG 1965
MADRAS

சென்னை மயிலாப்பூர் ஸ்ரீ கபாலீசுவரர் கோயிலில், அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு. கே. காமராஜர் அவர்கள், தம் பிறந்த நாள் விழாவிற் சிறப்பிக்கப் பெறுதல் (15—7—64)

Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowment. (Admn.) Dept, Madras-34. Printed at Parker Press, 11, Bunder Street, Madras-1.